www.padippakam.com

ஜூலை '98 ம.க.இ.க. மாத இதழ் ரூ. 5/-

# புதிய கலாச்சாரம்






**அயோத்தி:**

**காங்கிரசின்** கரசேவை

**நீதிமன்றம்** மேற்பார்வை

**இந்து வெறியர்** கொண்டாட்டம்


சுவரொட்டிகள் பறிமுதல்

கோவையில் ம.க.இ.க. விளை கைது!

கோவையில்
'தேசத் துரோக' வழக்கில்
ம.க.இ.க. தோழர்கள்
கைது

கோவை அருகே


மேடையில் வன்முறை பேச்
3 தலைவர்கள் கைது!

படிப்பகம்

www.padippakam.com

# ஆணி இறங்காத ★ சுவர் ★

## - ஒரு அனுபவம் -



**வீ**ட்டின் முன்பகுதியை சலிப்பின்றி கவனத்தோடு கூட்டிக் கொண்டிருந்தார் அந்தப் பெண். நான் சந்திக்கச் சென்ற நண்பரின் குடும்பத் தலைவியாய் இருப்பார் என்ற என் குறிப்பு தப்பவில்லை. இனிதே வரவேற்று இருக்கை ஒன்றை எடுத்துப் போட்டு விட்டு, கணவரிடம் செய்தியைச் சொன்னவர் மீண்டும் விளக்குமாற்றுக்கு உயிர் கொடுத்தார்.

கூடத்திலிருந்து எட்டிப் பார்த்த குடும்பத் தலைவர், ''ஹலோ வாங்க வாங்க கொஞ்ச நேரம் உட்காருங்க வந்துடறேன், ரொம்ப நாளா ஒரு வேலை தள்ளிப் போயிட்டே இருக்கு. ஆபீஸ் வுட்டு வந்தா டயர்டா இருக்கா, செய்ய முடியறதில்லை, இன்னைக்கு முடிச்சிட்டு வந்துடறேன்'' என்றார்.

சுவரை அளவெடுப்பது போல பார்த்தார். ''டேய் அந்த ஸ்டூலைக் கொண்டு வா'', குரலெழுப்ப, அறையிலிருந்து வந்த பொடியன் வயிற்றை தாங்கலாய் எக்கிக் கொண்டு தூக்க முடியாமல் தூக்கி வந்து ஸ்டூலை வைத்தான். ''ஏய் அந்தச் சுத்தியலையும் கொண்டு வா, போ சீக்கிரம்.'' ஸ்டூலை ஒரு முறை அசைத்துப் பார்த்துக் கொண்டார். ''என்ன ஆடாம புடிச்சிப்பியா? வேணாம் போய் அம்மாவ கூப்புடு. எங்கடா அம்மா. போய் சீக்கிரம் கூப்பிடு''

பாத்திரத் தீவுக்கு மத்தியில் தனது குடும்பபாத்திரத்தை ஆற்றிக் கொண்டிருந்தவர் அவசர அவசரமாக கையைக் கழுவிக் கொண்டு கணவனிடம் வந்தார். ''இந்தா ஸ்டூலைப் புடி, டேய் நீ தள்ளி நின்னு நேரா இருக்கான்னு பாரு'' ஆணியின் தலையில் ரெண்டு மூணு முறை ஓங்கி வைத்தார் சுத்தியலை. ''எறங்குதா பாரு. வீட்ல உள்ளதுங்க மாதிரியே செவுரும் அழுத்தமா இருக்கு, ஏய்! பாரு அதுக்குள்ள ஸ்டூலை ஆடவுடுற. ஒழுங்கா புடி. ஆ! இந்தா புடி... புடி... சுத்தியலைப் புடிடா'' வேகமாகக் கைப் பெருவிரலை உதறிக் கொண்டவரை பரபரப்புடன் அணுகினார் மனைவி. ''வேலைய முடிச்சிட்டு நான் செய்ய மாட்டேன். வைங்க'' என்றார் ஆதரவாக. ''ஆமா கிழிச்சீங்க. வீட்டுக்கு வந்தா நிம்மதியா உட்கார முடியுதா பாரு. ஆணி அடிக்கக் கூட நாமதான் மாறடிக்கணும். மொதல்ல வளைஞ்ச ஆணியை நிமிறு'' சிறிது நேரம் பெருவிரலை வாய்க்குள் வைத்து எடுத்தார். ''என்ன முடிஞ்சுதா கொண்டா, வளையுது பாரு! செவுருதான் எதுக்குதுன்னா ஆணி அதுக்கு மேல''

''ஏய் நேரா இருக்கான்னு பாரு! அப்புறம் வேடிக்கை பார்க்கலாம்'' பையனின் முகத்தில் சலிப்பு பரவியிருந்தது. பாத்திரம் கழுவிய சோர்வில் துவண்டிருந்தவர் கணவரின் குரல் கேட்டு ஸ்டூலை இறுக்கிப் பிடித்தார். அப்படியும் இப்படியும் அசைந்த ஆணி ஒரு வழியாய் சுவரில் இறங்கியது. ''எவ்ளோ நாளா அடிக்க நெனக்கிறது. இன்னைக்குதான் முடிஞ்சது அப்பாடா!'' கழுத்தைப் பிடித்துக் கொண்டு இடது வலதாய் அசைந்து சொடுக்கிக் கொண்டார். ''பாருங்க, வீட்ல உள்ள பொம்பளைங்க இதெல்லாம் செய்யக் கூடாது? சும்மா வேஸ்ட் சார்'' என்றார் களைப்புடன்.

பின் பக்கம் திரும்பிப் பார்த்தேன், குடும்பத்தாரின் அழுக்குத் துணிகளை சோப்பு நுரையில் அலசிக் கொண்டிருந்தார் குடும்பத் தலைவி. ''அம்மா ஆயி போயிட்டேன்'' சிறிய மகளின் குரல் கேட்டு எழுந்து போனவர் ''ஏய் புள்ள கத்துதுல போயி மொதல்ல கால கழுவி வுடு, துணிய அப்புறம் கசக்கலாம்''

''லோ லோன்னு அலைஞ்சிட்டு வர்றோமா அசந்து போயிடுது சார்'' எதிரே அரிசியில் கல் பொறுக்கியபடி அடுத்த வேலையில் மூழ்கியிருந்தார் குடும்பத் தலைவி. வீடு கூட்டி, பாத்திரம் கழுவி, இடையில் கணவன், பிள்ளைகளுக்கு உதவி செய்து, கடைசியாகச் சோறு பொங்குவதில் அசராமல் இயங்கிக் கொண்டிருந்தன, அவரது கைகள். ஓய்ச்சலற்ற அவரது வேலைகளுக்கு முன்பு வெறுமனே உட்கார்ந்திருந்தது சங்கடமாய் பட்டது மனதுக்கு.

''என்ன சார் சைலன்ட்டா இருக்கீங்க. நீங்களும் டயர்டா ஆயிட்டீங்களா, நம்மள்ளாம் பொழுதன்னைக்கும் வெளியில அலையுறதே போதும், போதும்னு ஆயிடும் சார்! இதுல வீட்ல வந்தாலும் வேலை, சுத்தியலு கையில பட்டது எரியுது, சரியான கல்லு சுவரு சார். இந்தோ இருக்காங்க பாருங்க வீட்ல அழுத்தமா, பல தடவை சொன்னாதான் ஒரு வேலை நடக்கும். அது போல சுவரும் அழுத்தம் வீட்ல... ஹா... ஹா.. ஆணி எறங்காத சுவர் சார், ஏம்மா மொதல்ல டீய போடு. சார் வந்து எவ்ளோ நேரமாவுது.''

அரிசி களைந்த கையை உதறிக் கொண்டு அடுப்படிக்குள் நுழைந்தார் குடும்பத் தலைவி. ''வேணாம் சார் எனக்கு டீ குடிக்கிற பழக்கமில்லே'' குடும்பத் தலைவியின் அடுத்த கட்ட 'பணிவிடையை'த் தவிர்க்கும் பொருட்டு எழுந்து கொண்ட என் காதுகளில் ஆணியாய் இறங்கியது குடும்பத் தலைவரின் குரல் ''ஏம்மா நான் சார அனுப்பிட்டு வெளியே போயிட்டு வர்றேன். 'சும்மா' இருக்குற நேரத்துல அந்த வெள்ள சட்டையில பட்டன தைச்சி வை!''

• துரை. சண்முகம்



படிப்பகம்

www.padippakam.com

கலை இலக்கியம்
யாவும் மக்களுக்கே

• போர்: 15-16
• குரல்: 11-12,1-2
• ஏப்ரல் - ஜூலை '98

உள்நாடு:
தனி இதழ்: ரூ. 5.00
ஆண்டு சந்தா: ரூ. 60.00

வெளிநாடுகள்
(வான் அஞ்சலில்)
ஆண்டு சந்தா: US$ 9

படைப்புகள் அனுப்பவும்
தகவல்களுக்கும்

இரா. சீனிவாசன்,
3, நான்காவது தெரு,
செகந்நாதபுரம்,
சேத்துப்பட்டு,
சென்னை - 600 031.

# வரலாற்றுப் புரட்டலில் இந்துவெறிப் பாசிசம்

பாசிசத்தின் சித்தாந்த உருவாக்கமும் அடிப்படையும் வரலாற்றைத் திருத்திப் புரட்டுவதில்தான் துவங்குகிறது. ஆரிய இனப் பெருமை, செமிட்டிக் இன அழிப்பு, ஜெர்மானிய தேசியப் பேரரசு வெறி ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டிருந்த இட்லரின் நாசிசமும் இப்படித்தான் எழுந்தது. அதன் அடியொற்றியே ஆர்.எஸ். எஸ். - பாரதீய ஜனதா பாசிசத்தின் ''இந்து ராஷ்டிரம் - இந்துத்துவம்'' என்கிற சித்தாந்தமும் இந்தியத் துணைக்கண்டத்தின் வரலாற்றைத் திரித்துப் புரட்டுவதை அடிப்படையாகக் கொண்டே எழுப்பப்படுகிறது.

ஆர்.எஸ்.எஸ். கும்பலின் சித்தாந்த குருமார்களான கோல்வால்கரும் ஹெட்கேவாரும் உருவாக்கிய பாசிச வரலாற்றுக் கண்ணோட்டம் மூன்று முக்கிய அம்சங்களைக் கொண்டிருக்கின்றன. அவை: ''புகழ்மிக்க பண்டைய பாரதத்தின் நாகரீகம் - பண்பாட்டின் பிதாமகன்கள் ஆரியர்கள் - பார்ப்பனர்கள் என்று பெருமையடித்துக் கொள்வது; ''ஓங்கி வளர்ந்திருந்த பாரதம் மதவெறி பிடித்த கொலைகாரர்களான இசுலாமியர்களின் ஆக்கிரமிப்பினால் வீழ்ச்சியையும் இருளையும் சந்தித்தது என்று சாதிப்பது; ''இந்திய தேசியத்துக்கு எதிரிகள் ஏகாதிபத்திய காலனியவாதிகள் அல்ல, முஸ்லீம்கள்'' என்று கூறித் திசை திருப்புவது. இதை அடிப்படையாகக் கொண்ட இந்து பாசிச சித்தாந்தத்துக்கு அதிகாரபூர்வ, சட்டபூர்வ வரலாற்று ஆவணங்களை உருவாக்கும் பணியில் ஆட்சிக்கு வந்த குறுகிய காலத்திலேயே பாரதீய **ஜனதா அரசு இறங்கிவிட்டது.**

அணுகுண்டு வெடிப்பு, அயோத்தியில் கோவில் கட்டுவது ஆகியவற்றில் நாட்டின் அரசியல் கவனம் குவிந்திருக்கும் வேளையில் ஓசையின்றி வரலாற்றைத் திரித்துப் புரட்டும் வேலையை பாரதீய ஜனதா அரசு மிக விரைவாக நிறைவேற்றிக் கொண்டிருக்கிறது. இதற்கான முதல் வேலையாக இந்திய வரலாறு ஆராய்ச்சிக் குழுவை இந்துத்துவ விசுவாசிகளான வரலாறு ஆராய்ச்சியாளர்கள் 18 பேரைக் கொண்டு நிரப்பியிருக்கிறது. இவர்கள் அனைவரும் அயோத்தி பாபரி மசூதி வரலாறையே திரித்துப் புரட்டி அந்த இடம்தான் இராம ஜென்மபூமி என்றும், அங்கு இராமன் கோயில் பல நூற்றாண்டுகளாக இருந்ததாகவும் அதை இடித்துத்தான் பாபரி மசூதி கட்டப்பட்டதாகவும் போலி ஆதாரங்களை உருவாக்கியவர்கள். அவர்களில் நான்கு பேர் விசுவ இந்து பரிசத்தின் வரலாறு ஆய்வுக்குழு உறுப்பினர்களாக இருந்தவர்கள். இப்படிப்பட்டவர்களை இந்திய வரலாறு ஆராய்ச்சிக் குழுவின் உறுப்பினர்களாக நியமித்ததன் மூலம் இதுவரையில் நிலவி வந்த அதிகாரபூர்வ வரலாறைத் தனது இந்துத்துவ - வகுப்புவாத நோக்கில் திரித்து எழுதும் வேலை**யைத் துவக்கி இருக்கிறது ஆர்.எஸ்.எஸ் - பாரதீய ஜனதா அரசு.**

''வரலாற்று ஆய்வுகளுக்கு பகுத்தறிவு திசைவழி தருவதாகவும்'', ''எதார்த்த பூர்வமாகவும், அறிவியல்பூர்வமாகவும், வரலாறு எழுதப்படுவதை ஊக்குவிப்பதாகவும் இருக்க வேண்டும்'' என்று 1972-இல் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட ஆராய்ச்சிக் குழுவின் கொள்கை அறிக்கை கூறுகிறது. ஆனால் இப்பொழுதோ பகுத்தறிவு என்ற சொல்லை நீக்கிவிட்டு ''தேசிய'' என்ற சொல்லை அதன் கொள்கை அறிக்கையில் புகுத்தியிருக்கிறார்கள். ஆர்.எஸ்.எஸ். - பாரதீய ஜனதா கும்பலின் ''தேசியம்'' என்பது அதன் இந்துராஷ்டிரம் - இந்துத்துவம் தவிர வேறல்ல. அதாவது ''இந்து - இந்தி - இந்தியா'' என்பதுதான் அதன் தேசியம். இத்தகைய புரட்டின் மூலம் இந்தியாவின் வரலாறைத் திரித்து எழுதி, அதைப் பாடப் புத்தகங்களிலும் புகுத்தி இளம் நெஞ்சங்களில் நஞ்சிட்டு, அவற்றைக் காவி உடைப் பரிவாரங்களின் நிரந்தர ஓட்டு வங்கிகளாக மாற்றிக் கொள்வது ஆர்.எஸ்.எஸ். - பாரதீய ஜனதா கும்பலின் உடனடி நோக்கம். இதன் மூலம் இந்துத்துவ பாசித்துக்கான சமூக அடித்தளம் - ஆதரவைத் திரட்டிக் கொள்வது அதன் நீண்டகால நோக்கம்.

மிகவும் முன்னேறிய நாகரிகத்தைக் கொண்டிருந்த திராவிட இன மக்களே இந்தியத் துணைக் கண்டத்தின் பூர்வகுடி மக்கள் என்றும் அவர்களது நாகரிகம் மத்திய ஆசியாவிலிருந்து வந்த ஆரிய படையெடுப்பால் அழிக்கப்பட்டதென்பதும் மொகஞ்சதாரோ, ஹாரப்பா அகழ்வாராய்ச்சி ஆதாரங்கள் மூலமும், பன்னாட்டு வரலாற்று நிபுணர்களின் ஆராய்ச்சி முடிவுகளாலும் நிருபிக்கப்பட்டிருக்கிறது. பார்ப்பன, சனாதன, வருணாசிரம சாதிய அமைப்பை நிறுவி இந்தியச் சமுதாயத்தை இருண்ட தேக்க நிலைக்கு தள்ளியதும் அந்த ஆரிய இனம் தான் என்பதும், அதை

தொடர்ச்சி 11-ஆம் பக்கம்

படிப்பகம்

www.padippakam.com

"சட்டபூர்வமாக அமைக்கப்பட்டுள்ள அரசாங்கத்திற்கெதிராக வெறுப்பையும் விரோத உணர்ச்சியையும் தூண்டி விடுவதற்காக எழுத்தால், பேச்சால், ஜாடையால் அல்லது படத்தால் அல்லது வேறெந்த விதமாகவாவது காரியமாற்றுவது குற்றமாகும்''

இது இந்திய தண்டனைச் சட்டத்தின் குற்றப்பிரிவு 124-A. சட்டமொழியில் அல்லாமல் சாதாரண மொழியில் இதைப் புரிந்து கொண்டால், ஜெயலலிதாவை உடனே கைது செய்ய வேண்டும் என்று தி.மு.க.வினர் பொருள் கொள்ளலாம்.

"பேச்சாலோ, எழுத்தாலோ அல்லது சைகையாலோ, மத, இன, மொழி, சாதி சமய சம்பந்தமான விரோத உணர்ச்சகளைத் தூண்டிவிட முயற்சி செய்வது குற்றமாகும்''

இது இந்திய தண்டனைச் சட்டத்தின் குற்றப் பிரிவு 153-A. இதைச் சாதாரண மொழியில் அல்லாமல் சட்ட மொழியிலேயே புரிந்து கொண்டாலும் அத்வானி முதல் இராம. கோபாலன் வரை அனைவரும் ஏற்கெனவே உள்ளே தள்ளப்பட்டிருக்க வேண்டும் என்றுதான் புரிந்து கொள்ள முடியும்.

ஆனால் ஜெயலலிதாவுக்கும் அத்வானிக்கும் எதிராகப் பேசியவர்களைத்தான் உள்ளே தள்ளியிருக்கிறது தி.மு.க. அரசின் காவல்துறை.

"பா.ஜ.க. - ஜெயலலிதா பாசிசக் கூட்டணியை முறியடிப்போம்'' என்ற முழக்கத்தின் கீழ் கோவை கணபதியில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் உரையாற்றிய தோழர் மணிவண்ணன் (செயலர் ம.க.இ.க. கோவை), தோழர் காளியப்பன் (மாநில இணைச் செயலர், ம.க.இ.க), தோழர் ராசேந்திரன், (தொழிலாளர் பிரச்சாரக் குழு, கோவை), தோழர். ஜெயகாந்த் சிங், (பு.மா.இ.மு., விருதாச்சலம்) - ஆகிய நால்வர் மீதும் 124-A, 153-A ஆகிய குற்றப் பிரிவுகளின் கீழ் காவல்துறை வழக்கு தொடர்ந்துள்ளது. கூட்டம் முடிவதற்கு முன்னரே ஜெயகாந்த் சிங் கிளம்பிச் சென்று விட்டதால் மற்ற மூவரும் கூட்டம் முடிந்து அனைவரும் கலைந்து சென்றபின் கைது செய்யப்பட்டு கோவை மத்திய சிறையில் வைக்கப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் செய்த குற்றம் என்ன என்பது பற்றித் தனியே விளக்கத் தேவையில்லை. கூட்டம் முழுவதையும் மிகுந்த கடமையுணர்ச்சியுடன் குறிப்பெடுத்த காவல்துறையினர், பேச்சிலிருந்து தங்களுக்குத் தேவையான பகுதிகளை மட்டும் வெட்டி எடுத்து ஒரு முதல் தகவல் அறிக்கை தயார் செய்துள்ளனர். (பார்க்க: பெட்டிச் செய்தி)

தோழர்களைப் பிணையில் விடுவிக்க மாவட்ட அமர்வு நீதிமன்றம் மறுத்துவிட்டது. 'குற்றவாளி'களைப் பிணையில் விடுவிக்கக் கூடாது என்பதற்கு அரசு வழக்குறைஞர் இரண்டு காரணங்களைச் சொன்னார். 1. எதிரிகள் நான்கு பேரில் ஒருவரான ஜெயகாந்த் சிங் தப்பித்துத் தலைமறைவாகி விட்டார். எனவே அவரைப் பிடிக்கும் வரை இவர்களை விடக்கூடாது. 2. இவர்களை வெளியே விட்டால் மீண்டும் கூட்டங்களில் இதேபோலப் பேசுவார்கள்.

"ஜெயகாந்த் சிங் முன்னமேயே ஊருக்குப் போய்விட்டதால் அவரைக் கைது செய்ய முடியவில்லை'' என்று முதல் தகவல் அறிக்கையிலேயே




சொல்லப்பட்டிருந்தும், அதை வழக்கிறஞர் விளக்கியும் நீதிபதிக்கு விளங்கவில்லை போலும்! அரசு தரப்பின் கூற்றை ஏற்றுக் கொண்டார்.

வெளியே விட்டால் மீண்டும் பேசுவார்கள்தான். அதற்காக எத்தனை மாதங்கள் சிறை வைப்பது? இதென்ன தடுப்புக் காவலா? புலன் விசாரணை எதுவுமே செய்யத் தேவையில்லாத வழக்கிற்காக எதற்கு குற்றம் சாட்டப்பட்டவர்களைச் சிறைவைக்க வேண்டும்? போன்ற மிகச் சாதாரணமான கேள்விகள் கூட அமர்வு நீதிமன்ற நீதிபதிக்குத் தோன்றவில்லை. பிணை மறுக்கப்பட்டுவிட்டது. பிணைக்காக உயர் நீதி மன்றத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இதற்கிடையில் கைதிகளைக் கண்ணால் பார்க்காமலேயே, அவர்களைச் சிறையிலிருந்து கொண்டு வராமலேயே கடந்த 15.6.98 அன்று காவல் நீட்டிப்பு செய்திருக்கிறார் கோவை மாஜிஸ்டிரேட்.

இராஜத்துரோகம் (124-A) என்று காலாவதியாகிப் போன பிரட்டிஷ் சாம்ராச்சியத்தின் சட்டம்; காலாவதியாகிப் போன அந்தச் சட்டத்தையே முறைகேடாகப் பயன்படுத்துகிறது காவல்துறை; அந்த முறைகேட்டை ஆதரிப்பதுடன் தானும் தன் பங்குக்கு சட்ட விரோதமாக நடந்து கொள்கிறது நீதிமன்றம்.

ம.க.இ.க. தோழர்கள் மீது இராஜத்துரோக வழக்கு போடப்படுவதொன்றும் புதிதல்ல; ஜெ. ஆட்சியில் டஜன் கணக்கில் போடப்பட்டன. ஆனால் தி.மு.க. ஆட்சியில் இவ்வழக்குகள் போடப்படும் சந்தர்ப்பம்தான் விநோதமானது.

1989-இல் ஆட்சிக் கலைப்பு மிரட்டல்கள் டெல்லியிலிருந்து வரத் தொடங்கியவுடனே, ஒருவருடம் முன்னால் ஈரோடு வட்டாரத்தில் நடந்த விவசாயிகள் விடுதலை முன்னணியின் மாநாட்டில் பேசிய 5 தோழர்கள் மீது இரண்டு இராஜத்துரோக வழக்கு தொடுத்தது தி.மு.க. அரசு. காலையில் மாநாட்டில் பேசியதற்கு ஒரு இராஜத்துரோகம்; இரவு பொதுக் கூட்டத்தில் பேசியதற்கு ஒரு இராஜத் துரோகம். சில ஆண்டுகளுக்குப் பின் நடந்த விசாரணையில் அந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது.

ஆட்சிக் கலைப்பு பீதியில் புலிகள், ஈழ ஆதரவாளர்கள், ம.க.இ.க. தோழர்கள் ஆகியோர் மீது வழக்குகளைப் போட்டு சிறை வைத்துக் கணக்கு காட்ட முயன்றும் பயனில்லை. ஆட்சி கலைக்கப்பட்டது.

இப்போது மீண்டும் ஆட்சிக் கலைப்பு அபாயம்; மீண்டும் வழக்குகள்; புதிய தடா சட்டம்! குடிமக்களின் ஜனநாயக உரிமையைப் பறிப்பதன் மூலம் தன் ஆட்சியுரிமையைக் காப்பாற்றிக் கொள்ள முயல்கிறது தி.மு.க. அரசு.

எனினும் கலைப்புப் பட்டியலில் மேற்கு வங்கம், பீகார் போன்ற மாநிலங்களும் இருப்பதாலும், நாடாளுமன்றத்தில் பா.ஜ.க.வின் இரண்டுங்கெட்டான் நிலை காரணமாகவும் தி.மு.க. லேசாக எதிர்ப்புக் குரலும் கொடுக்கிறது.

சட்டப் பிரிவு-356-இன் ஜனநாயக விரோதத் தன்மை குறித்து இந்து நாளேட்டில் அமைச்சர் ஆலடி அருணா கட்டுரையொன்று எழுதியிருக்கிறார்.

"சட்டப் பிரிவு-356 என்பது பிரிட்டிஷ் காலனிய ஆட்சியாளர்களின் கண்டுபிடிப்பு; சட்டம் - ஒழுங்கைக் கலைப்பதற்கு கர்வனர் ஜெனரலுக்கு அதிகாரம் அளித்த இச்சட்டத்தை அன்று காங்கிரஸ் எதிர்த்தது; சுதந்திர இந்தியாவின் அரசியல் சாச



படிப்பகம்

www.padippakam.com

## ம.க.இ.க. தோழர்கள் கைது

# பாரதீய ஜனதாவுக்கு பல்லக்கு தூக்கும் கருணாநிதி அரசு.

னத்தில் இந்த சட்டப் பிரிவு இடம் பெறாது என வாக்குறுதி தந்தது; ஆனால் அதற்கு நேர்மாறாக நடந்து கொண்டது'' என்று காங்கிரசைத் தோலுரிக்கிறார் அமைச்சர்.

முற்றிலும் உண்மை. ஆனால் இன்னொரு உண்மையும் இருக்கிறதே! மாட்சிமை தங்கிய மன்னர் பிரானின் ஆட்சிக்குத் துரோகம் செய்யும் விடுதலைப் போராட்டக்காரர்களை வேட்டையாடக் காலனி ஆட்சியாளர்களால் கொண்டு வரப்பட்டதுதான் குற்றப்பிரிவு 124-A என்கிற இராஜத் துரோகச் சட்டம். அதை தி.மு.க. பயன்படுத்தலாமா? மதக் கலவரங்களைத் தூண்டுவதையே தனது முழு நேரப் பணியாகக் கொண்டு செயல்படும் இராம. கோபாலன் மீது பாயாத 153-A எனும் குற்றப் பிரிவு ம.க.இ.க. பேச்சாளர்களுக்கெதிராக பயன்படுத்தப்படுவது அயோக்கியத்தனமில்லையா?

''தேர்ந்தெடுத்த பிரதிநிதிகளை திருப்பி அழைக்கும் உரிமை மக்களுக்கு இல்லை. மக்களுக்கே இல்லாத அந்த உரிமையை மைய அரசுக்கு வழங்கும் சட்டப் பிரிவு 356 ஜனநாயக விரோதமானதல்லவா? தேர்ந்தெடுக்கப்பட்ட அரசை நீக்க விரும்பகிறவர்கள் மக்களிடம் அல்லவா செல்ல வேண்டும். அதை விடுத்து டெல்லியின் அதிகாரத் தாழ்வாரங்களில் அலைகிறார்கள் என்றால் அதற்குக் காரணம் இந்தச் சட்டப் பிரிவுதானே, இதை ஒழிக்க வேண்டாமா?''என்று 'இந்து' கட்டுரையில் கேள்வி எழுப்புகிறார் அமைச்சர்.

ஆம். நீக்க வேண்டும். இந்தச் சட்டப்பிரிவை மட்டுமல்ல, எல்லா சட்டப் பிரிவுகளையும் நீக்க வேண்டும். அதாவது இந்த அரசமைப்பையே நீக்க வேண்டும்; ஜனநாயக விரோத மோசடிகளும் வார்த்தை ஜாலங்களும் நிறைந்த உலகிலேயே 'மிகப்பெரிய' இந்த பித்தலாட்டத்தை நீக்க வேண்டும்.

இதைத்தான் கோவை பொதுக் கூட்டத்தில் பேச்சாளர்கள் பேசினார்கள். ஒரு சட்டப் பிரிவை நீக்க வேண்டும் என்று பேச மந்திரிக்கு உரிமை உண்டென்றால் ஒட்டு மொத்த சட்டத் தொகுப்பையும் நீக்க வேண்டும் என்று பேச மக்களுக்கு உரிமை கிடையாதா?

''தேர்ந்தெடுக்கப்பட்ட அரசை வீழ்த்த மக்களிடம் செல்ல வேண்டும். மைய அரசிடம் ஏன் செல்கிறார்கள்?'' என்று கேட்கும் அமைச்சரின் அரசு மக்களிடம் செல்பவர்களைப் பிடித்துச் சிறை வைக்கிறது. மைய அரசிடம் செல்பவர்களுக்கு மறுப்பறிக்கை கொடுக்கிறது! எத்தகைய கேலிக் கூத்து!

''தலைப்பாகை கட்டியிருந்த வெற்றுடம்புக்காரர் ஒருவர் கையில் துப்பாக்கி தாங்கிய விவசாயியை போலத் தோற்றமளிப்பவரின் உருவம் மேடையின் பின்புறத் திரையில் அமைக்கப்பட்டிருந்தது. இவை சட்டப்படி அமைந்த இந்திய அரசுக்கு எதிராக வெறுப்பையும் அவமதிப்பையும் ஏற்படுத்தக் கூடியனவாயும், கலகத்தைத் தூண்டுவனவாயும் இருந்தன'' என்கிறது முதல் தகவல் அறிக்கை. இது இராஜத் துரோகத்திற்கு மிக முக்கிய ஆதாரம்.

தலையில் கிரீடம் வைத்த வெற்றுடம்புக்காரர் ஒருவர் கைகளில் ஈட்டி, அரிவாள், கோடரி போன்ற பயங்கர ஆயுதங்களும் ஏ.கே. 47, கையெறி குண்டு போன்ற அதி நவீன ஆயுதங்களும் தாங்கி சென்னை வீதிகளில் ஆண்டு தோறும் உலா வருகிறாரே, அந்த விநாயகர் பொம்மையை அமைத்து, தேரில் வைத்து இழுத்து வருபவர்கள் மீது என்ன நடவடிக்கை? விவசாயிகளின் கையில் உள்ள துப்பாக்கி கலகத்தைத் தூண்டுகிறது என்றால், இராம. கோபாலனின் விநாயகர் வைத்திருக்கும் எறிகுண்டு சமாதானத்தைப் பரப்புகிறதா? விவசாயி ஓவியத்தின் கையில் ஆயுதமிருந்தால் தேசத் துரோகம்; விநாயகர் சிலை கையில் ஆயுதம் இருந்தால் தேச பக்தியா?

கருத்துச் சுதந்திரத்தின் கழுத்தில் கத்தியை வைப்பதற்கும், அரசின் மீதான விமரிசனங்களைத் தடுக்க குரல் வளையை நெறிப்பதற்கும் இராஜத் துரோக வழக்கு போடப்படுவதை பல உயர்நீதி மன்றங்களும் உச்சநீதி மன்றங்களும் கண்டனம் செய்துள்ளன. எனினும் காவல்துறை இச்சட்டத்தை முறைகேடாகப் பயன்படுத்தத் தயங்குவதே இல்லை. இந்தச் சூழ்நிலையில் தான் தி.மு.க. அரசு தடா சட்டத்தையும் உயிர்ப்பித்திருக்கிறது.

''இச்சட்டம் உறையில் இருக்கும் வாள்'' என்றார் அமைச்சர். உறையில் இருக்கும் வாளை காவல்துறை முதுகு சொரியப் பயன்படுத்துவதில்லை. 356-வது சட்டப்பிரிவு கூட உறையில் இருக்கும் வாள் என்றுதான் வருணிக்கிறார் அத்வானி. கழுத்து தன்னுடையது என்பதால் அச்சட்டப்பிரிவை நீக்க வேண்டும் என்று கூறும் தி.மு.க. அரசு தடாவுக்கு அந்த நியாயத்தைப் பொருத்துவதில்லை.

எந்த விதத்திலும் இந்தக் கொடுங்கோல் சட்டத்தை நியாயப்படுத்த முடியாது என்ற நிலை ஏற்பட்டபின் ''கனத்த இதயத்துடன்தான் இச்சட்டத்தைக் கொண்டு வருகிறோம்'' என்றார் அமைச்சர்.

அதென்னவோ உண்மைதான். காளியப்பன் முதலான தோழர்களைக் கைது செய்த காவல்துறை அதிகாரிகளும் கனத்த இதயத்துடன் தான் கைது செய்தனர். ஒரு வேளை தி.மு.க. ஆட்சி கலைக்கப்பட்டுவிட்டால் பிரதமர் வாஜ்பாயி முதல்வரிடம் தொலைபேசியில் இப்படிச் சொல்வார்: ''கனத்த இதயத்துடன்தான் இந்த உத்தரவில் நான் கையெழுத்திட்டேன்!''

• மருதையன்

> ''புதிய தடாச் சட்டம் உறையில் இருக்கும் வாள்'' என்கிறார் அமைச்சர் ஆலடி அருணா. உறையில் இருக்கும் வாளை காவல்துறை முதுகு சொரியப் பயன்படுத்துவதில்லை. 356-வது சட்டப்பிரிவு கூட உறையில் இருக்கும் வாள் என்றுதான் வருணிக்கிறார் அத்வானி. கழுத்து தன்னுடையது என்பதால் அச்சட்டப்பிரிவை நீக்க வேண்டும் என்று கூறும் தி.மு.க. அரசு தடாவுக்கு அந்த நியாயத்தைப் பொருத்துவதில்லை.''

படிப்பகம்

www.padippakam.com

# கும்பமேளா:

# கும்பிட கங்கை குடிக்க கொக்கோ கோலா

வெகு வேகமாக வந்த மாருதி கார் ஒன்று பெட்டிக் கடை முன்னால் 'கிறீச்சிட்டு நிற்கிறது. காரின் கண்ணாடிக் கதவுகள் இறங்குகின்றன. ஒரு கை மட்டும் வெளியே நீண்டு 'கோக்' என்கிறது. சில கணங்களில் காரிலிருந்து நீண்ட கையில் கொக்கோ கோலோ பொங்கி வழிகிறது.

இது கொக்கோ கோலாவின் விளம்பரம் அல்ல; கும்பமேளாவில் ஒரு காட்சி. காருக்குள்ளிருந்து நீண்ட கைக்கு உரியவர் ஒரு சாமியார். நெற்றியில் பட்டை, கழுத்தில் கொட்டை, காவிச் சட்டை.



ஆன்மீக தாகத்துக்கு கும்பமேளா; பௌதீக தாகத்துக்கு கொக்கோ கோலா.

பனிரெண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை ஹரித்துவாரில் நடைபெறும் மகா கும்பமேளாவில் திரும்பிய இடமெல்லாம் இத்தகைய காட்சிகள்தான் என்று கேலியாக எழுதுகின்றன பத்திரிகைகள்.

ஆட்சிக்கு வந்திருக்கும் தருணத்தில் மகா கும்பமேளாவும் சேர்த்து வந்திருப்பது பாரதிய ஜனதாக்காரர்களைப் பொறுத்தவரை நல்ல சகுனம் தான் என்றாலும், கும்பமேளா குறித்து முதன் முதலாக வெளிவந்த செய்தியென்னவோ அபசகுனமாக இருந்தது.

யார் எந்தப் படித்துறையில் குளிப்பது என்பதில் ஏற்பட்ட தகராறில் சாமியார்களுக்கிடையே அடிதடி; ரத்தக் காயம். தடுக்க வந்த போலீசுக்கும் அடி. ஏற்கனவே அரை அம்மணமாக இருந்த சாதுக்கள் பலர் முழு அம்மணமானார்கள்.

இந்த அம்மணச் சாமியார்கள், ஆயிரக்கணக்கான பக்தகோடிகள் இவர்களைச் சமாளித்து, கும்பமேளாவை நடத்தி முடிப்பதற்காக உத்தரப் பிரதேச அரசு 100 கோடி ரூபாய் செலவிடுகிறது. விழாவிற்கு மொத்தம் ஒரு கோடி பக்தர்கள் வருவார்கள் என்கிறார் கும்பமேளாவின் நிர்வாக அதிகாரி.

"ஒரு கோடி வாடிக்கையாளர்கள்!" என்று கூவுகிறார் கொக்கோ கோலாவின் நிர்வாகி. முன்பணம் வாங்காமலேயே பெட்டிக் கடைகளில் சரக்கைக் குவிக்கிறது கொக்கோ கோலா.

போட்டியாளரான பெப்சி கோலாவோ பக்த கோடிகளின் முதுகைத்தவிர மொத்த நகரத்துக்கும் வெள்ளை அடித்து விளம்பரம் எழுதி விட்டது.

ஹரித்துவார் நகருக்குச் செல்லும் வழியெங்கும் சினிமா செட்டிங் போல குட்டிக் கிராமங்களும், அந்தக் கிராமங்களில் கொக்கோ கோலா ஆசிரமங்களும் உருவாக்கப்பட்டிருக்கின்றன.

கோல்கேட் பற்பசைக் கம்பெனி பக்தர்களுக்காக பெரிய திரையில் தொலைக்காட்சி இராமாயணத்தை வழங்குகிறது.

மொத்தத்தில் இந்து ராஷ்டிரத்தின் மாபெரும் பண்டிகையான மகா கும்பமேளாவைப் பக்தர்களுக்கு வழங்குவோர்: அமெரிக்க விதேசி நிறுவனங்களாகன கோக், பெப்சி, கோல்கேட்... இன்ன பிறர். இன்ன பிறர்...

என்ன இருந்தாலும் கொக்கோ கோலாவுக்கும் கும்பமேளாவுக்கும் பல அடிப்படை ஒற்றுமைகள் இருக்கத்தான் செய்கின்றன. கும்பமேளா ஆன்மீக தாகத்துக்கு; கொக்கோ கோலா பவுதீக தாகத்துக்கு. கும்பமேளாவின் கவர்ச்சி என்பது பார்ப்பனக் கும்பல் உருவாக்கிய புராணப் புரட்டு; கொக்கோ கோலாவின் கவர்ச்சி பன்னாட்டு நிறுவனங்களின் விளம்பரப் புரட்டு. அது பக்தி; இது ஒரு வகை போதை. பனிரண்டு ஆண்டுக்கொருமுறை மகா மேளா; ஐந்து பாட்டில் சேர்ந்தால் மகா கோலா.

இப்படி எல்லாம் பொருந்தி வந்தாலும் பாரதிய ஜனதாவின் 'கொள்கை' மட்டும் நடுவில் லேசாக இடிக்கிறது. பொருளாதார தேசியத்தை வலியுறுத்தும் 'சுதேசி' கொள்கையை தனது உயிர் மூச்சாகக் கொண்டிருக்கும் கட்சி, கலாச்சார தேசியத்தின் எடுத்துக்காட்டாகத் திகழும் கும்பமேளா போன்ற ஹிந்து விழாக்களில் அதுவும் ஹரித்துவார் போன்ற ஹிந்துக்களுக்கே உரிய புனிதத் தலங்களில் கோக், பெப்சி போன்ற மிலேச்ச நிறுவனங்களை நுழையக் கூடாது என்று சொல்லியிருக்கலாம்.

இப்படியே போனால் இன்று இடுப்பில் காவி, கையில் கமண்டலம், வாயில் கோக் என்று திரியும் சாமியார்கள், நாளை இடுப்பில் ஜீன்ஸ், கழுத்தில் கொட்டை, வாயில் கோக் என்று மாறி விட்டால் எம்.டி.வி. யின் நடன நட்சத்திரங்களையும் ஹிந்து ரிஷிகளையும் வித்தியாசப்படுத்தி புரிந்து கொள்வது பெரும் பாடாகிவிடும் என்பதை முரளி மனோகர் ஜோஷி கவனத்தில் கொள்ள வேண்டும்.

கோவையில் 20 முஸ்லீம்களைக் கொலை செய்து, கோடிக்கணக்கில் அவர்களது சொத்துக்களைக் கொள்ளையடித்து கலாச்சார தேசியம் குறித்த தங்களது வாக்குறுதியை தேர்தலுக்கு முன்னாலேயே நிறைவேற்றியவர்கள், பொருளாதார தேசியம்

www.padippakam.com

குறித்த தங்கள் வாக்குறுதியை அதே 'வெறி'யோடு நிறைவேற்றுவார்கள் என்று எதிர்பார்த்தோம்.

ப்பர் மசூதியைப் போலவே உலக வர்த்தகக் கழகத்தின் டெல்லி அலுவலகம் இடித்துத் தள்ளப்படும், பன்னாட்டு நிறுவன அதிகாரிகள் நாலு பேராவது வெட்டப்படுவார்கள் என்று எண்ணி நடுங்கிக் கொண்டிருந்தோம்.

கம்ப்யூட்டர் சிப்ஸ் போன்ற உயர் தொழில் நுட்பங்களை இறக்குமதி செய்யத்தான் அனுமதிப்போமே தவிர உருளைக்கிழங்கு சிப்ஸ் தயாரிப்பதற்கெல்லாம் வெளிநாட்டு நிறுவனங்களை விடமாட்டோம்; காலை ஒடித்து விடுவோம் என்று தெளிவாகச் சொல்லியிருந்தார் ஜோஷி.

ஆனால் கும்பமேளாவே கோலா மேளாவாகி விட்டது என்று வழித்துக் கொண்டு சிரிக்கின்றன பத்திரிகைகள். போதாததற்குக் கும்பமேளாவிற்கு

பிறகு ஏன் இந்த சுதேசி சவடால்? 'சும்மா ஒரு விறுவிறுப்புக்குத்தான்' என்கிறார் பிரெஞ்சு அரசின் பொருளாதார ஆலோசகர்.

"அவர்களுக்கு அதிகார ஆசை. அதற்காகத்தான் முஸ்லீம்களுக்கு எதிராகவும், பாகிஸ்தானுக்கு எதிராகவும் கத்துகிறார்கள். வேறொன்றும் கிடையாது. பிரெஞ்சு நிறுவனங்களுக்கு முழு ஒத்துழைப்பு தருவதாக அவர்கள் வாக்குறுதி தந்திருக்கிறார்கள். என்னைக் கேட்டால் தாராளமயக் கொள்கையில் காங்கிரசை விட உறுதியானவர்கள் இவர்கள்தான் என்று அடித்துச் சொல்வேன்" என்று ஒரு பேட்டியில் சொல்லிச் சிரிக்கிறார் அந்த பிரெஞ்சு பொருளாதார வல்லுநர்.

காட் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டு புதிய பொருளாதாரக் கொள்கையை நரசிம்மராவ் அறிமுகப்படுத்தியபோது "எங்கள் பொருளாதாரக் கொள்கை முழக்கத்தை நரசிம்மராவ் திருடிவிட்டார்" என்றார்கள் பாரதிய ஜனதா தலைவர்கள்.

**"இப்படியே போனால் இன்று இடுப்பில் காவி, கையில் கமண்டலம், வாயில் கோக் என்று திரியும் சாமியார்கள், நாளை இடுப்பில் ஜீன்ஸ், கழுத்தில் கொட்டை, வாயில் கோக் என்று மாறிவிட்டால் எம்.டி.வி.யின் நடன நட்சத்திரங்களையும், ஹிந்து ரிஷிகளையும் வித்தியாசப்படுத்தி புரிந்து கொள்வது பெரும்பாடாகி விடும் என்பதை முரளிமனோகர் ஜோஷி கவனத்தில் கொள்ள வேண்டும்.**

முதல் நாள் ஏப்ரல் - 13 அன்று மத்திய அமைச்சர் ஹெக்டே ஒரு அறிவிப்பு வெளியிட்டார்.

"இறக்குமதிக் கொள்கை தாராளமயம், மேலும் 320 பொருட்களுக்கு இறக்குமதித் தீர்வை கிடையாது" என்று ஒரு பெரிய பட்டியல் வெளியிட்டார்.

டார்ச் விளக்குக்கான பாட்டரி, டியூப் லைட், கார்பன் பேப்பர், சோப், பிளேடு... போன்றவைதான் அந்த 'உயர்' தொழில் நுட்பப் பொருட்கள்!

சென்ற தேர்தலின் போது என்ரானை அரபிக்கடலில் வீசுவோம் என்று கொக்கரித்தனர் ஆர்.எஸ்.எஸ். பரிவாரங்கள். என்ரான் இவர்கள் வாய்க்கு என்ன வீசியதோ தெரியவில்லை, அதைக் கவ்விக் கொண்டு, தங்கள் சவடாலை அரபிக்கடலில் வீசிவிட்டார்கள். சென்ற முறை இந்து ராஷ்டிரத்திற்கு அவர்கள் ஓட்டிய 13 நாள் டிரெய்லரின் முதல் காட்சியே என்ரான் ஒப்பந்தத்தில் வாஜ்பாய் கையெழுத்து போடுவதுதான்.

இப்போது ஆட்சியைத் திருடிவிட்டது பாரதிய ஜனதா. தனது கலாச்சார தேசியம், பொருளாதாரத் தேசியம் ஆகிய கொள்கைகளுக்குத் தோதான முழக்கத்தை யாரிடமிருந்தாவது திருடுவதற்கு இனி பா.ஜனதா முயற்சிக்கலாம்.

"சாப்பிட கிரிக்கெட், தூங்க கிரிக்கெட், குடிக்க மட்டும் கொக்கோ கோலா" என்பது கொக்கோ கோலாவின் சமீபத்திய பிரபலமான விளம்பரம்.

பாரதிய ஜனதா அதைத் திருடி கீழ்க்கண்டவாறு மாற்றியமைத்துக் கொண்டால் பொருத்தமாக இருக்கும்:

"கும்பிட கங்கை, குளிக்க கங்கை, குடிக்க மட்டும் கொக்கோ கோலா!"

● பாலன்

## இந்து மதவெறிப் பாசிச பயங்கரவாதிகளை முறியடிப்போம்

இரண்டில் ஒன்றைத் தெரிவு செய்ய வேண்டிய தருணமிது. இந்து மதவெறிச் சர்வாதிகாரம் அல்லது அதை ஒழித்துக் கட்டுவதற்கான போராட்டம்! இடையில் 'சமாதான சகவாழ்வு' எதற்கும் இடமில்லை.

இப்பொழுதும் விழித்தெழவில்லையென்றால் ஒரு கொடிய இருண்ட காலத்திற்குள் நாம் தள்ளப்படுவோம்! இன்று முஸ்லிம் மக்களுக்கு எதிராக ஏவப்படும் குண்டர் படைகள் நாளை உழைக்கும் மக்கள் அனைவருக்கெதிராகவும் ஏவப்படும்.

தொழிற்சங்கங்களை இவர்களது குண்டர் படைகள் கட்டுப்படுத்தும். தொழிலாளிகளின் தலைவர்கள் கொலை செய்யப்படுவார்கள் - நடந்திருக்கிறது பா.ஜ.க. ஆளும் மகராஷ்டிரத்திலும், ம.பி.யிலும்.

மதவெறியைப் பரப்பும் பாடத் திட்டத்தை எதிர்க்கும் மாணவர் தலைவர்கள் கொலை செய்யப்படுவார்கள் - நடந்திருக்கிறது பா.ஜ.க. ஆளும் டில்லியிலும், உ.பி.யிலும்.

கற்பழிப்பை எதிர்த்துப் போராடும் பெண்களே கற்பழிக்கப்படுவார்கள் - நடந்திருக்கிறது பா.ஜ.க. ஆளும் ராஜஸ்தானில்.

தாழ்த்தப்பட்ட மக்களும், ஒடுக்கப்பட்ட சாதியினரும் மேலும் நசுக்கப்படுவார்கள் - நடத்திருக்கிறது பா.ஜ.க ஆளும் உ.பி.யில்.

தீண்டாமையை எதிர்க்கும் சுயமரியாதை கொண்டவர்கள் தாக்கப்படுவார்கள் - நடந்திருக்கிறது திருவரங்கம் கோயிலில்.

சாதிக்கும் சனாதனத்திற்கும் எதிராகப் போராடிய அம்பேத்கர், பெரியாரின் சிலைகளையும் கூட அவர்கள் இழிவுபடுத்துவார்கள் - நடந்திருக்கிறது பம்பாயில்.

சுயமரியாதையற்ற அடிமைகள் மட்டுமே இந்து ராஷ்டிரத்தில் குடியுரிமை பெற முடியும். அடிமையாய் வாழ உங்களுக்குச் சம்மதமா? இல்லையெனில் நீங்கள் அமைதியாய் ஒதுங்க நாங்கள் சம்மதிக்க முடியாது.

வாருங்கள்! எங்களுடன் அணி சேருங்கள்!

**ம.க.இ.க.**
**வி.வி.மு.**
**பு.மா.இ.மு.**



படிப்பகம்

www.padippakam.com

✹ பொதொம்கின் ✹ டைட்டானிக் ✹

# வரலாற்றுக் கப்பலும் வரவுக் கப்பலும்

வசூல் பந்தயத்தில் வெற்றி பெறும் படங்களுக்கே ஆஸ்கார் விருது தரப்படுவது வழக்கம். உலகெங்கும் வசூலில் சாதனை ஏற்படுத்தியதாகக் கூறப்படும் 'டைட்டானிக்' திரைப்படம் 11 விருதுகளை அள்ளியது அதனைப் பற்றிய ஆர்வத்தை அதிகப்படுத்தியிருக்கிறது. சுமார் 1000 கோடிக்கும் மேல் செலவழித்து தயாரிக்கப்பட்டுள்ள இப்படம், ஹாலிவுட்டின் கலைப்பார்வையை 'பட்ஜெட்' என்றாக்கிவிட்டது என அமெரிக்கப் பத்திரிகைகளே வியக்கின்றன. ரசிகர்களும் அப்படித்தான். டைட்டானிக் கப்பலின் பிரம்மாண்டத்தைப் பார்க்காதவர்கள் 'வாழ்க்கையில் பிறந்தும் பயனில்லை' எனுமளவுக்குக் கவரப்பட்டிருக்கிறார்கள்.

14,000 தொழிலாளர்கள் கட்டியமைத்த 'டைட்டானிக் கப்பல்' 1912-இல் இங்கிலாந்திலிருந்து அமெரிக்காவிற்கு புறப்படுகிறது. கப்பலின் மேல்த்தள முதல் வகுப்பில் செல்வந்தர்களும், கீழே மூன்றாவது வகுப்பில் ஏழை மக்களும் பயணிக்கின்றனர். நான்கு நாட்களுக்குப் பிறகு ஒரு பெரும் பனிக்கட்டியில் மோதி உடைந்து கப்பல் மூழ்குகிறது. உயிர் காக்கும் படகுகளில் மேட்டுக்குடியினர் 700 பேர் தப்பிக்க சாதாரண மக்கள் 1500 பேர் நீரில் மூழ்கி சாகிறார்கள். இது வரலாறு.

இந்த நிகழ்ச்சியின் பின்புலத்தில் அதாவது மூழ்கிக் கொண்டிருக்கும் கப்பலில், ரோஸ், ஜாக் என்ற காதலர்களின் கதைதான் இயக்குநர் காமரூனின் டைட்டானிக். இறந்து விட்ட தந்தையின் மேட்டுக்குடி அந்தஸ்தை தக்க வைக்க தன் தாயால் ஒரு செல்வச் சீமானுக்கு நிச்சயிக்கப்படும் ரோஸ், ஒரு தங்கக் கூண்டு கிளி. சூதாட்டத்தில் வென்றதற்காக மூன்றாம் வகுப்பு பயணச்சீட்டை பரிசாக பெறும் ஜாக் ஒரு உதிரியான, எளிமையான, ஏழை இளைஞன். ஜாக்குடனும், அவனது சமூகத்துடனும் பழகும்போது மன எழுச்சியும், விடுதலை உணர்வையும் பெறும் ரோஸ் அவன் மேல் காதல் வயப்படுகிறாள்.

பிறகு காதலுக்குத் தடை, காதலனுக்குச் சிறை, காதலியின் மீட்பு, இறுதியில் கப்பல் மூழ்குகிறது. உயிர் காக்கும் படகுகளில் பல முறை தப்பிக்க வாய்ப்பிருந்தும் ரோஸ் காதலனுடன் தான் கடலில் குதிக்கிறாள். தன்னைப் பலிகொடுத்து ரோஸைக் காப்பாற்றுகிறான் ஜாக். இக்கதையை 102 வயதான ரோஸ், டைட்டானிக் கப்பலின் ஆபரண சொத்துக்களை கண்டுபிடிக்க முயலும் ஒரு குழுவினரிடம் பகிர்ந்து கொள்கிறாள்.

ரசிகர்களைச் சொக்க வைக்கும் பிரம்மாண்டமான இக்காதல் காவியம் குறித்த, நமது விமர்சனங்களுக்கு முன்னால், அமெரிக்கர்கள் கவலைப்படும் ஒரு விசயத்தைப் பார்ப்போம். முதல் வகுப்பில் பயணம் செய்யும் செல்வந்தர்களின் அற்பத்தனங்களை அம்பலப்படுத்தி மூன்றாம் வகுப்பு உழைக்கும் மக்கள் தான் உலகின் சாரம் என்ற மார்க்சிய சாயலில் படமெடுக்கப்பட்டது குறித்து அமெரிக்க நியூஸ் வீக் பத்திரிக்கை வருந்துகிறது.

அமெரிக்கர்களே இப்படி அங்கலாய்க்கிறார்கள் என்றால் அதற்குக் காரணம் இருக்கிறது. அழுது வடியும் பியானோ இசையில் கூடார உடையுடன் சீமாட்டிகள். பல் தெரியாமல் சிரிக்கும் சீமான்கள். குண்டூசி விழுந்தால் சப்தம் கேட்கும் வகையில் 'நாகரீகமாக' நடக்கும் விருந்து. அடித்தளத்தில் நேரெதிராக உழைப்பின் கம்பீரத்தோடு நரம்புகளை முறுக்கேற்றும் வண்ணம் இசையுடன் ஆடிப்பாடி மகிழும் உழைக்கும் மக்கள்.

கப்பல் மூழ்கும் போது முதல் வகுப்புக்கென்று உயிர் காக்கும் படகுகளில் பிரிவினை உண்டா என செருக்குடன் கேட்கும் ரோஸின் தாய்; மேட்டுக் குடியினர் தப்பிப்பதற்கு இடையூறு ஏற்படாதவாறு கீழே பூட்டப்பட்ட அறையில் அலறியவாறு போராடும் உழைக்கும் மக்கள். 50 பேர் ஏற வேண்டிய படகில் ஆடம்பரப் பொருள்களுடன் 12 சீமாட்டிகள் மட்டும் போகின்றனர்; கப்பலில் மூழ்கிக் கொண்டிருக்கும் மக்களைச் சுட்டிக்காட்டி அந்தச் சீமாட்டிகளிடம் நியாயம் கேட்கும் காவலன். கைக்குழந்தையுடன் எங்கே போவது என்று கப்பல் காப்டனைக் கேட்கும் ஏழைத் தாய். கட்டுங்கடங்காத கூட்டத்தில் ஒருவனைச் சுட்டுக் கொன்று, குற்ற உணர்வினால் தன்னையே சுட்டுக் கொள்ளும் காவலன். காதலனின் அரவணைப்பில் இருக்கும் ரோஸ் தன்னருகே மரண பீதியுடன் உள்ள ஏழை முகங்களை சில விநாடிகள் பார்க்கும் காட்சி. கப்பல் மூழ்குவது தெரிந்தும் வேறு வழியின்றி இரு குழந்தைகளுக்கு கதை சொல்லி தூங்க வைக்கும் தாய்.

இக்காட்சிகள் நம்மூர் எம்.ஜி.ஆர், நம்பியாரின் மலினப்படுத்தப்பட்ட ஏழை x பணக்காரன் கதை போல இல்லாமல் இயல்பாக எடுக்கப்பட்டிருப்பது உண்மைதான். ஆனால் மூன்றே கால் மணிநேர காதல் காவியத்தில் ஒரு சில மணித் துளிகள் மட்டுமே இடம் பெறும் இக்காட்சிகள் 'மகத்தான காதல்' உணர்வை அமுக்கி விட்டு பார்வையாளர்களின் மனத்திலே ஒருபோதும் இடம் பெறப் போவதில்லை. ஆதாரத்திற்கு ஆனந்தவிகடனின் 4 வார விமர்சனத்தைக் காட்டலாம். இருந்தும் இதைக் கூட பொறுக்க முடியவில்லை என்றால் அதுதான் அமெரிக்காவின், மூலதனத்தின் மனசாட்சி.

காமரூன் உருவாக்கியிருக்கும் மேல்த்தள, கீழ்த்தள காதல் சித்திரத்தின் அடிப்படை சொத்துடமை சமூகத்தின் ஏற்றத்தாழ்வான உலக யதார்த்தம். ஆக, இந்தப் பிரச்சினை முடியும் வரை இந்தக் கதைகள் வெற்றியளிக்கும் ஃபார்முலா தான் என்பதில் ஐயமில்லை. அதனால் தான் ஏழ்மையின் அவலம்கூட சுலபத்தில் லாபம் தரும் விற்பனைச் சரக்காக இருக்கிறது.

ஆனால் டைட்டானிக்கின் வெற்றிகரமான விற்பனை அதன் நவீன தொழில் நுட்பத்திலும், அதை சாத்தியமாக்கிய பெரும் பணத்திலும்தான் இருக்கிறது. உலகெங்கிலும் பத்திரிகைகள், ரசிகர்கள் பேசி, வியந்து வரும் பிரமிப்பின் அடிப்படையும் இதுவே.



இயக்குநர் காமரூன் நடிகர்களுடன்

படத்தின் இயக்குநர் காமரூன், நம்மூர் பாரதிராஜா, பாலச்சந்தர் போல கோபக்காரர்; பல்கலை வல்லவரான அவரிடம் வேலை செய்ய படப்பிடிப்புக் குழுவினர் நடுங்குவர் என்றெல்லாம் பத்திரிகைகள் வியக்கின்றன. இன்னும் உண்மையான டைட்டானிக் கப்பல் எப்படி இருந்ததோ அத்தனை வசதிகளையும், அலங்காரங்களையும் மாதிரிக் கப்பலில் கொண்டு வருவதற்கு அவர் கண்ட சோத


படிப்பகம்

www.padippakam.com

னைகளையெல்லாம் வாசகர்கள் படித்திருக்கக் கூடும்.

கப்பல் எந்தக் கோணத்தில் மூழ்கியதோ அதற்கேற்ப கட ''ில் உள்ள சிறு பொருட்கள் எங்கு விழ வேண்டும் என்பதைக் கூட எந்தப் பிழையுமின்றி படமெடுத்திருக்கிறார்கள் என்றால் அது ஒரு சான்று மட்டுமே. ''என் அறிவுக்கெட்டிய வரை, இப்படத்தில் வரலாற்றுப் பிழை ஏதுமில்லை. வருங்காலத் தலைமுறையினர் ஏற்றுக் கொள்ளும் வண்ணம் இந்த உண்மைக் கதையினை எடுப்பதற்கு எங்களுக்குப் பெரும் பொறுப்பு இருக்கிறது'' என்கிறார் இயக்குநர்.

வரலாற்றைப் பார்ப்பதிலேயே இங்கு பொறுப்பில்லையே 1500 பேர்கள் நீரில் மூழ்கி கொல்லப்பட்டது ஒரு கொடூரமான விபத்து. இதைத் தவிர டைட்டானிக் கப்பலுக்கு வரலாற்றில் முக்கியத்துவம் ஏதுமில்லை. கப்பல் மூழ்கும் போது 'நாகரீக சமூகம்' அடித்தட்டு மக்களைப் பலி கொடுத்து விட்டு தான் மட்டும் தப்பித்துக் கொண்டதுதான் அந்த விபத்தில் இயற்கைக்கு அப்பாற்பட்ட ஒரே பிரம்மாண்டமான சமூக விசயம். அந்த ஒரு விசயம் திரைப்படத்தில் காதலுக்குப் பக்கவாத்தியமாக வருகிறது. இறுதிக் காட்சியில் காதலர்கள் தப்பிப்பதற்கு காதல் உணர்வுடன் போராடுகிறார்கள். தன்னுடன் கப்பல் ஏறிய நண்பனைக் கூட ஜாக் அப்போது நினைக்கவில்லை. இது காதலின் மறதியென்றால் நமக்கும் அப்படித் தான். காதலர்கள் மட்டும் எப்படியாவது தப்பிக்கமாட்டார்களா என்று தான் நம் நெஞ்சங்கள் ஏங்குகிறதே தவிர பொம்மைகளைப் போல விழுந்து, உறைந்து, இறந்து போன மக்களைப் பற்றியல்ல.

ஒருவேளை, மூழ்கும் கப்பலில் உயிர் வாழும் போராட்டத்தில் அடித்துக் கொண்டிருந்த உழைக்கும் மக்களின் அவலத்தையும், வேதனையையும் மையப்படுத்தி காதலை பக்கவாத்தியமாக வைத்து இயக்குநர் படமெடுக்கத் துணிந்திருந்தால், செலவழிப்பதற்கு எந்த முதலாளியும் பணம் போடமாட்டான். குதிரைக்குத்தான் கொம்பு முளைப்பதில்லையே. அப்படியானால் இயக்குநரின் ஆர்வத்திற்கான தூண்டுதல் எது?

இதுதான். மிகப்பெரிய கப்பல், மிகக் கொடூரமான விபத்து இரண்டும் நவீனத் தொழில் நுட்பத்தை முழு அளவில் பயன்படுத்திக் கொள்ள ஏதுவான விசயம். இந்த பிரம்மாண்டத்தில் பிறக்கும் காதலின் போராட்டம், சர்வதேச உணர்வையும் - சந்தையையும் எளிதில் கைப்பற்றிக் கொள்ளும் இரண்டாவது விசயம். ஒரு மகா காப்பியத்தை உருவாக்குவதற்கான வாய்ப்புக்களை 'டைட்டானிக் விபத்து' அளிக்கிறது என்பதில் தான் காமரூல கவரப்படுகிறாரே ஒழிய, கலை, வரலாறு, சாதனை என்பதெல்லாம் ரீல்.



ஐசன்ஸ்டீன்

ஆப்பிரிக்க கிராமம் ஒன்றில் பிளேக் நோயால் 10,000 பேர் இறந்து போகிறார்கள் என வைத்துக் கொள்வோம். இதை ஒரு பிரம்மாண்டமான திரைப்படமாக எடுப்பார்களா? அல்லது டைட்டானிக்கின் செலவில் ஆயிரத்தில் ஒரு பங்கு கூட இல்லாமல் எடுக்கப்படும் விதவிதமான தமிழ்க் காதல் படங்களைப் போல, காதலை மட்டும் பிரம்மாண்டமாக எடுக்க முடியுமா? இரண்டுமே முடியாது என்பதுதான் டைட்டானிக் சொல்லுகின்ற சேதி.

தமிழ்ப்படங்களில் பிரிந்த காதலர்கள் இணைவதற்கான பொருளாக ஒரு அரச மரமோ, ஆட்டோவோ அதிக பட்சம் ஒரு ரயில் வண்டியாகவோ இருக்கும் போது, இங்கு ஒரு பெரும் கப்பலாக இருக்கிறது என்பதுதான் உண்மை. என்றாலும் பெரும் செலவு பிடிக்கும் உண்மையாகவும் இருக்கிறது.

இதில் தான் கப்பலோடு சேர்ந்து ரசிகர்களும் அடித்துச் செல்லப்படுகிறார்கள். கடலைக் கிழித்துக் கொண்டு செல்லும் கப்பல், போட்டியுடன் நீந்தும் மீன்கள், கப்பலின் முகப்பிலே காதல் வயப்படும் காதலர்கள், அடித்தளத்தில் பிரம்மாண்டமான நீராவி எந்திரங்களுடன் வேலை செய்யும் கடும் உழைப்பாளிகள், கும்மிருட்டுக் கடலில் ஒளிரும் விளக்குகளுடன் மூழ்கும் கப்பல், நாயகி ரோஸ் காப்பாற்றப்படும் இறுதிக் காட்சி. இவற்றையெல்லாம் கைதட்டி ரசித்த ரசிகர்கள் காதலின் சோகத்தோடும் கப்பலின் பிரமிப்போடும் அரங்கை விட்டு அகலுகிறார்கள்.

**ஒருவேளை, மூழ்கும் கப்பலில் உயிர் வாழும் போராட்டத்தில் அடித்துக் கொண்டிருந்த உழைக்கும் மக்களின் அவலத்தையும், வேதனையையும் மையப்படுத்தி காதலை பக்கவாத்தியமாக வைத்து இயக்குநர் படமெடுக்கத் துணிந்திருந்தால், செலவழிப்பதற்கு எந்த முதலாளியும் பணம் போடமாட்டான்.**

ஹாலிவுட்டின் முதல் தரக் கலைஞர்களும், நவீனத் தொழில் நுட்பமும் பயன்பட்டிருக்கும் இப்படமும் மேற்கண்ட காட்சிகளும் பார்வையாளர்களைக் கவராமல் போய் விடுமா என்ன! என்றால் தொழில் நுட்பமும் அதன் பிரம்மாண்டமும் தான் கலையா? இது தரும் மன எழுச்சிதான் என்ன?

வாழ்க்கையில் பிரம்மாண்டங்கள் பலவிதம். வட்டியினால் வாரிக்குவித்த பொருளில் பர்மாத் தேக்கும் - பளிங்குக் கல்லுமாய் காரைக்குடி வட்டாரத்தில் இறுகி நிற்கும் செட்டியார்களின் மாளிகைகள் - வட்டியின் பிரம்மாண்டம். தன் முகத்தை விதவிதமாக தானே ரசித்துக் களிக்கும் ஜெயலலிதாவின் 150 அடி கட் அவுட்டு - அற்பத்தனத்தின் பிரம்மாண்டம். உலக அதிசயங்கள் ஏழிலும் ஐஸ்வர்யா ராய் - பிரசாந்த் ஜோடியை ஆட விட்டுப் பெருமை பேசும் சங்கரின் 'ஜீன்ஸ்' படம் - கோடம்பாக்கத்து கொழுப்பின் பிரம்மாண்டம். இந்துராட்டிரக் கனவும், ஹிட்லரின் ஆளப் பிறந்த ஆரிய இனமும் - பாசிசத்தின் பிரம்மாண்டம். கம்யூனிஸ்ட் கட்சியின் வேண்டுகோளை ஏற்று, மஞ்சள் நதியின் குறுக்கே, தமது சொந்த உழைப்பில் சீன விவசாயிகள் எழுப்பிய மாபெரும் அணைக்கட்டு - சோசலிசப் போராட்டத்தின் பிரம்மாண்டம்.

ஆம். பிரம்மாண்டம் இயற்கையின் இயக்கத்தில் இருக்கிறது; அதைப் புரிந்து கொள்ள மனிதன் நடத்தும் போராட்டத்தில் இருக்கிறது; அதற்காகத் தன் இனத்தினுள்ளே நிலவும் சுரண்டல் உறவுகளை மாற்ற முயலும் அவனது வர்க்கப் போராட்டத்தில் இருக்கிறது. இத்தகைய பிரம்மாண்டத்தை, அதற்கே உரிய கம்பீரத்தோடும், கலை ஆற்றலோடும், உணர்த்திக் காட்டும் ஒரு கலை அதற்கே உரிய எழுச்சியைத் தோற்றுவிக்கும்.

அத்தகைய எழுச்சியைத் தோற்றுவித்தது ஒரு திரைப்படம். இதுவும் ஒரு கப்பலின் கதைதான்.


போர்க்கப்பல் பொதெம்கின். டைட்டானிக்கின் பிரம்மாண்டமோ, ஆடம்பர வசதிகளோ இல்லாத ஒரு சிறு போர்க்கப்பல். கந்தலாடை மாலுமிகளையும், வீரர்களையும் கொண்ட பொதெம்கின், ரசிய ஜாரின் கப்பற்படையைச் சேர்ந்தது. 1905-இல் ஜாருக்கு எதிராக வெடித்துக் கிளம்பிய புரட்சியின் புயல் இக்கப்பலையும் பற்றிக் கொண்டது. தளபதிகளையும், ஜாரையும் எதிர்த்துக் கலகம் செய்த வீரர்கள் கப்பலை விடுவிக்க போராடினார்கள். அடக்குமுறையைக் கட்டவிழ்த்துவிட்ட ஜார் அரசனால், தோல்வியுற்ற முதல் ரசியப் புரட்சியைப்


படிப்பகம்

www.padippakam.com

போலவே பொதெம்கினும் வீழ்ந்தது. வீரர்களும், மாலுமிகளும் கொல்லப்பட்டனர்.

இதைக் கருவாகக் கொண்டு ரசிய திரைப்பட இயக்குநர் ஐசன்ஸ்டின் 1926-இல் 'போர்க்கப்பல் பொதெம்கின்' என்ற கருப்பு - வெள்ளை மௌனத் திரைப்படத்தை (பின்னணி இசையுடன்) வெளியிடுகிறார்.



பொதொம்கின் படப்பிடிப்பு

திரைக்கதை: வறண்டு போன கப்பற்படை வாழ்க்கையில் ஒடுங்கிய முகங்களுடன் மாலுமிகள், வீரர்கள். பரிமாறப்படும் இறைச்சியில் புழுக்கள் நெளிவதைக் கண்டு குமுறுகின்றனர். செய்தி பரவுகிறது. காப்டனுக்கு எதிராகப் போராட்டம் வெடிக்கிறது. கலகம் செய்தவர்களில் வாகுலின்சுக் என்ற வீரர் மட்டும் கொல்லப்படுகிறார். ஏனைய 'போர்க் குற்றவாளிகளை'ச் சுட மறுத்த வீரர்கள் புரட்சிக்காரர்களுடன் சேருகின்றனர். அதிகாரிகளுக்குத் தண்டனை தரப்பட்டு, கப்பல் கைப்பற்றப்படுகிறது. செங்கொடி உயர ஒடேசா என்ற நகரத்தை நோக்கிப் பயணிக்கிறது பொதெம்கின்.

நகரத்து மக்களிடம் புரட்சியைப் பரவ விடுகிறார்கள் கப்பலின் வீரர்கள். பொதெம்கினுக்கு ஆதரவுக் குரல் கொடுக்கும் மக்களை ஜாரின் ராணுவம் சுட்டுத் தள்ளுகிறது. பின்பு நகரத்திலிருந்து வெளியேறும் புரட்சிக் கப்பலை அழிக்குமாறு ஜார் உத்தரவிடுகிறான். பிரம்மாண்டமான போர்க் கப்பல்கள் பொதெம்கினைச் சுற்றி வளைத்து, சுடுவதற்காகத் தங்கள் பீரங்கிகளை உயர்த்துகின்றன. ''சகோதரர்களே சுடாதீர்கள்'' என்று செய்தி அனுப்புகிறது புரட்சிக் கப்பல். சில விநாடிகள், சில தயக்கங்களுக்குப் பிறகு உயர்ந்த பீரங்கிகள் இறங்குகின்றன. முற்றுகையிட்ட போர்க் கப்பல்கள் வழிவிட ஒரு நடுநிலைமைத் துறைமுகத்தை நோக்கி பயணிக்கிறது பொதெம்கின். படம் முடிகிறது.

ரசிகர்கள் மத்தியில் மகிழ்ச்சிப் பெருக்கு முடியவில்லை. 'சுடாதீர்கள்' என்று பொதெம்கின் மட்டும் செய்தி அனுப்பவில்லை. பார்வையாளர்களும் உரக்கக் குரல் எழுப்புகிறார்கள். சிலர் பிரார்த்தனை செய்கிறார்கள். பலர் அழுகிறார்கள். புரட்சிக் கப்பல் தப்பிய காட்சியுடன், மகிழ்ச்சி கலந்த துயரப் பெருக்குடன் கலைகிறார்கள் ரசிகர்கள். அன்றைய ஐரோப்பிய நகரங்களின் பொதெம்கின் திரையிடப்பட்ட அரங்குகளிலெல்லாம் இதே காட்சிதான். ஏனைய படங்கள் ஈயடித்துக் கொண்டிருந்த போது மீண்டும் மீண்டும் பொதெம்கின் திரையரங்க வாசலில் குழுமினார்கள். ஆம். ''இந்த உலகம் முழுவதும் எதற்காகக் காத்திருந்ததோ அதைப் பார்க்கப் போவதைப் போன்ற உணர்ச்சிப் பெருக்குடன் மக்கள் இருந்தனர்''.

அத்தகைய ஆதரவைக் கண்டு அஞ்சிய அன்றைய பாசிச ஆட்சியாளர்கள் பல சதிகளில் ஈடுபட்டு மக்கள் பார்வையைத் திருப்ப நினைத்தனர். படத்தின் பின்னணி இசையை எடுத்தனர்; படத்தினைக் கண்டபடி வெட்டி ஒழுங்கற்ற முறையில் தொகுத்துக் காட்டினர்; இன்னும் பல செய்து பார்த்தாலும் மக்கள் வெள்ளம் குறையவில்லை. ஹிட்லரின் மந்திரி கோயபெல்ஸ் இதே மாதிரி ஒரு படமெடுக்கத் தனது கலைஞர்களுக்கு ஆணையிட்டான் என்றால் பார்த்துக் கொள்ளுங்கள். இந்நூற்றாண்டின் ஆரம்ப காலத்தின் பொத்தெம்கின் தனது முத்திரையை ஆழமாகவே பதித்துச் சென்றது.

•••

டைட்டானிக்கின் வரலாறு இயற்கையினாலும், நாகரீக சமூகத்தினாலும் 1500 பேர் கொல்லப்பட்ட ஒரு விபத்து. பொதெம்கின், சுரண்டலமைப்பை மாற்றத் துடித்த ஒரு புரட்சியின் குறியீடு. விபத்து என்ற உண்மையில், ஆதி கால அம்பிகாபதி - அமராவதி காதல் கதையைக் கலந்தது இயக்குநர் காமரூனின் கற்பனை. தோல்வியுற்ற பொதெம்கின் கலகம் என்ற உண்மையில், எதிர்காலப் புரட்சியின் வெற்றியைக் கலந்தது இயக்குநர் ஐசன்ஸ்டினின் கற்பனை. ரோஸ், ஜாக் என்ற அழகான காதலர்கள்தான் டைட்டானிக்கின் பாத்திரங்கள். உழைத்து ஒடுங்கிய முகங்களைக் கொண்ட வீரர்களும், கொடுமை கண்டு கோபம் கொண்ட மக்களும்தான் பொதெம்கினில் வந்தார்கள்.

விபத்து என்ற உண்மையில், ஆதிகால அம்பிகாபதி - அமராவதி காதல் கதையைக் கலந்தது இயக்குநர் காமரூனின் கற்பனை. தோல்வியுற்ற பொதெம்கின் கலகம் என்ற உண்மையில், எதிர்காலப் புரட்சியின் வெற்றியைக் கலந்தது இயக்குநர் ஐசன்ஸ்டினின் கற்பனை.

நூற்றுக்கணக்கான தொழில் நுட்பக் கலைஞர்களும், செலவழிப்பதற்கு பெரும் நிறுவனங்களும் காமரூனுக்கு இருந்தார்கள். கப்பலில் உயரும் செங்கொடி மட்டும் சிவப்பில் வர எல்லா மூலப்பிரதிகளிலும் தானே வண்ணம் சேர்த்தார் ஐஸன்ஸ்டின். டைட்டானிக்கின் விபத்தை அழகுபடுத்த சிறப்பு ஒலி, ஒளி, கணிப்பொறி வரைகலை, திரையரங்க சிறப்பு உபகரணங்கள் இருந்தன. பொதெம்கினின் கரடு முரடான கலகத்தை, கருப்பு - வெள்ளையும் உரையாடல் இல்லாத இசையும் கம்பீரமாகக் கொண்டு வந்தது.

டைட்டானிக்கின் புகழ் பாட உலகெங்கும் பத்திரிகைகளும், தொலைக்காட்சிகளும் இருக்கின்றன. பொதெம்கினைத் தடை செய்வதற்கு ஐரோப்பிய ஆட்சியாளர்களும், அவதூறு செய்ய பத்திரிகைகளும் முயன்றனர். டைட்டானிக்கின் தொழில் நுட்ப பிரமிப்பிலும் காதலின் மயக்கத்திலும் கட்டுண்டு மௌனமாகக் கனவு கண்டார்கள் ரசிகர்கள். படத்தின் தேவையான வசனங்களைத் தாங்களே பேசி, புரட்சியின் எழுச்சியை அரங்கினுள் கொண்டு வந்தார்கள், பொதெம்கினின் ரசிகர்கள். டைட்டானிக்கின் பிரம்மாண்டம் திரைக்குள் மட்டும் இருந்தது. பொதெம்கினின் பிரம்மாண்டம் திரைக்கு வெளியே வாழ்க்கையில் இருக்கிறது. டைட்டானிக்கின் சாதனை அதன் செலவு மதிப்பீட்டில். பொதெம்கினின் சாதனை நமது வாழ்க்கையை மதிப்பிட்டதில்.

டைட்டானிக்கினால் அடித்துச் செல்லப்பட்ட ரசிகர்கள் வாழ்க்கைக் கரையேறுவதற்கு 'போர்க் கப்பல் பொதெம்கினை'ப் பார்க்க வேண்டும், ஒரு முறையாவது.

• இளநம்பி



படிப்பகம்

www.padippakam.com

**தலையங்கம் தொடர்ச்சி**

எதிர்த்த பௌத்த சமண சீர்திருத்த இயக்கங்களை சூழ்ச்சிகளின் மூலம் வீழ்த்தியதையுமே பண்டைய வரலாறு கொண்டிருந்தது. இந்த உண்மைகளை மூடி மறைத்து ஆரிய இனமே இந்த நாட்டின் பூர்வகுடி என்றும் அது நிறுவிய ஆரிய வர்த்தம் என்கிற ஏக இந்தியாவில் பண்பாடும் நாகரிகமும் உயர்ந்தோங்கி இருந்ததாக புளுகுவதே இந்துத்துவ வரலாற்றுப் புரட்டின் நோக்கமாகும்.

சமூக, அரசியல், பொருளாதார, பண்பாட்டு உரிமைகள் மறுக்கப்பட்டு சூத்திரர்கள், பஞ்சமர்கள், சண்டாளர்கள் என வகைப்படுத்தி இந்த நாட்டின் பெரும்பான்மை மக்கள் பார்ப்பனர்கள், சத்திரியர்கள், வைசியர்களால் அடக்கி - ஒடுக்கி சுரண்டப்பட்டதும், அவர்களை எதிர்த்து பல கலகங்களையும் உள்ளடக்கியதுதான் இந்திய வரலாறு, என்பதை மூடி மறைப்பது ஆர்.எஸ்.எஸ். பாரதீய ஜனதா பாசிச பரிவாரங்களின் நோக்கமாகும். மகாபாரதம், இராமாயணம் போன்ற இதிகாச புராண கட்டுக் கதைகளை வரலாற்று உண்மைகள் என்றும் ராமனும் கிருஷ்ணனும் வரலாற்று வீர நாயகர்கள், வசிஷ்டனும் சாணக்கியனும் மகா ஞானிகள் என்றும் சரித்திரப் பித்தலாட்டம் செய்யப் போகிறார்கள். தென்னாட்டில் தனித்துவமிக்க தமிழர் பண்பாடும் நாகரீகமும் நிலவியதையும் பின்னர் அவை ஆரியமயமாக்கப்பட்டதையும் மூடி மறைத்து எல்லாமே எப்போதும் இந்து மயமான அகண்ட பாரதமாக இருந்த வந்ததாக வரலாற்றைப் புரட்டி எழுதப் போகிறார்கள்.

ஆரியர்கள், கிரேக்கர்களின் படையெடுப்புக்குப் பின் மத்திய காலத்தில் துருக்கியர்கள், பாரசீகர்கள், ஆப்கானியர்களின் படையெடுப்புக்கு இந்தியத் துணைக் கண்டம் இலக்கானது. அவர்களது படையெடுப்பு, கொள்ளையிடும் பொருளாதார நோக்கத்துக்கும் அரசியல், பிராந்திய ஆதிக்கத்துக்கும் தான் நடந்தனவேயொழிய மதநோக்கங்கள் இரண்டாம்பட்சமானவைதாம். இதுபோன்று இந்திய பேரரசர்கள் குறிப்பாக குப்தர்களும் சோழர்களும் கலிங்கர்களும் இலங்கை, கடாரம் - ஜாவா, சுமத்திரா முதல் வடகிழக்கு வரை படையெடுத்துப் போய் கொள்ளையிட்டார்கள், ஆக்கிரமித்தார்கள், தங்கள் மதத்தைப் பரப்பினார்கள் என்று வரலாறு கூறுகிறது. அன்றைய காலத்தில் கோவில்கள் கருவூலங்களாகவும், அரசர்களின் பதுங்குமிடங்களாகவும் பாசறைகளாகவும் விளங்கியதால் இசுலாமிய அரசர்கள் மட்டுமல்ல இந்து மன்னர்களும் அவற்றைத் தாக்கி சூறையாடியதற்கான வரலாற்று ஆதாரங்கள் ஏராளமாக உள்ளன. அரசர்களைப் பயன்படுத்தி சைவ, வைணவ, பௌத்த, சமண மதப்பிரிவினர்கள் மோதிக் கொண்டு, பலர் படுகொலை செய்யப்பட்டதையும் வரலாறு கண்டிருக்கிறது.

இவற்றையும் மூடிமறைத்து, ''இந்து ராஷ்டிரமாக விளங்கிய மகத்தான பண்டைய பாரதம் இசுலாமியக் கொலைகார கொள்ளையர்களால் சூறையாடப்பட்டது. மொகலாயப் பேரரசர்கள், கோவில்களை சூறையாடி, இடித்துத் தள்ளி மசூதிகளைக் கட்டிக் கொண்டிருந்த சமயங்கள் தவிர, மீதி நேரங்களில் எல்லாம் இந்துக்களைக் கட்டாய மதமாற்றம் செய்வதையே வெறியாகக் கொண்டு ஆட்சி செய்தார்கள். இந்துப் பெண்களைக் கொண்டு தமது ''ஹாரம் - அந்தப் புரங்களை'' நிரப்பினார்கள். அவர்களின் கொலை, கொள்ளை, கற்பழிப்புகளில் இருந்து தப்புவதற்காகவே இந்துப்



பெண்கள் கூட்டம் கூட்டமாகத் தீக்குளித்தார்கள்; இசுலாமியர்களுக்கு அஞ்சியே இந்துப் பெண்கள் முகத்திரை அணிந்தார்கள்'' என்று எழுதி பொதுவில் நிலப்பிரபுத்துவ அரசுகள் படைகள் கொண்டிருந்த பண்புகளை இசுலாமிய - மொலாயப் பண்புகளாகச் சித்தரித்து இந்து வெறியூட்டும் வகையில் ஆர்.எஸ்,எஸ். பிரச்சாரம் செய்கிறது. இதையே அதிகார பூர்வ வரலாறாக வடிக்கவும் இப்போது முயலுகிறது.

மொகலாயப் பேரரசர்களின் வீழ்ச்சியையொட்டிய இந்த நாடு ஆங்கிலேயர்கள், பிரெஞ்சுக்காரர்கள், போர்த்துக்கீயர்களின் ஆக்கிரமிப்புப் போர்கள், சூறையாடல்கள், காலனிய ஒடுக்குமுறை, சுரண்டல், மதமாற்றம் ஆகியவற்றை உள்ளடக்கிய மூன்று நூறாண்டுக்கு மேலான .வரலாறைக் கண்டது. மதவேறுபாடுகளைக் கடந்து உண்மையான விடுதலைப் போராளிகளும் உழைக்கும் மக்களும் நடத்திய சுதந்திரப் போராட்டம் காங்கிரசின் தலைமையிலான தரகு முதலாளிகள் நிலப்பிரபுக்களின் துரோகத்தால் நாடு துண்டாடப்படுவதிலும் போலிச் சுதந்திரத்தை அடைவதிலும் முடிந்தது. கடந்த ஐம்பதாண்டுகளாக பல்வேறு ஏகாதிபத்தியங்கள் அரைக்காலனிய வேட்டைக்காடாக இருக்கும் இந்தியா, தற்போது ஏகாதிபத்திய மேல்நிலை வல்லரசுகளின் மறுகாலனியாக மாற்றப்பட்டு வருகிறது. உண்மையில் இந்த நாட்டின், இந்த மக்களின் எதிரிகளாக தரகு அதிகார முதலாளிகளும் நிலப்பிரபுக்களுமாகிய பார்ப்பன - பனியா மற்றும் பிற ஆதிக்க சாதியினரும் ஏகாதிபத்திய மேல்நிலை வல்லரசுகளுமே இருக்கின்றனர். ஆனால் இந்துத்துவ பாசிச சித்தாந்தமோ ''இந்திய தேசிய''த்தின் எதிரிகள் இசுலாமயிர்கள்தாம் என்று சித்தரிக்கின்றனர். இதற்கேற்ப இந்திய வரலாற்றையே திரித்துப் புரட்டுகின்றனர்.

இந்திய வரலாறை இவ்வாறு திரித்துப் புரட்டுவதென்பது ஆர்.எஸ்.எஸ். பாரதீய ஜனதா பாசிச கும்பலின் நீண்ட காலத் திட்டமாக இருந்து வந்திருக்கிறது. 1977-இல் ஜனதா கட்சியாக மாறி ஆட்சியைப் பிடித்த போதே தனது கருத்துக்குப் பொருந்தாத பாடப் புத்தகங்களை தடை செய்வதற்கான வழிகாட்டி விதிமுறைகளை ஜனசங்க கொள்கை வகுப்பாளராக இருந்த மத வெறியர் நானாஜி தேஷ்முக் வகுத்தளித்தார். அப்போதே ஆர்.எஸ்.எஸ்.-இன் ''பசுவதைத்தடை - பசுபரிபாலனம்'' என்கிற கொள்கைக்கு எதிரான ஆதாரமாக மாட்டுக்கறி உண்ணும் வழக்கம் பண்டைய இந்தியாவிலேயே இருந்தது எனக் கூறும் பாடப் புத்தகத்தைத் தடை செய்ய எத்தனித்தனர். ஆட்சியைப் பிடித்த உ.பி., ம.பி., இராஜஸ்தான், குஜராத், மராட்டிய மாநிலங்களில் பாடப் புத்தகங்கள் ஏற்கனவே திருத்தப்பட்டுவிட்டன. தமது கருத்துக்கு மாறான பாடப் புத்தகங்களை வெளியிட்ட நிறுவனங்களை விசுவ இந்து பரிசத்தும் பஜ்ரங்தள்ளும் தாக்கி, தெருவில் போட்டு நூல்களைக் கொளுத்தினர். 1991-லேயே இந்திய வரலாறு மாநாட்டில் புகுந்து (போலி உறுப்பினர்களை சேர்த்து) கைப்பற்ற முயன்றனர். இப்போது மத்தியில் ஆட்சி அதிகாரத்தைப் பயன்படுத்தித் தனது கையாட்களைக் கொண்டு இந்திய வரலாறு ஆராய்ச்சிக் குழுவை நிரப்பிக் கொண்டனர். தமது சித்தாந்த அடிப்படையில் வரலாறைத் திரித்துப் புரட்டுவதில் பாசிஸ்டுகள் தற்காலிகமாக வெற்றி பெறலாம். ஆனால் இறுதியாக அவர்களே வரலாற்றின் குப்பைக் கூடையில் வீசப்படுவதைத் தடுத்ததாக வரலாறு இல்லை.

படிப்பகம்

www.padippakam.com

## காதலுக்கு மரியாதை:

# காதலர்களுக்கு அவமரியாதை

இரத்தத்தை உறைய வைக்கும் சண்டைக் காட்சிகளோ, இரத்தத்தைச் சூடேற்றும் நடனக் காட்சிகளோ இல்லாத ஒரு திரைப்படம் நூறு நாட்கள் ஓடுகிறதென்றால் அந்தத் திரைக்கதையின் உணர்ச்சியுடனோ அல்லது அது முன்மொழியும் நீதியுடனோ ரசிகப் பெருமக்கள், குறிப்பாக இளைஞர்கள் ஒன்றிவிட்டார்கள் என்று சந்தேகிக்கத்தான் வேண்டும். ''காதலுக்கு மரியாதை'' திரைப்படத்தின் வெற்றி இந்த சந்தேகத்தை ஏற்படுத்துகிறது.

பெற்றோரின் பாசத்துக்காகத் தங்கள் காதலையே தியாகம் செய்யத் துணிவதன் மூலம் ''காதலுக்கு மரியாதை'' செய்கிறார்கள் காதலர்கள்.

ஒரு புத்தகக் கடையில் தற்செயலான ஒரு பார்வையில் ஏற்படும் 'காதலில்' காதலியைத் துரத்துகிறான் காதலன். ஒன்றிரண்டு வார்த்தைகள் கூடப் பேசிக் கொள்ளாமல் அகத்தின் அழகை முகத்திலிருந்து மட்டுமே தெரிந்து கொண்டு காதலிக்க இயலுமா என்றொரு கேள்வியை யாராவது கேட்பதாக இருந்தால் ''இது போன ஜென்மத்தின் தொடர்ச்சி'' என்பது கதாநாயகனின் பதில்.

ஒரு நண்பனைப் போல மகனை சமமாக நடத்தும் பண்பாளர், கதாநாயகனின் தந்தை; கதாநாயகியின் அண்ணன்மார்களோ தங்கையைக் குடும்ப விளக்காகக் கருதிப் போற்றிப் பாதுகாப்பவர்கள். விட்டலாசார்யா படம் போல அந்த விளக்கில் தான் அக்குடும்பத்தின் உயிரே இருக்கிறது என்று நீங்கள் கருதுவதாக இருந்தால் அதுவும் மிகையில்லை.

கதாநாயகன் வழக்கமான ஹீரோக்களைப் போல கண்ணில்பட்ட கல்லூரிப் பெண்களையெல்லாம் கலாட்டா செய்து துரத்தும் சராசரி ரகத்தைச் சேர்ந்தவன் அல்ல; கதாநாயகியும் ''ஐ லவ் யூ'' என்று சொல்லப்படுவதற்காகவே காத்திருந்து ''ஐ லவ் யூ'' என்று உடனே எதிரொலிக்கும் மலிவான பெண்மணி அல்ல; மனதில் அரும்பிய முதல் காதலை 'முதல் பாவமாக'க் கருதி தேவனிடம் மன்னிப்பு கேட்கும் 'நல்ல கிறித்தவக் கன்னி'.

மொத்தத்தில் எந்தப் பக்கம் திரும்பினாலும் ஒரே நல்லவர்கள் மயம். கதாநாயகன் ஜீவா, தங்கள் தங்கை மினியைக் காதலிப்பதையறிந்த அண்ணன்மார்கள் அவனை ரத்தம் சொட்டச் சொட்ட அடிக்கிறார்கள். இருந்தாலும் அவர்களுக்குக் குழந்தை மனசு என்பதையும், கல்யாணமாகி பிள்ளை குட்டி பெற்றிருந்த போதும் அம்மா பேச்சைத் தட்டாத அம்மா பிள்ளைகள் என்பதையும் மறந்து விடக்கூடாது.

கதாநாயகன் தன் காதலை முதலில் அறிவித்த முறை, பின்னர் தெரிவித்த முறை இவையெல்லாம் அநாகரிகமானவை அடாவடித்தனமானவை என்று நீங்கள் ஒரு வேளை கருதலாம். ஒரு தன்மானமுள்ள, நேர்மையான, துடிப்பான இளைஞனின் நடவடிக்கைகள்தான் அவை என்பதை கதாநாயகனின் கோணத்திலிருந்து சிந்தித்தால் நீங்கள் உணர முடியும்.

கையைக் காலை உடைத்து கதாநாயகனை படுக்கையில் போடும்வரை தன் காதலை கதாநாயகி வெளிப்படுத்தவில்லையென்பதால் அவளைக் கல்நெஞ்சுக்காரி என்று கூறிவிட முடியாது. காதலை நிரூபிப்பதற்காகக் காதலனை பத்து மாடிக் கட்டிடத்திலிருந்தும், மலை உச்சியிலிருந்தும் குதிக்கச் சொல்லும் தமிழ் சினிமாக் கதாநாயகிகளை ஒப்பிட்டுப் பார்த்தால் மினியின் அருமை புரியும்.

கடைசியாக, ஒரு வழியாக கதாநாயகி காதலுக்கு உடன்பட்ட போதும், அவளது அன்புச் சகோதரர்கள் உடன்படவில்லை. காதலர்கள் ஓடுகிறார்கள். ஒரு ராத்திரி அவனுடன் தங்கிவிட்டால் அப்புறம் அவன் வீட்டுப்படி ஏறக்கூடாது என்று தாயார் உத்தரவு. இருட்டுவதற்குள் தங்கையின் கற்பைக் காப்பாற்ற கையில் அரிவாளுடன் துரத்துகிறார்கள், மினியின் அன்புச் சகோதரர்கள். அப்போதும் கதாநாயகனை வெட்டிவிட்டு தங்கையை அநாதை இல்லத்தில் சேர்ப்பதுதான் சகோதரர்களின் திட்டம் என்பதிலிருந்து அவர்களது நல்ல உள்ளத்தைப் புரிந்து கொள்ள வேண்டும்.

விடிந்தால் திருமணம் என்னும் சூழலில்தான் காதல் - அன்பு - பாசம் ஆகியவை குறித்த தத்துவஞான சிந்தனை காதலர்களை ஆட்கொள்கிறது.

கண நேரத்தில் தோன்றிய காதல் உணர்வுக்காக 20 ஆண்டு உத்திரவாதமுள்ள பெற்றோரின் பாச உணர்வைப் புறக்கணிப்பதா? பெற்றோர்களைத் துன்பத்தில் ஆழ்த்திவிட்டு பிள்ளைகள் இன்பமான மண வாழ்வைத் துவக்குவது தருமமா என்ற கேள்விகள் அவர்களை அலைக்கழிக்கின்றன.

ஆசையே துன்பத்துக்கு அடிப்படை எனும் தத்துவத்தைக் கண்டுபிடிக்க புத்தன் கூடப் பல ஆண்டுகள் சிந்திக்க வேண்டியிருந்தது. இந்தக் காதலர்களோ ஒரே இரவில் முடிவு செய்து காதலை ரத்து செய்து விடுகிறார்கள். திருமண ஏற்பாட்டைச் செய்த மீனவர் இந்த முடிவைக் கேட்டு முதலில் அதிர்ச்சியடைகிறார். காரணங்களைக் கேட்ட பின் அவருக்குள் இருந்த தந்தை உணர்வு உசுப்பிவிடப்படவே நெகிழ்ந்து போகிறார்.

வீட்டை விட்டு ஓடி ஓரிரவு கழிந்தவுடனே மகளின் புகைப்படத்தைக் கூடத் தீ வைத்து எரிக்கச் சொன்ன தாயார், அவள் அரை கிராம் கற்பு கூடக் குறையாமல் திரும்பிவிட்டாள் என்று உத்திரவாதப்படுத்திக் கொண்டதும் ஈன்ற பெ..முதின் பெரிதுவக்கிறாள். மகனின் கற்பு பற்றி உத்திரவாதம் செய்து கொள்ளாமலேயே கதாநாயகனின் பெற்றோர் உவக்கிறார்கள்.

சகோதரர்கள் சொல்கிற ஆளுக்கு கழுத்தை நீட்ட கதாநாயகி தயார்; அம்மா சொல்லும் கழுத்தில் கயிற்றை மாட்ட கதாநாயகன் தயார். இருந்தாலும் பெற்றோர்கள் 'அடிப்படையில் நல்லவர்கள்' என்பதால் அவர்களைக் குற்றவுணர்வு வாட்டுகிறது. காதலை விடப் பாசமே பெரிது என்று தங்களை நிரூபித்துக் கொண்ட பிள்ளைகளிடம், பெற்றோர் தமது பாசத்தை நிரூபிக்க வேண்டிய தருணமிது, நிரூபிக்கிறார்கள். காதலின் எதிர்காலம் குறித்த நடுக்கத்துடன் அரங்கில் அமர்ந்திருந்த ரசிகர்கள் நிம்மதிப் பெருமூச்சு விடுகிறார்கள்.

சமூகப் பிரச்சினைகள் எதுவும் வேண்டாம், காதல்தான் மனிதகுலத்தின் ஒரே பிரச்சினை என்று காதலையே சுற்றி வந்து கொண்டிருக்கிறது திரையுலகம். காதலுக்காகத் தியாகம், போராட்டம், சாகசங்கள் என்பவை ஒரு புறம் நடந்து கொண்டிருக்க காதலையே தியாகம் செய்யச் சொல்கிறது காதலுக்கு மரியாதை.

காதல் விவரங்களைப் பொருத்தவரை, அதுவரையில் உலகம் எக்கேடு கெட்டால் என்ன என்று கவலையற்று இருக்கும் நபர்கள் 'வில்லங்கமான' காதல் விவகாரங்களில் - அதாவது சாதி மதம் மாறிக் காதலித்தல், அந்தஸ்து வேறுபாடு போன்றவை - மாட்


படிப்பகம்

www.padippakam.com

டிக் கொள்ளும்போது சமூக விழிப்புணர்வு கட்டாயமாக அவர்கள் மீது திணிக்கப்படுகிறது. தங்களது சொந்த நலனுக்காகவாவது சாதி, மத வெறியையோ பணத்திமிரையோ எதிர்த்துப் போராட வேண்டிய கட்டாயம் அவர்களுக்கு ஏற்படுகிறது.

பெற்றோர்கள், சகோதரர்கள், உற்றார் உறவினர்களின் குரூரங்களும், அற்பத் தனங்களும் அப்போதுதான் காதலர்களுக்கு நிதரிசனமாகின்றன.

இயக்குநர் பாசில் மிகுந்த எச்சரிக்கையுடன் அமைத்திருக்கும் திரைக்கதையின்படி இருதரப்பு குடும்பத்தினரும் 'நல்லவர்கள்'தான். எனினும் அவர்களது கெட்ட பக்கத்தைச் சுவைக்கும் வாய்ப்பு அதுவரை பிள்ளைகளுக்குக் கிடைக்கவில்லை.

தங்கள் மீது பெற்றோர் செலுத்தும் பாசத்திற்கு எந்தவித நிபந்தனைகளும், எதிர்பார்ப்புகளும் கிடையாது என்றும் நம்பிக் கொண்டிருந்த பிள்ளைகளுக்கு பிரச்சினை (காதல்) வரும்போதுதான் உண்மை விளங்குகிறது. நிபந்தனைக்குட்படாத காதலோ, பாசமோ, நட்போ கிடையாதென்பது எலும்பில் உரைப்பது போலப் புரிகிறது.

பிறகுதான் அந்த நிபந்தனைகளின் தன்மை என்ன என்ற ஆய்வு துவங்குகிறது. பெற்றோர்கள் சாதி, மதம் பார்க்கிறார்களா, அந்தஸ்தைப் பார்க்கிறார்களா, அழகைப் பார்க்கிறார்களா - எதற்காகக் காதலை எதிர்க்கிறார்கள் என்ற கேள்வியும் அது சரியா, தவறா என்ற சிந்தனையும் வருகிறது. பிறகு அதன்மீது கருத்துப் போராட்டம் நடக்கிறது.


இந்தப் படத்தில் பெண்ணின் சகோதரர்கள் தங்கள் ஒரே தங்கையை கண்ணின் மணியாகக் கருதுகிறார்கள்; அவளைச் சுற்றிவந்து பாட்டெல்லாம் பாடி தங்கள் பாசத்தின் ஆழத்தை ரசிகர்களுக்கு நிரூபிக்கிறார்கள். அவள் வீட்டின் குடும்ப விளக்காக இருக்க வேண்டும் என்பதுதான் இந்தப் பாசத்திற்கு அவர்கள் விதிக்கும் ஒரே நிபந்தனை.

விளக்கு என்றால் குத்துவிளக்கா, நியான் விளக்கா, அத்தகைய விளக்குகள் காதல் மணம் செய்து கொண்டால் விளக்காக நீடிக்க முடியாதா என்ற கேள்விகளுக்கெல்லாம் சகோதரர்கள் சொல்வதுதான் பதில். அதன்மீது விவாதத்துக்கு இடம் கிடையாது.

அதேபோல மகனை நண்பனாக நடத்துபவர் கதாநாயகனின் தந்தை. எனினும் நட்பு எங்கே முடிகிறது, தந்தை ஆதிக்கம் எங்கே தொடங்குகிறது என்பது தந்தைக்குத்தான் வெளிச்சம். அதிலும் விவாதத்திற்கு இடமில்லை.

அத்தகையதொரு விவாதம் நடந்திருந்தால் குடும்பத்தினரின் பல விகாரங்கள் வெளிப்பட்டிருக்கும். பல தமிழ் சினிமாக்களில் பணக்காரக் காதலிகள், தந்தையின் பணத்திமிரை எதிர்த்து 5 நிமிடம் பொரிந்து தள்ளிவிட்டு, கட்டிய ஃபாரின் சேலையுடன் ஏழைக் காதலனின் வீட்டுக்கு வந்து, நுழைந்தவுடனேயே அம்மிக் கல்லில் மசாலா அரைப்பது, மாமியாருக்குத் துணி துவைப்பது போன்ற பணிகளில் ஈடுபடுவதைப் பார்த்திருக்கிறோம்.

ஆனால் அவையெல்லாம் பாசில்



படத்தைப் போல 'எதார்த்தமாக' எடுக்கப்பட்ட படங்களல்ல; கதாபாத்திரங்களும் எதார்த்தமானவர்கள் அல்லர்.

நல்லவர்கள், கண்ணியமானவர்கள், அன்பானவர்கள், நாகரிகமானவர்கள், படித்தவர்கள் என்றெல்லாம் தோற்றம் தருகின்ற காதலர்களின் குடும்பத்தினர் ஏன் இந்தக் காதலை எதிர்க்கிறார்கள் என்ற விவகாரத்தை இயக்குநர் கிளறியிருந்தால், அவர்களது தோலைக் கொஞ்சம் உரசியிருந்தால், துர்நாற்றங்கள் ஒவ்வொன்றாக வெளிப்பட்டிருக்கும். அந்த மோதலினூடாக காதலர்கள் தங்கள் சொந்த நிறத்தையும், தரத்தையும் அறிந்து கொள்ளும் வாய்ப்பு கிட்டியிருக்கும். எனவேதான் விசயத்திற்குள் போகாமல் காதலா, பாசமா என்றொரு மோசடியான உணர்ச்சி நாடகத்தை நடத்தி எல்லா 'நல்லவர்களையும்,' தயாரிப்பாளரையும் சேர்த்துக் காப்பாற்றிக் கரை சேர்த்து விட்டார் இயக்குநர்.

இறுதிக் காட்சியில் சிறிய மாற்றம் செய்து தப்பி ஓடிய காதலர்கள் சிக்கிக் கொள்வதாக அமைத்திருந்தால் என்ன ஆகியிருக்கும்?

''நம்மள வெட்டணும் குத்தணும்னு நம்ம குடும்பத்துக்காரங்க அலையறதுக்கு காரணம், அந்த அளவு அவுங்க நம்ம மேல பாசமாக இருக்கிறதுதான்'' என்று கதாநாயகி கூறிய விளக்கம் நிரூபணமாகியிருக்கும்.

சுவாரசியமான பாசம்தான். பெற்ற பிள்ளையை விடப் பாசமாக ரேஸ் குதிரைகளை வளர்க்கும் பணக்காரர்கள், அந்தக் குதிரையால் பந்தயத்தில் வெற்றி பெற முடியாவிட்டால், அதனால் தன் கவுரவமும் குதிரையின் கவுரவமும் சேர்த்து பாதிக்கப்படும் என்ற கவலையால் அதனைச் சுட்டுக் கொன்று விடுவார்களாம். சாதி வெறியர்கள் பெற்ற பிள்ளைகளையே வெட்டிக் கொல்வது கூட இத்தகைய 'பாச உணர்வு' காரணமாகத்தான்.

எந்த லட்சியமும் வேண்டாம்; அதற்காகப் போராடுவதும் வேண்டாம்; காரியவாதமே சிறந்த பண்பாடு என்ற போக்கு பரவிவரும் இன்றைய சூழலில் நோகாமல் லாட்டரி பரிசு போல காதலும் வெற்றியடைய வேண்டும் என்று கருதுவோர் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது போலும்!

காதல் கோட்டை படம் பார்த்துவிட்டு கைப்பையில் தன் முகவரியை எழுதி வைத்து, அந்தப் பையை பேருந்தில் வேண்டுமென்றே தவறவிட்டுவிட்டு, யாராவதொரு 'அஜித்' அதை கண்டெடுப்பான் என்ற கனவில் இருந்தாளாம் ஒரு பெண். பையை எடுத்தவன் ஒரு ரவுடி. பிறகு அந்தக் காதல் கோட்டையிலிருந்து தப்பிக்க அந்தப் பெண் போலீசை நாட வேண்டி வந்தது. இது அப்போது வந்த பத்திரிகை செய்தி.

ரசிகைகள் யாரும் காதலனிடம் சங்கிலியைத் தவறவிட வேண்டாம்; சங்கிலி திரும்பாது. ரசிகர்கள் யாரும் சங்கிலியைத் திருப்பிக் கொடுக்க காதலி வீட்டுக்குப் போக வேண்டாம்; ஆள் திரும்ப முடியாது.

• குப்பண்ணன்



படிப்பகம்

www.padippakam.com

# அயோத்தி: காங்கிரசின் கரசேவை நீதிமன்றம் மேற்பார்வை இந்துவெறியர் கொண்டாட்டம்

1992 டிசம்பர் 6-ஆம் தேதி பாபர் மசூதி இடிக்கப்பட்டதற்குப் பின், மசூதியா கோயிலா என்பதை முடிவு செய்யும் பொறுப்பை நீதிமன்றத்திடம் தள்ளி விட்டுவிட்டு, காங்கிரசு முதல் கம்யூனிஸ்டுகள் வரையிலான எல்லா கட்சிகளும் ஒதுங்கிக் கொண்டபின், டிச-6 கருப்பு நாள், இறந்து போன கொள்ளுப் பாட்டனின் நினைவு நாளைப் போன்று உணர்ச்சி மறத்ததாக ஆக்கப்பட்ட பின்... இப்போது திடீரென்று எழுந்தது.

'அயோத்தி குண்டு' என்று தலைப்பிட்டு 'தி வீக்' ஆங்கில நாளேடு ஒரு கட்டுரை வெளியிட்டது. கோயில் கட்டுவதற்காகத் தயாரிப்புப் பணிகள் அயோத்தியிலேயே பகிரங்கமாக நடந்து வருவதையும், இராசஸ்தானிலிருந்து தயார் நிலையில் தூண்கள் வந்து இறங்கியிருப்பதையும் புகைப் படங்களுடன் வெளியிட்டது. "பாரதீய ஜனதாவுக்குப் பெரும்பான்மை கிடைக்கும் வரையில் ராமன் காத்திருக்க மாட்டான்" என்று விசுவ இந்து பரிசத் சாமியார்கள் கூறும் பேட்டியையும் வெளியிட்டது.

உடனே சோனியா காந்தி வாஜ்பாயிக்கு ஒரு கடிதம் எழுதினார்; கட்டுமான வேலைகள் இரகசியமாக நடப்பதாகவும், நீதிமன்றத் தீர்ப்பு வருவதற்கு முன்னால் விசுவ இந்து பரிசத் திடீரென கோயில் கட்டிவிடும் என்று அஞ்சுவதாகவும், அப்படி ஏதாவது நடந்தால் அது மதச்சார்பின்மைக்கு விரோதமானது என்றும் அதற்கு பா.ஜ.க. அரசுதான் பொறுப்பேற்க வேண்டும் என்றும் கடிதம் எழுதினார்.

இதற்கு வாஜ்பாயி அளித்த பதில் மழுப்பலாக இருக்கிறது என்று கூறி காங்கிரசும் பிற எதிர்க் கட்சிகளும் இப்பிரச்சினையைப் பாராளுமன்றத்தில் எழுப்பினர். நீதிமன்றத் தீர்ப்பைத் தனது அரசு அமல்படுத்தும் என்று வாஜ்பாயி உறுதியளித்தார்.

அணுகுண்டு பிரச்சினையைப் போலவே அயோத்தி குண்டு பிரச்சினையும் அத்தோடு முடிந்தது.

பிரச்சினை அத்தோடு முடிந்து விட்டதா? கோயில் கட்டுவதற்கான தயாரிப்புப் பணிகளை காங்கிரசு கோரியதைப் போல விசுவ இந்து பரிசத் நிறுத்தி விட்டதா? இல்லை. அப்படியானால் காங்கிரசும் எதிர்க் கட்சிகளும் ஏன் மவுனமாகி விட்டனர்? நீதிமன்றத்தில் உத்தரவு மீறப்படும் என்று நாடே அலறிக் கொண்டிருக்கும் போது, நீதிபதிகள் ஏன் மவுனம் சாதிக்கின்றனர்?

இந்தக் கேள்விகளுக்கு விடை கண்டாக வேண்டும். ஏனென்றால் மசூதியை இடித்தது தவறு என்று கருதும் இந்த நாட்டின் பெரும்பான்மையான மக்களும், இந்து மதவெறியர்களின் தாக்குதலுக்கு இலக்காகியிருக்கும் முஸ்லீம் மக்களும் நீதிமன்றத்திலிருந்து தங்களுக்கு நியாயம் கிடைக்கும் என்று நம்புகிறார்கள். பாரதீய ஜனதாவை எதிர்க்கின்ற கட்சிகள் மதச்சார்பற்ற கட்சிகள் என்றும், அவர்கள் வெற்றி பெற்றால் டிசம்பர் 6-இல் இழைக்கப்பட்ட அநீதி சரி செய்யப்படும் என்றும் நம்பி வாக்களிக்கிறார்கள்.

மசூதியின் மீதும் கோயிலின் மீதும் கொண்டிருக்கும் மூடநம்பிக்கையைக் காட்டிலும் இந்த மூட நம்பிக்கை மிக அபாயகரமானது என்பதால் கடந்த காலத்தில் நடந்ததென்ன என்பதைச் சுருக்கமாக நினைவுபடுத்துகிறோம்.

★☆★

பாசிசத்தின் தாய்வீட்டையே தனது தாய்வீடாகக் கொண்டவரும், முதல் இந்திய பாசிஸ்டின் மருமகளும், இரண்டாவது பாசிஸ்டின் மனைவியுமான அம்மையார்தான் இன்று "இந்து பாசிசத்திடமிருந்து" நாட்டைக் காப்பாற்ற வந்திருக்கும் தலைவி.

பாபர் மசூதிக்குள் திருட்டுத்தனமாக ராமன் சிலை நுழைக்கப்பட்டதிலிருந்து சுமார் 40 ஆண்டு காலமாக நீதிமன்ற உத்தரவின் பேரில் பூட்டிக் கிடந்த மசூதியைத் திறந்துவிட்டு, அங்கே ராமன் சிலையை வழிபடுவதற்கு மட்டும் அனுமதி வழங்கி பிரச்சினையைத் துவக்கி வைத்தவர் அம்மையாரின் கணவர்.

ஷாபானு தீர்ப்புக்கெதிராக முஸ்லிம் பழமைவாதிகளை திருப்திப்படுத்த சட்டம் கொண்டு வந்ததன் விளைவாக, எங்கே இந்து ஓட்டுகளை பா.ஜ.க. அள்ளிவிடுமோ என்று அஞ்சி, இந்து ஓட்டைக் கவர்வதற்காக ராஜீவ் செய்த தந்திரம்தான் இது என்பது அன்று ராஜீவின் வலது கரமாக இருந்த அருண் நேரு அளித்துள்ள வாக்குமூலம். இது காங்கிரசின் முதல் மோசடி.

பிறகு செங்கல் யாத்திரை, ரத யாத்திரை, அப்புறம் டிசம்பர் 6 கரசேவை.

டிசம்பர் 6, 1992 அன்று பாபர் மசூதியை இந்து மதவெறிக் காலிகள் இடித்துத் தரை மட்டமாக்கி முடிக்கும் வரை அன்றைய காங்கிரசு பிரதமர் நரசிம்ம ராவ் தலையிடவில்லை; மசூதியை இடித்த இடத்தில் தற்காலிகக் கோயில் ஒன்றை மறுநாள் கட்டி முடிக்கும் வரை ராவ் தலையிடவில்லை. இது இரண்டாவது மோசடி.

டிசம்பர் 7-ஆம் தேதி விழித்துக் கொண்ட ராவ் அரசு, மசூதியை மீண்டும் கட்ட முயற்சிக்காவிட்டாலும், குறைந்தபட்சம் அந்தத் திடீர் கோயிலை அப்புறப்படுத்தக்கூட முயற்சிக்காமல் கோயில் தொடர்ந்து நீடிக்க அனுமதித்தது. இது மூன்றாவது மோசடி.

1993, ஜனவரி 7-ஆம் தேதி ராவ் அரசு அவசரச் சட்டமொன்றின் மூலம் மசூதி வளாகம் முழுவதையும் அரசு கையகப்படுத்துவதாக அறிவித்தது. நீதிமன்றத்தின் இறுதித் தீர்ப்பு வரும் வரை தற்போதுள்ள திடீர் கோயில் தொடர்ந்து நீடிக்கும் என அறிவித்தது. இது நான்காவது மோசடி.

இத்தனைக்கும் பிறகு இப்பிரச்சினை குறித்து காங்கிரஸ் அரசு வெளியிட்ட வெள்ளை அறிக்கையில், மேற்கூறிய எதைப் பற்றியும் விளக்கம் சொல்லாமல், மசூதியை மீண்டும் கட்டித் தருவதாக வாக்குறுதி அளித்தது. இது ஐந்தாவது மோசடி.

ஆனால், இந்த ஆறு ஆண்டுகளில் மசூதியை மீண்டும் கட்டுவதற்கான எந்த முயற்சியிலும் காங்கிரஸ் ஈடுபடவில்லை என்பது மட்டுமல்ல, குறைந்த பட்சம் அந்தக் கருத்தை இன்னொரு முறை பேசக் கூட இல்லை. மாறாக, கோயிலா - மசூதியா என்று நீதிமன்றம் தீர்ப்பு சொல்லும் வரை தற்போதுள்ள நிலைமை நீடிக்க வேண்டும் என்று மட்டுமே பேசி வருகிறது.

இந்த நம்பிக்கைத் துரோகத்தின் விளைவாக முஸ்லீம் மக்களின் வாக்குகளை மொத்தமாக இழந்ததால், பாபர் மசூதியைக் காக்கத் தவறியதற்காக வருத்தம் தெரிவிப்பதாக அறிவித்தது.

பல்லில் நாக்குப் படாமல் 'ஸாரி' என்று அம்மையார் சொன்னவுடனே முஸ்லிம் மக்கள் ஒன்றும் உருகிவிடவில்லை. எனினும் பேய் ஆட்சி செய்


படிப்பகம்

www.padippakam.com

யும்போது நாயிடம் கூட நயந்து போக வேண்டும் என்பதுதானே நிலைமை!

இப்போது விசுவ இந்து பரிசத் கோயில் கட்டத் திட்டமிடுவதைக் கடுமையாக எதிர்ப்பதைப் போலக் காட்டிக் கொள்வதன் மூலம் மீண்டும் 'மதச்சார்பின்மை' போர்வையை எடுத்து போர்த்திக் கொள்ள காங்கிரசு முயன்றது. ''கட்டிட வேலையை இன்றைக்கா துவங்கினோம்? நீங்கள் விசுவ இந்து பரிசத்தைத் தடை செய்திருந்தபோதே வேலை நடந்து கொண்டுதான் இருந்தது. இன்றைக்கு ஏன் சும்மா அலட்டுகிறீர்கள்?'' என்று கூறி காங்கிரசை மீண்டும் அம்மணமாக்கியது விசுவ இந்து பரிசத்.



தொலையட்டும், இப்போது ''கோயில் கட்டும் வேலையை விசுவ இந்து பரிசத் நிறுத்த வேண்டும்'' என்று வாஜ்பாயிடம் காங்கிரசு கூறியதே அதிலாவது நாணயமாக இருந்ததா என்றால் இல்லை. பாராளுமன்றத்தில் இதனை வலியுறுத்தி ஒரு தீர்மானத்தைக் கொண்டு வருவது என்றும் பா.ஜ.க. அல்லாத எல்லாக் கட்சிகளிடமும் ஆதரவைக் கோருவது என்றும் முடிவு செய்த காங்கிரசு, பிறகு அத்திட்டத்தையும் கைவிட்டது.

இனி என்ன செய்தாலும் முஸ்லீம்களின் வாக்குகள் காங்கிரசுக்குக் கிடைக்க உத்திரவாதமில்லை எனும் போது, இத்தகைய நடவடிக்கையின் மூலம் இந்து வாக்குகளையும் இழந்து விட வேண்டாம் என்பது இதற்கு ஒரு காரணம்; ஒரு வேளை தீர்மானம் வெற்றி பெற்றுவிட்டால் பா.ஜ.க. ஆட்சி உடனே கவிழும்; மாற்று அரசு அமைக்க கவிழ்த்துப் பயனில்லை என்பது இரண்டாவது காரணம்.

எனவேதான் கட்டுமானப் பணிகளை நிறுத்த முடியாது என்று பா.ஜ.க. திமிராகக் கூறிய பின்னரும், ''நீதிமன்றத் தீர்ப்பை மதிப்போம்'' என்ற வாஜ்பாயின் வாக்குறுதியைக் காட்டி பிரச்சினையிலிருந்து காங்கிரசு நழுவிக் கொண்டது. இதுவரை காங்கிரசு செய்த அனைத்து மோசடிகளுக்கும் தாய் போன்றது சோனியாவின் இந்த மோசடி.

★☆★

**கா**ங்கிரசுக்குச் சற்றும் இளைத்ததல்ல நீதித்துறை. மசூதி இடிக்கப்படும் என்ற சூழ்நிலை நிலவிய போதும் கல்யாண் சிங்கிடம் சத்தியம் வாங்கிக் கொண்டு கரசேவையை அனுமதித்தது. மசூதி இடிக்கப்பட்டபின், நரசிம்மராவ் கொண்டு வந்த சட்டத்திற்கெதிராக உச்ச நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டது.

''இந்தச் சட்டம் ஒரு மதத்தினருக்குச் சாதகமாகவும், இன்னொரு மதத்தினருக்குப் பாதகமாகவும் இருப்பதால் இது மதச் சார்பின்மைக் கொள்கைக்கும், அரசியல் சட்டத்திற்கும் எதிரானது'' என்று உச்சநீதிமன்றத்தின் இரு நீதிபதிகள் ஆட்சேபித்த போதும், 3 நீதிபதிகளைக் கொண்ட பெரும்பான்மை இச் சட்டத்தை அங்கீகரித்தது.

மசூதியை இடித்த இடத்தில் கட்டிய திடீர் ராமர் கோயிலில் வழிபாடு நடத்த அலகாபாத் உயர் நீதிமன்றம் அனுமதியளித்தது. உச்ச நீதிமன்றத்திற்கு அளித்த வாக்குறுதியை மீறி மசூதியை இடிக்க அனுமதித்தற்காக கல்யாண் சிங் மீது உச்ச நீதிமன்றம் ''கோர்ட் அவமதிப்பு நடவடிக்கை'' இதுவரை எடுக்கவில்லை. (கல்யாண் சிங்கிற்கு விதிக்கப்பட்ட ஒரு நாள் தண்டனை இதற்கானதல்ல) விசாரணை முடிவின்றித் தள்ளிப் போடப்படுகிறது.

மசூதியா - கோயிலா, மசூதி இருக்கும் நிலம் யாருக்குச் சொந்தம் என்பது தொடர்பான அனைத்து வழக்குகளையும் விசாரிக்கும் அலகாபாத் உயர் நீதிமன்றம் வழக்கை வேண்டுமென்றே இழுத்தடிக்க விசுவ இந்து பரிசத்தை அனுமதிக்கிறது.

1992-இல் மசூதி இடிக்கப்பட்டதற்காக அத்வானி உள்ளிட்ட 49 பேர் மீது சி.பி.ஐ. போட்ட கிரிமினல் வழக்கில் 6 ஆண்டுகள் கழித்து இப்போதுதான் செசன்சு நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது.

'நீதிமன்றத் தீர்ப்பு - நீதிமன்றத் தீர்ப்பு' என்று எதிர்க் கட்சிகள் கூச்சலிடுகிறார்களே அந்த நீதிமன்றங்கள் இவ்வழக்கில் நடந்து கொண்ட முறைக்கு மேற்கூறியவை சில சான்றுகள்.

சரி. கோயிலா மசூதியா என்று அலகாபாத் உயர் நீதிமன்றம் முடிவு செய்யும் வரை மைய அரசின் கட்டுப்பாட்டில் இருக்க வேண்டும் என்று உச்ச நீதிமன்றம் பணித்ததே அந்த ''வழக்கிடைச் சொத்து'', (அதாவது மசூதி இடிக்கப்பட்ட இடத்தில் கட்டப்பட்ட திடீர் கோயிலும் அதைச் சுற்றிலும் உள்ள நிலமும்) எப்படி பராமரிக்கப்படுகிறது.

4000 துணை இராணுவத்தினர் அந்த திருட்டு ராமர் கோயிலுக்கு காவல் நிற்கிறார்கள். பாதுகாப்புக்காக ஒவ்வொரு மாதமும் 5 கோடி ரூபாய் வீதம் இதுவரை 350 கோடி ரூபாய் செலவிடப்பட்டுள்ளது.

மசூதி இடிப்பின் பிரதான குற்றவாளியும் மசூதி இடிப்பையொட்டி தடை செய்யப்பட்ட அமைப்புமான விசுவ இந்து பரிசத், அந்த வளாகத்தின் நுழைவாயிலேயே அலுவலகம் வைத்து கோயில் கட்ட நிதி வசூல் செய்கிறது. (மசூதி கட்ட நிதி வசூலிப்பவர்களோ, முஸ்லீம்களோ அங்கே யாரும் கிடையாது).

2000 சாமியார்களை அயோத்தியில் தங்க வைத்து, அவர்களுக்குச் சோறு போடுவதற்காக அங்கே வரும் பார்வையாளர்களிடம் வி.இ. பரிசத் கட்டாய வசூல் நடத்துகிறது.

அந்தக் கோயிலில் குறிப்பிட்ட நேரங்களில் முறையான வழிபாடுகள் நடத்தப்படுகின்றன.

அங்கிருந்து 5 கி.மீ. தொலைவில் இரண்டு சதுர கிலோ மீட்டர் பரப்பளவு கொண்ட கரசேவகபுரத்தில் கோயிலுக்


படிப்பகம்

www.padippakam.com

கான தூண்கள் சிற்பங்கள் முதலானவை தயாராகிக் கொண்டிருக்கின்றன.

இந்த இடம் தாவாவிற்கு உரிய இடமாம்; கோயிலா - மசூதியா என்று நீதிமன்றம் முடிவு செய்யும் வரை மைய அரசின் கட்டுப்பாட்டில் வைக்கப்பட்டுள்ள இடமாம்!

நீதிமன்றமோ, காங்கிரசு உள்ளிட்ட கட்சிகளோ மதச்சார்பின்மைக் கோட்பாட்டை பின்பற்றிக் கிழப்பது இருக்கட்டும். வழக்கிடைச் சொத்துக்களைக் கையாளும் சட்ட நடைமுறைகளாவது நாணயமாகப் பின்பற்றப்பட்டுள்ளதா எனப் பாருங்கள்!

கட்டிடப் பணிகளை நிறுத்துவது இருக்கட்டும். பிரச்சினைக்குரிய இடத்தின் வாயிலில் மசூதி இடிப்பின் பிரதான குற்றவாளியாகிய வி.இ. பரிசத் அலுவலகம் அமைந்திருப்பதையோ, கோயிலுக்கு வசூல் செய்வதையோ, அங்கே வழிபாடு நடப்பதையோ எந்தக் கட்சியாவது எதிர்த்ததா? அல்லது இப்போதாவது எதிர்ப்பு தெரிவிக்கிறதா? நீதிமன்றம்தான் இதில் தலையிடுகிறதா?

**''கட்டிடப் பணிகளை நிறுத்துவது இருக்கட்டும். பிரச்சினைக்குரிய இடத்தின் வாயிலில் மசூதி இடிப்பின் பிரதான குற்றவாளியாகிய வி.இ. பரிசத் அலுவலகம் அமைத்திருப்பதையோ, கோயிலுக்கு வசூல் செய்வதையோ எந்தக் கட்சியாவது எதிர்த்ததா? நீதிமன்றம் தான் இதில் தலையிடுகிறதா?**

ஆனால், எதிர்க் கட்சிகள் அனைவராலும் நம்பிக்கை நட்சத்திரமாகச் சித்தரிக்கப்படும் நீதிமன்றத்தைப் பார்ப்பன மதவெறிக் கும்பல் கால் தூசளவு கூட மதிப்பதில்லை. தனது தேர்தல் அறிக்கையில் கூட நீதிமன்றத் தீர்ப்பின்படி நடப்பதாக பா.ஜ.க. கூறவில்லை. நீதிமன்றத் தீர்ப்பு தனக்கு எதிராக இருந்தாலும், அந்தத் தீர்ப்பை முறியடிக்கும் விதத்தில் பாராளுமன்றத்தில் சட்டமியற்றி கோயில் கட்ட ஏற்பாடு செய்வோம் என்பது பா.ஜ.க.வின் ஒரு வாக்குறுதி. நீதிமன்றத் தீர்ப்பை மதிக்கமாட்டோம் என்பதற்கான தெளிவான முன்னறிவிப்பு இது. இந்து பாசிசத்தைச் சட்டபூர்வமாக்குவதற்கான ஏற்பாடு இது.

அல்லது மசூதியை இடித்த இடத்தில் கோயில் கட்டுவதற்கு ஒப்புக் கொள்ள வேண்டும் என்ற நிபந்தனை அடிப்படையில் முஸ்லீம்களுடன் பேச்சு வார்த்தை நடத்துவோம் என்பது, பிரச்சினையைத் தீர்ப்பதற்கு பா.ஜ.க. முன்வைக்கும் சமாதானத் தீர்வு. அதாவது முஸ்லீம் மக்களும், மதச் சார்பற்ற சக்திகளும் தங்கள் அடிமை முறியைத் தங்கள் கையாலேயே எழுதித் தர வேண்டும் என்பது இதன் பொருள்.

ஆக, நீதிமன்றத்தை பா.ஜ.க. மதிக்காது; எதிர்க் கட்சிகள் மதிக்கும். மதிக்க வேண்டுமென நமக்கும் உபதேசம் செய்யும்.

இடித்த இடத்தில் மசூதியைக் கட்ட வேண்டும் என்று நீதிமன்றம் தீர்ப்பளித்தால் அதை பா.ஜ.க. மதிக்காது. ஒரு வேளை கோயில் கட்ட வேண்டும் என்று தீர்ப்பளிப்பதாலோ கல் எடுத்துக் கொடுப்பதற்கு எதிர்க்கட்சிகள் தயாராக இருக்கும்.

''நீதி மன்றத் தீர்ப்பு எதுவாக இருந்தாலும் அமல்படுத்துவோம். தீர்ப்புக்கு எதிராக யாரும் செயல்பட்டால் அதைத் தடுப்போம்'' என்று பேசியிருக்கிறார் வாஜ்பாயி.

மசூதியை இடிப்பதற்கு முன் கல்யாண் சிங்கும் கூட இப்படித்தான் வாக்குறுதி கொடுத்தார். இப்போது தன்னை அவமதித்து விட்டதாக கல்யாண் சிங் மீது வழக்கு போட்டுள்ளது உச்ச நீதிமன்றம். அடுத்தாக வாஜ்பாயி.

''கணிதத்தில் இரண்டு கழித்தல் குறிகள் சேர்ந்து ஒரு கூட்டல் குறியாக மாறுவது போல, இரண்டு ஒழுக்கக் கேடுகள் சேர்ந்தால் ஒரு கற்பு நெறியாகிவிடுகின்றன'' என்று காதல் இல்லாத கட்டாயத் திருமணங்களைக் கேலி செய்து எழுதினார் எங்கெல்ஸ்.

அதேபோல, இரண்டு அவமதிப்புகள் சேர்ந்தால் ஒரு மரியாதை என்று உச்ச நீதிமன்றமும் தலைநிமிர்ந்து கொள்ளலாம்.

• சூரியன்

**இந்து மதவெறிப் பாசிச பயங்கரவாதிகளை முறியடிப்போம்!**

## முதற்கட்டப் பிரச்சார இயக்கம் 'ஜூன் - செப்' 98

## தமிழகமெங்கும் தெருமுனைக் கூட்டங்கள், பொதுக் கூட்டங்கள்

* 'இந்து ஒற்றுமை' என்பது பார்ப்பன, மேல்சாதி ஆதிக்கம்! 'தேச ஒற்றுமை' என்பது இனமொழி ஒடுக்குமுறை!
* ஆர்.எஸ்.எஸ்., பா.ஜ.க. கும்பல் ஏகாதிபத்தியங்களின் எடுபிடி! 'சுதேசி' என்பது மதவெறியை மறைக்கும் முகமூடி!
* நவாஸ் செரீபின் குண்டு, முஸ்லீம்களையும் கொல்லும். வாஜ்பாயின் குண்டு, இந்துக்களையும் கொல்லும். அணுகுண்டு யுத்தம் கிரிக்கெட் ஆட்டமல்ல. யுத்தவெறிக்குப் பலியாகாதீர்!
* நிதியமைச்சர் கையில் திருவோடு; இராணுவ அமைச்சர் கையில் அணுகுண்டு.
* மாட்டுக் கறியைத் தடை செய்யக் கோரும் இந்து முன்னணியே, மலிவு விலையில் மட்டன் விற்கத் தயாரா?
* மலேரியா கொசுவை ஒழிக்க மருந்துண்டா? பருத்தியை அழிக்கும் பூச்சிக்கு மருந்துண்டா? விஞ்ஞானிகள் சாதனை மக்களை அழிக்கும் அணுகுண்டா?
* வாங்குவாரின்றி கரும்பு காயுது; பூச்சியடித்து பருத்தி அழியுது; தவிடு விலைக்கு நெல்விலை இறங்குது; உர விலை மூச்சு திணறுது; விவசாயிகளின் எதிரி, பா.ஜ.க. அரசா, பாகிஸ்தானா?

ம.க.இ.க.
வி.வி.மு.
பு.மா.இ.மு.



படிப்பகம்

www.padippakam.com

## தமிழ் மக்கள் இசைவிழா கருத்தரங்கம்:

# இசையும் இறைமையும்

முனைவர் செ.அ. வீரபாண்டியன்

‘இசை என்றாலே இறைவன். இறைவன் என்றாலே இசை’ என்று கருதும் அளவுக்கு இசைக்கும் இறைமைக்கும் நேரடித் தொடர்பு இன்று செல்வாக்குடன் இருக்கிறது.

தமிழ் மரபில் இசையோடு இறைவனை நேரடியாகத் தொடர்புபடுத்தும் தொன்மையான சான்று தேவாரம் ஆகும். ‘‘ஏழிசையாய், இசைப் பயனாய்’’ என்று இசையையே இறைவனாகக் கருதும் முயற்சி தேவாரத்தில் தான் தொடங்கியது. சங்க இலக்கியங்களில் இறைவனைப் பற்றிய பாடல்கள் உள்ளன. இசையைப் பற்றி நிறைய பாடல்கள் உள்ளன. ஆனால் இசையையும் இறைவனையும் நேரடியாகத் தொடர்பு படுத்தும் ஒருபாடலும் இல்லை. பரிபாடல் இசைப் பாடல் ஆகும். அவை எல்லாமே கடவுளைப் பற்றிய பாடல்கள் தாம். ஆனால் அப் பாடல்களில் இசையையும் இறைவனையும் நேரடியாகத் தொடர்புபடுத்தி ஒரு பாடல் கூடக் கிடையாது.

அப்படியென்றால், தேவாரத்திற்கு முன் குறிப்பாகச் சங்க இலக்கியங்களில் இசை எவற்றோடு தொடர்பு கொண்டிருந்தது என்ற கேள்வி எழுகிறது. இசை — இயற்கையோடு, மனித நடவடிக்கைகளோடு நேரடியாகத் தொடர்பு கொண்டிருந்தது. இசையின் ஊற்றுக் கண்களாக இவையே இருந்தன.

உலகெங்கிலுமே இவ்வாறு மனித நடவடிக்கைகள் மற்றும் இயற்கையில் எழும் ஒலிகள் இவற்றின் அடிப்படையிலேயே இசை தோன்றி வளர்ந்தது. குறிப்பிட்ட கால இடைவெளியில் மீண்டும் மீண்டும் நடைபெறும் நிகழ்வுகள் தான் இசைக்கு அடிப்படையாக அமைகின்றன. உதாரணமாக, பழங்கால விவசாயத்தில் ஏற்றம் மூலம் நீரிறைக்கும் செயல், படகில் துடுப்புப் போடும் செயல், தறியில் நெய்யும் செயல் போன்றவை இவ்வரிசையில் அடங்கும். இத்தகைய பண்பினை உள்வாங்கிய தாளயிசை ஆதிக்கம் செலுத்திய இசையே இன்று ‘நாட்டுப்புற இசை’ என்று அழைக்கப்படுகிறது. இயற்கையில் எழும் ஒலிகள் சுர இசைக்கு அடிப்படையாக அமைந்தன.

இதற்கான சில சான்றுகளைக் காண்போம். அசைகின்ற மூங்கிலின் பக்கத்துளைகள் வழியாகக் காற்று உட்புகுந்து வெளியேறி எழுப்பிய இசையே குழலிசையின் அடிப்படை என்பதைப் பின்வரும் அகநானூற்றுப் பாடல் கூறுகிறது.

‘‘ஆடு அமைக்குயின்ற
அவிர் துளை மருங்கின்
கோடை அவ்வளி குழலிசையாக’’
(அகநானூறு, 32, 1-2)

இவ்வாறு உருவான குழல்தான் இசையில் சுரத்தீர்மானிப்புப் பணிக்குப் பயன்பட்டது. சுருதி சேர்த்தல் என்றும் நல்லிசை நிறுக்கப்பட்டது. இசையின் சிறப்பு நல்லிசை நிறுத்தலின் அடிப்படையில் அமைந்ததாகும். தேவாரத்திற்கு முந்தைய காலகட்டத்தில், இசை இறைவனோடு நேரடியாக அடையாளப்படுத்தப்படாத கால கட்டத்தில், நல்லிசை நிறுத்தல் ஒழுங்காக நடைபெற்று, இசை சிறப்புடன் விளங்கியது.

ஆனால் இசை இறைவனோடு நேரடியாக அடையாளப்படுத்துப்பட்ட பின்னால் சுரத் தீர்மானிப்பு நிலையை குழல் இழந்தது. சுரத் தீர்மானிப்புக் கருவி இன்றி கேள்வி ஞான அடிப்படையில் சுருதி சேர்க்கப்படுவது - நல்லிசை நிறுத்தப்படுவது முன் கூறிய வகையில் சிறப்புடன் அமைந்திருந்தது. ‘சங்கீத ரத்னாகரம்’ பற்றி ஆய்வு நூல் எழுதிய ஆர். அரங்கராமானுச அய்யங்காரும், ‘கருணாமிருத சாகரம்’ எழுதிய ஆபிரகாம் பண்டிதரும் ஆங்கிலேயர் கொண்டு வந்த சுரத் தீர்மானிப்புக் குழலுக்கு (PITCH PIPE) முன் கேள்வி ஞானத்தின் அடிப்படையில் நல்லிசை நிறுக்கப்பட்டது எனத் தெரிவித்துள்ளனர். (சான்றுகள்: 1. Sangeetha Rathnakaram a Study: ஆர். அரங்கராமானுச அய்யங்கார்., பக்: 276. 2. கருணாமிருத சாகரம்: பக்: 760-762). எனவே, இசைக்கும் இறைவனுக்கும் இடையே ஏற்பட்ட நெருக்கத்தால், நல்லிசை நிறுத்தல் பாதிக்கப்பட்டு இசையின் சிறப்பு குறைந்தது. இது தமிழிசைக்கு இறைவனால் ஏற்பட்ட பாதிப்பாகும்.

அது மட்டுமல்ல; மனிதன் இயற்கையில், சமூகத்தில் எழும் ஒலிகளின் வட்டணை (RHYTHM) நிகழ்வுகளின் அடிப்படையில் வளர்த்த இசையின் நுட்பங்கள் பற்றிய சான்றுகள் தேவாரத்திற்கு முந்திய இலக்கியங்களில், குறிப்பாகச் சங்க இலக்கியங்களில் நிறைந்து உள்ளன.

பறவைகள், வண்டுகள் எழுப்பும் ஒலிகளில் சுர இசையை அடையாளம் கண்டான் சங்க கால மனிதன். குரல் எனப்படும் ‘ச’ என்னும் இசைச்சுர ஒலியை எழுப்பும் வண்டு, இளி எனப்படும் ‘ப’ என்றும் இசைச்சுர ஒலியை எழுப்பும் வண்டு என்று பலவகை வண்டுகள் எழுப்பும் ஒலியை இசைச்சுர ஒலியாக அவன் அடையாளம் கண்டான்.

சிலப்பதிகாரம் உள்ளிட்ட காப்பியங்களில் இசை தொடர்பான பல தகவல்கள் உள்ளன. சிலப்பதிகாரம் ஓர் இசைக் கருவூலம். ஆனால் சிலப்பதிகாரத்தில் உள்ள இசை தொடர்பான பகுதிகளுக்கு வெளிச்சம் சங்க இலக்கியங்களில் உள்ளன. சிலப்பதிகாரம் உள்ளிட்ட காப்பியங்களில் இசையை இறைவனோடு நேரடியாக அடையாளப்படுத்தக் கூடிய சான்றுகள் இல்லை.

சிலப்பதிகாரத்திற்குப் பின்னர் அரிய இசைக் கருவூலமாக தேவாரம் உள்ளது. இசையை இறைவனோடு நேரடியாக இணைத்தது தேவாரமே. சிவபெருமானை, ‘‘எண்ணாகிப் பண்ணார் எழுத்தானை’’ என்று அப்பர் குறித்துள்ளார். இசையின் ஆடலின் ஏகபோகக் கடவுளாகச் சிவபெருமான் ஆக்கப்பட்டார். பெரும்பாலான சிவத்தலங்கள் ஆடலுக்கும் பாடலுக்கும் முக்கியத்துவம் கொடுக்கப்பட்ட தலங்களாகும். சிவபெருமான் தனது எதிரிகளை - காமன், அந்தகன், காலன் உள்ளிட்டவர்களை - அழித்து ஆடிய ஆடல்களே ‘ஆனந்தத் தாண்டவம்’ என்றழைக்கப்பட்டன.

இவ்வாறு இசை இறைவனோடு நேரடித் தொடர்பு கொண்டதில் சிவபெருமானும், தேவாரமும் முதன்மைப் பங்கு பெற்றிருந்தாலும், இன்று இத்தொடர்பால் வஞ்சிக்கப்பட்டவைகளாகச் சிவபெருமானும், தேவாரமும் உள்ளன. இதன் சான்றாக திருவையாறும், அங்கு ஆண்டு தோறும் நிகழும் தியாகராய இசைவிழாவும் உள்ளன. இந்தப் பாதிப்பு எவ்வாறு நிகழ்ந்தது என்று பார்ப்போம்.



படிப்பகம்

www.padippakam.com

தமிழ் மக்களின் இசை, கொள்கை (Theory), நடைமுறை (Practical) என்ற இரு தளங்களில் இணையாக வளர்ந்து வந்தன. இந்த வளர்ச்சியின் தகவல் சுரங்கமாகத் தேவாரம் இருக்கிறது. தாள இசைச் சுரங்கமாகத் திருப்புகழ் இருக்கிறது. இன்று தமிழ் மக்களின் முன்னேற்றத்திற்கான நோக்கில் இசையை வளர்க்க விரும்புபவர்கள் யாராயினும் அவர்கள் தேவாரம், திருப்புகழ் போன்ற மத இலக்கியங்களில் உள்ள இசை தொடர்பான நுட்பமான தகவல்களை அடையாளம் கண்டு பயன்படுத்த வேண்டும். இத்தகவல்கள் இறைவனுக்குச் சொந்தமல்ல, தமிழ் மக்களின் உடல் உழைப்பாலும், மூளை உழைப்பாலும் உருவான இத்தகவல்கள் இம்மக்களுக்குச் சொந்தமாகும். அவற்றைப் புறக்கணிப்பது அறிவீனம் ஆகும்.

ஆனால் தேவாரத்திற்குப் பிந்தைய காலகட்டத்தில் கொள்கை (Theory) என்ற தளம் பலவீனப்பட்டு வந்தது. ஆனால் பாரம்பரியமாக நடைமுறை (Practice) இசை ஓரளவு பாதுகாக்கப்பட்டு வந்தது. தேவாரத்திற்குப் பிந்தைய கால கட்டத்தில் கொள்கை என்ற தளம் சிவபெருமானை மையமாகக் கொண்ட பெரிய புராணம், திருப்புகழ் போன்ற சைவ இலக்கியங்களிலேயே பாதுகாக்கப்பட்டு வந்தன.



சோழர்கால ஆட்சியில் சோழ மன்னர்கள் சைவத்துக்கு முக்கியத்துவம் கொடுத்துக் கொண்டே மற்ற மதங்களையும் ஆதரித்து வந்தார்கள். முதலாம் இராசராச சோழன் தில்லையில் மூடிக் கிடந்த அறையின் உள்ளிருந்து தேவாரச் சுவடிகளைத் தொகுத்தது இந்தப் பின்னணியிலேயே என்பதையும் புரிந்து கொள்ள வேண்டும்.

சோழர்களுக்குப் பின்னர் ஏற்பட்ட ஹொய்சாளர், விசய நகர மன்னர்கள், நாயக்க மன்னர்கள் மற்றும் மராட்டிய மன்னர்களும் வைணவத்துக்கு முக்கியத்துவம் கொடுத்துக் கொண்டே சைவம் உள்ளிட்ட பிற மதங்களையும் ஆதரித்தனர். அவர்கள் இசை நடனம் உள்ளிட்ட கலைகளைப் பேணி வளர்க்கும் முயற்சிகளிலும் ஈடுபட்டனர். இந்தக் காலகட்டத்தில் சைவமதம் தாம் முன்னர் பெற்றிருந்த அரசின் ஆதரவை மெல்ல மெல்ல இழந்து வந்தது. சில சைவக் கோயில்கள் வைணவக் கோயில்களாக மாற்றப்படும் அளவுக்கு இப்போக்கு தொடர்ந்தது. சைவத்திற்கு ஏற்பட்ட இந்த வீழ்ச்சி சைவம் தாங்கியிருந்த இசைக் கொள்கைக்கும் ஏற்பட்டது.

தமிழ் மன்னர்களான சோழ மன்னர்கள் ஆட்சியில் தாம் பெற்றிருந்த முதன்மையான ஆதரவை இழந்து பலவீனமாகி வந்த தேவார இசையை மாற்றி வைணவத்திற்கு முதலிடம் கொடுக்கும் ஆரிய சார்பு செவ்விசையை உருவாக்கும் ஒரு தேவை வைணவத்திற்கு முதலிடம் கொடுத்த தமிழரல்லாத மன்னர்கள் ஆட்சியில் ஏற்பட்டது.

இந்தத் தேவையானது ஏற்கெனவே வளர்ந்திருந்த நடைமுறை இசையை ஏற்றுக் கொண்டு தேவாரம் கொண்டிருந்த இசைக் கொள்கைக்குப் பதிலாகப் புதிய இசைக் கொள்கைகளை உருவாக்கும் முயற்சிகளில் வெளிப்பட்டது.

இன்று கர்நாடக இசைக் கொள்கையாக முன்வைக்கப்படும் 'மேளகர்த்தா' இந்தக் காலத்தில் இந்தத் தேவையின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட ஒன்றாகும். அக்காலத்தில் பலரால் இத்தகைய புதிய இசைக் கொள்கைகள் உருவாக்கப்பட்டு முன்வைக்கப்பட்டன. ஆனால் வேங்கடமகி என்ற பார்ப்பனர் அரசரிடம் செல்வாக்குப் பெற்றிருந்த காரணத்தினால் அவர் உருவாக்கிய மேளகர்த்தா முறை நடைமுறைக்கு வந்தது. பிற ஏற்றுக் கொள்ளப்படாததால் வழக்கிற்கு வராமல் போயின.

மேளகர்த்தா முறையின் அறிவுபூர்வமற்ற கூறுகளைப் பின்வருமாறு வரிசைப் படுத்தலாம்;

1. ஆரோகணம், அவரோகணம் என்று இன்று அழைக்கப்படும் ஏறு நிரல், இறங்கு நிரல் சுரங்களின் அடிப்படையில் பல்லவி, அனுபல்லவி, சரணம் போன்ற இசைப் பகுதிகள் எவ்வாறு உருவாக்க வேண்டும் என்பதற்கு இலக்கணம் மேளகர்த்தா இசைக் கொள்கையில் இல்லை. ஆனால் தமிழிசையில் இதற்கான இலக்கணம் இருந்ததை ஆபிரகாம் பண்டிதர் நிறுவியுள்ளார்.

2. ஒரு பண்ணிற்குச் சுர இசையும், தாளயிசையும் எவ்வாறு அமைக்கப்பட வேண்டும் என்பதற்கு அசை, சீர், தூக்கு ஆகியவற்றின் அடிப்படையில் முறையான இலக்கணம் தமிழிசையில் இருக்கிறது. (இதனை நான் ''அல்தூசரின் சித்தாந்தம் முதலிய கட்டுரைகள்' என்ற ஆய்வுவட்ட வெளியீட்டில் இடம் பெற்றுள்ள இசை பற்றிய எனது கட்டுரையில் நிறுவியுள்ளேன்). ஆனால் மேளகர்த்தா இசைக் கொள்கையில் இத்தகைய இலக்கணம் இல்லை.

3. மேளகர்த்தா முறை பகைச்சுர ராகங்கள் நிரம்பிய பழுதுபட்ட முறையாகும்.

4. இந்திய இசை ராகங்களைப் பற்றி ஆய்வு செய்து அரிய நூல்கள் எழுதியுள்ள வால்டர் காலிப்மன் எனும் மேல்நாட்டு இசை அறிஞர் மேளகர்த்தா முறையின் குறைபாடுகளைக் கீழ்வரும் வரிகளில் விளக்கியுள்ளார்: ''மேளகர்த்தாமுறை, முழுமையாகச் சரியானதல்ல (Not Absolutely correct) பல தென் இந்திய இசைவாணர்கள் இக்குறைபாடுகளை அறிந்து அதனைச் சரிப்படுத்த முயன்று வருகிறார்கள். இம்முறையின் குறைபாடுகள் பற்றிப் பொதுவாகவும், சில குறிப்பிட்ட ராகங்கள் பற்றி விரிவாகவும் விவாதிக்கப்படும் சென்னையில் நடைபெறும் பல இசைக் கருத்தரங்குகள் மிகவும் மதிப்பு வாய்ந்தவையாகும்... சில அறிஞர்கள் - உதாரணமாக, முனைவர் மு. சைதன்ய - தேவார வட இந்திய தென்னிந்திய ராகங்களுக்கு முழுவதும் புதிய முறைகள் (Entirely new systems) பயன்படுத்துவது பற்றி ஆதரவாகக் கருத்து தெரிவித்துள்ளார்கள்'' (சான்று: பக் 196: The Ragas of South India - Walter Kaufmann, Oxford and IBM, 1992).

இவ்வாறு மேளகர்த்தா முறையின் குறைபாடுகளை அறிந்து புதிய


படிப்பகம்

www.padippakam.com

இசைக் கொள்கைகள் உருவாக்கும் முயற்சிகள் நடந்து வருகின்றன. தமிழரல்லாத மன்னர்கள் ஆட்சிக் காலத்தில் ஏற்பட்ட திருப்புமுனையைப் போல இப்போதும் ஏற்பட்டுள்ளதைக் காண முடிகிறது.

இதனை ஏன் திருப்புமுனைக் கால கட்டம் என்று கூறுகிறோம்! தேவார இசை கொண்டிருந்த தமிழ் இசைக் கொள்கை வீழ்த்தப்பட்டு அறிவுபூர்வமற்ற மேளகர்த்தா இசைக் கொள்கை அரங்கேறியதன் விளைவாக, நடைமுறையிசை (Practical Music) வளர்ச்சியற்றுத் தேக்கத்திற்கு உள்ளானது. இத்தேக்கத்தின் வெளிப்பாடாக தனிப்பட்ட மனிதன், சமூகம், இயற்கை ஆகியவை நடைமுறையிசையின் உள்ளடக்கத்தில் செல்வாக்கிழந்து ஆரிய சார்பிலான இறைவன் சம்பந்தப்பட்டவையே முதன்மையிடம் பெற்றன. இறைவன் என்ற போர்வையில் பாலியல் உணர்வினைத் தூண்டும் வக்கிர உணர்வுகளும் செல்வாக்குப் பெற்றன.

குறிப்பாக, இன்றுள்ள ஆடலிசையின் உள்ளடக்கத்தை ஆராய்ந்தால் அவை பாலியல் வக்கிர உணர்வுகளை இறைவன் - இறைவி, அதாவது, நாயகன் - நாயகி என்ற போர்வையில் வெளிப்படுத்துபவையாகவே உள்ளன.

அடுத்து, நடைமுறையிசையிலும் தேவார இசை ஒழிக்கப்பட்டு வடமொழி, தெலுங்கு ஆகியவற்றை முதன்மைப்படுத்திய ஆரியசார்பு கர்நாடக இசை எவ்வாறு அரங்கேறியது?

நடைமுறை இசையானது (Practical Music) சைவத் தலங்களில் அந்தந்த தலங்களில் பாடப்பட்ட தேவாரப் பதிகங்கள், நாத சுரங்கள் மூலமாகவம் ஓதுவார்கள் மூலமும் இசைக்கப்பட்டன என்பதைப் பல்லவர், சோழர் காலக் கல்வெட்டுக்கள் தெரிவிக்கின்றன. ஏற்கெனவே குறிப்பிட்டபடி வைணவத்தை முதன்மைப்படுத்திய தமிழர் அல்லாத மேற்கூறிய மன்னர்கள் ஆட்சியில் நடைமுறை இசையாக இருந்த தேவார இசைக்குப் பதிலாக இன்னொரு நடைமுறை இசையை உருவாக்கும் தேவை ஏற்பட்டது.

மக்களிடமிருந்த கடவுள் பக்தி என்ற மூட நம்பிக்கையை லாவகமாகப் பயன்படுத்தி சைவத்திடமிருந்தும் தமிழிடமிருந்தும், தமிழர்களிடமிருந்தும் நடைமுறையிசையைப் பிரித்து வடமொழி, தெலுங்கு என்ற ஆரிய சார்பிலான புதிய நடைமுறையிசை, கர்நாடக இசை என்ற பெயரில் உருவாக்கப்பட்டது.

பழைய நடைமுறை இசையின் வடிவங்களை எடுத்துக் கொண்டு தமிழிற்குப் பதிலாக வடமொழி, தெலுங்கையும், சிவனுக்குப் பதிலாக இராமனையும், சைவத்திற்குப் பதிலாக வைணவத்தையும் முதன்மைப்படுத்தி இந்த நடைமுறை இசை வளர்க்கப்பட்டது.

புதிய இசைக் கொள்கை உருவாக்குவதற்கு வேங்கடமகி என்ற பார்ப்பனர் முதன்மைப் பங்காற்றியது போல புதிய நடைமுறை இசையை உருவாக்குவதற்கு 'மும்மூர்த்திகள்' என்று அழைக்கப்படும் முத்துசாமி தீட்சதர், சியாமா சாஸ்திரி, தியாகராசர் என்று மூன்று பார்ப்பனர்களும் முக்கியப் பங்காற்றினர். இம்மூவரில் தியாகராசருக்கு முதலிடம் கொடுத்து திருவையாறில், மற்ற இருவருக்கும் இல்லாதபடி, இத்தனைச் சிறப்பாக ஆராதனை விழா கொண்டாடப்படுவது ஏன்? இதற்கு இரண்டு காரணங்கள் உண்டு.

**இசை என்பது தமிழுக்கும், தமிழருக்கும், சமூகத்துக்கும் பயன்பட வேண்டுமானால், அறிவுபூர்வமற்ற மேளகர்த்தா இசைக் கொள்கையை ஒழித்து அறிவு பூர்வமான தமிழிசைக் கொள்கைக்குப் புத்துயிர் கொடுக்க வேண்டுமானால், காதல் காமப் பிரச்சினைகளுக்குப் பதிலாக மக்கள் பிரச்சினைகள் ஆடலிசையின் பாடுபொருளாக வேண்டுமானால் இசைக்கும் இறைவனுக்கும் இருக்கும் நேரடித் தொடர்பை உடைக்க வேண்டும்.**

1. அன்றிருந்த தேவார இசை, நாட்டுப்புற இசை, கிழக்கிந்தியக் கம்பெனியின் மூலம் நுழைந்த மேற்கத்திய இசை ஆகியவற்றிலிருந்து இனிமை மிக்க இசை வடிவங்களை எடுத்துக் கீர்த்தனைகளை உருவாக்கியதில் மற்ற இருவரையும் விட தியாகராசரே சிறப்பான இடத்தைப் பெறுகிறார். எடுத்துக் காட்டாக, தியாகராயரின் முதல் பாடல் நாட்டுப்புற இசை தழுவி உருவாக்கப்பட்டது என்பதை வில்லியம் ஜே. ஜாக்ஸன் என்ற ஆராய்ச்சியாளர் "Thyagaraja - Life and Lyrics" என்ற நூலின் மூலம் நிறுவியுள்ளார். அதே போல ஆங்கில இராணுவ இசைப் பாடலான "In an English Garden" என்ற பாடலைத் தழுவி 'வரலீலா - கானலோலா' என்ற பாடலை தியாகராயர் இயற்றினார்.

2. சிவனை, தேவாரத்தை, தமிழை அடிப்படையாகக் கொண்டு ஆடலுக்கும் பாடலுக்கும் சிறப்புப் பெற்ற சைவத் தலமாகிய திருவையாற்றினை - இராமனை மையப்படுத்தி வடமொழி தெலுங்கை முதன்மைப்படுத்தும் இசைத்தலமாக மாற்றியவர் தியாகராயரே.

இந்த விவரங்களை எல்லாம் தெரிந்து கொள்ளாமல் திருவையாற்றில் நடைபெறும் தியாகராய இசை விழாவில் பங்கு கொள்ளும் தமிழர்கள் பரிதாபத்துக்குரியவர்களே. தமது இசையை அழித்துப் பெற்ற வெற்றி விழாவில் தாமே கலந்து கொண்டு முன்னின்று நடத்தும் பரிதாப நிலையை உலகில் வேறெங்கிலும் காண முடியுமா?

எனவே, இசை என்பது தமிழுக்கும், தமிழருக்கும், சமூகத்துக்கும் பயன்பட வேண்டுமானால், அறிவு பூர்வமற்ற மேளகர்த்தா இசைக் கொள்கையை ஒழித்து அறிவு பூர்வமான தமிழிசைக் கொள்கைக்குப் புத்துயிர் கொடுக்க வேண்டுமானால், காதல் காமப் பிரச்சினைகளுக்குப் பதிலாக மக்கள் பிரச்சினைகள் ஆடலிசையின் பாடு பொருளாக வேண்டுமானால் இசைக்கும் இறைவனுக்கும் இருக்கும் நேரடித் தொடர்பை உடைக்க வேண்டும்; இசைக்கும் தமிழுக்கும், இசைக்கும் தமிழ் மக்களுக்கும், இசைக்கும் சமூகத்துக்கும் நேரடித் தொடர்பை ஏற்படுத்த வேண்டும். இம்முறையில் மனித நேயப் பற்றாளர்கள் அனைவரும் சாதிமத வேறுபாடுகளைக் கடந்து ஓரணியில் நிற்க வேண்டும்.

இது ஆத்திக நாத்திகப் பிரச்சினை அல்ல; ஆத்திகத் தமிழர்கள் தாம் விரும்பும் கடவுளை வணங்க இசையைப் பயன்படுத்திக் கொள்ளட்டும். ஆனால் இசையையே இறைவனாகக் கருதினால் சிவனுக்கும், தேவாரத்துக்கும், தமிழுக்கும் தமிழிசைக் கொள்கைக்கும் ஏற்பட்ட அதோகதிதான் தொடரும் என்பதை நினைவுறுத்துகிறேன்.

இசை தமிழுக்கும் தமிழ் மக்களுக்கும் பயன்படுவதற்கு முன் நிபந்தனையாக இசைக்கும் இறைவனுக்கும் உள்ள நேரடித் தொடர்பை அகற்ற தமிழ் மக்கள் இசை விழாவில் சபதமேற்போம்!



படிப்பகம்

www.padippakam.com

**இசுலாம்**

# ஐரோப்பிய அடக்குமுறையும் மதத்தின் புத்துருவாக்கமும் ஏன்?

**கோவை** குண்டு வெடிப்பைத் தொடர்ந்து அன்றாடம் கைது செய்யப்படும் மீசை கூட அரும்பாத தீவிரவாதிகளை இந்தியத் தொலைக் காட்சிகள் படம் பிடித்துக் கொண்டிருக்கும் வேளையில் உலகளவில் இஸ்லாம் ஒரு பிரச்சினை ஆகி வருவதாகச் சித்தரிக்கும் செய்திப் படமொன்றை சமீபத்தில் ஒளிபரப்பியது பிரிட்டிஷ் தொலைக்காட்சி. படத்தின் பெயர் **பிளானட் இஸ்லாம்.**

வளைகுடா நாடுகளில் அல்ல, மேலை நாடுகளில், அதிலும் வால்டேரையும் ரூசோவையும் அளித்த மண்ணில், மதச்சார்பின்மை எனும் அரசியல் கோட்பாட்டை உலகுக்கே அளித்த பிரெஞ்சு மண்ணில் இசுலாமியத் தீவிரவாதம் பரவி வருவதைச் சித்தரிப்பதுடன் தொடங்குகிறது இந்தச் செய்திப் படம்.

1992-இல் பாரிஸ் நகரின் மையப் பகுதியில் ஒரு குண்டு வெடிக்கிறது. பொதுமக்கள் 4 பேர் பலியாகின்றனர். குண்டு வெடிப்பை நடத்தியவர்கள் அல்ஜீரியாவின் இசுலாமியத் தீவிரவாதிகள். உடனே தீவிரப் புலனாய்வு தொடங்குகிறது. ஒரு முஸ்லீம் இளைஞனை நடுவீதியில் சுட்டுக் கொல்கிறது போலீசு. அவன் அல்ஜீரியாவின் இசுலாமிய மதவெறிக் கட்சியுடன் தொடர்புள்ளவன் என்றும், அந்த இளைஞன் கையில் வெடிகுண்டு வைத்திருந்ததால் சுட்டுக் கொல்வதைத் தவிர வேறு வழியில்லாமல் போய்விட்டதென்றும் தனது நடவடிக்கைக்கு விளக்கம் சொல்கிறது போலீசு.

போலீசின் கூற்றை இசுலாமிய மக்கள் ஏற்றுக் கொள்ளவில்லையென்ற போதிலும், மதத்திற்காக உயிரைக் கொடுத்த அந்த இளைஞன்தான் இன்று இசுலாமிய இளைஞர் சமூகத்தின் லட்சிய நாயகன்.

தொடர்ந்து ஆங்காங்கே குண்டுகள் வெடிக்கின்றன. கடந்த 5 ஆண்டுகளில் சுமார் 2000 முஸ்லீம்கள் விசாரணைக்காகக் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். முஸ்லீம்களின் குடியிருப்புப் பகுதிகள் தொடர்ந்து காவல் துறையின் கண்காணிப்பில் வைக்கப்படுகின்றன.

முஸ்லீம் தீவிரவாதி என்ற சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்படும் பல்கலைக் கழக ஊழியர் ஒருவர், பிறகு ஆதாரம் ஏதும் இல்லை என்பதால் விடுவிக்கப்படுகிறார். ஆனால் இதற்காக அவர் 16 மாதங்கள் சிறையிலிருக்க வேண்டி வருகிறது.

ஒரு அல்பேனியப் பெண்ணின் குடிமக்கள் அடையாள அட்டையில் ''தீவிர முஸ்லீம்'' என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. இதன் விளைவாக போலீஸ் அவளை எப்பொழுமே சந்தேகக்கண் கொண்டு பார்க்கிறது. அடையாள அட்டையில் இவ்வாறு குறிப்பிடுவது சட்டவிரோதம் என்று ஆட்சேபிக்கிறாள் அப்பெண். ''அப்படித்தான் குறிப்பிடுவோம்; எங்கே வேண்டுமானாலும் புகார் செய்து கொள்'' என்கிறது நகர நிர்வாகம். அந்தப் பெண் நீதிமன்றத்திற்குப் போகிறாள்.

''பிரான்சு ஒரு சுதந்திர நாடு'' என்று தான் சொல்கிறார்கள். ஆனால், முஸ்லீம்களைப் பொறுத்தவரை ''இது ஒரு சர்வாதிகார நாடு'' என்று பேட்டியளிக்கிறார் ஒரு மௌல்வி.

''பிரான்சின் சட்டதிட்டங்களுக்குக் கட்டுப்பட்டு நடப்பதாக இருந்தால் அவர்கள் இங்கே இருக்கட்டும்; இல்லையேல் பிரான்சை விட்டு வெளியேறட்டும்'' என்கிறார் ஒரு உளவுத்துறை அதிகாரி.

''இந்தக் கட்டிடங்களைக் கட்டுவதற்கும், சாலைகளை அமைப்பதற்கும், நகரை நிர்மாணிப்பதற்கும் எங்கள் பாட்டன்மாரும் உழைத்திருக்கிறார்கள்; நாங்கள் ஏன் வெளியேற வேண்டும்?'' என்று எதிர்க் கேள்வி கேட்கிறார்கள் இசுலாமிய இளைஞர்கள்.

> *அல்ஜீரியாவில் கொல்பவர்கள் முஸ்லீம்கள்; கொல்லப்படுபவர்களும் முஸ்லீம்கள். கடந்த 6 ஆண்டுகளில் 80,000 மக்கள் கொல்லப்பட்டிருக்கின்றனர். மதவெறி சர்வாதிகாரம் வராமல் தடுப்பதாக இராணுவ சர்வாதிகாரிகள் கூறுகிறார்கள். இராணுவ சர்வாதிகாரத்தை எதிர்ப்பதாக மதவெறிச் சர்வாதிகாரிகள் முழங்குகிறார்கள்.*

''இருட்டிய பிறகு முஸ்லீம் குடியிருப்புப் பகுதிக்குப் போய்ப் பாருங்கள். உயிரோடு திரும்புவீர்களா பார்க்கலாம்; தலையைச் சீவி விடுவார்கள்'' என்கிறார்கள் வெள்ளை கிறித்துவ இளைஞர்கள்.

''அவர்கள் மட்டும் கும்பல் கும்பலாக எங்கே வேண்டுமானாலும் சுற்றலாம்; ஆனால் நாங்கள் கூட்டமாகக் கடைவீதியில் சென்றால் அது ரவுடித்தனம் - அப்படித்தானே'' என்று வெறுப்பாகக் கேட்கிறார்கள் முஸ்லீம் இளைஞர்கள்.

பாரிஸ் நகரில் மட்டுமல்ல, பிரான்சின் பிற சிறிய நகரங்களிலும் பரவி வருகிறது இந்தப் பிரச்சினை. பர்தா அணிந்து வரக்கூடாது என்று கூறிய பள்ளிக்கூட நிர்வாகத்தை எதிர்த்து நீதிமன்றத்திற்குச் சென்று பர்தா அணியும் உரிமையை வாதாடிப் பெற்றுவிட்டாள் ஒரு 17 வயது முஸ்லீம் பெண்.

ஆனால் நிர்வாகம் விடுவதாக இல்லை. ''சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் என்பது பிரெஞ்சு சமூகத்தின் கோட்பாடு. பெண்கள் பர்தா அணிவது ஆண் - பெண் சமத்துவத்துக்கு எதிரானது. வெளியே வேண்டுமானால் அவர்கள் பர்தா அணிந்து கொள்ளட்டும்; ஆனால் வகுப்பிற்குள்ளே அதை அனுமதிக்க முடியாது. பள்ளியின் விதிமுறைகளுக்கு கட்டுப்பட்டுத்தான் ஆக வேண்டும்'' என்கிறார்கள் ஆசிரியர்கள்.

''முதலில் அவர்கள் என்னை பிரெஞ்சுப் பிரஜையாகவே கருதவில்லை. நான் மொராக்கோ நாட்டைச் சேர்ந்தவள் என்றுதான் நினைக்கிறார்கள். என் தந்தை மொராக்கோவிலிருந்து வந்தவர்தான். ஆனால் நான் பிறந்ததும் வளர்ந்ததும் இந்த பிரான்சில் தான். மொராக்கோ எப்படி இருக்கும், அங்கே மக்கள் எப்படி வாழ்கிறார்கள் என்பது கூட எனக்குத் தெரியாது.''

''மொராக்கோ போனால் அவர்கள் என்னை பிரெஞ்சுக்காரி என்பார்கள்; இவர்கள் மொராக்கோவைச் சேர்ந்தவள் என்று நினைக்கிறார்கள். நான் யார்? எதுவாக இருந்தாலும் நான் எனது நம்பிக்கையை (இஸ்லாத்தை) விட்டுக் கொடுக்க மாட்டேன்'' என்று சொல்லிக் கண் கலங்குகிறாள் அந்தப் பெண். கண்ணீர்த் துளியொன்று உருண்டு அவளது மேலுதட்டில் வழி


படிப்பகம்

www.padippakam.com

வதை நெருக்கமாகப் படம் பிடித்துக் காட்டுகிறது காமெரா.

வெடிகுண்டை விஞ்சும் வீரியத்துடன் பார்வையாளனைத் தாக்குகிறது அந்தக் கண்ணீர்த்துளி. ''அவர்களால் எந்தத் தொல்லையும் இல்லை. பர்தா அணிந்து விட்டுத்தான் போகட்டுமே'' என்று இரக்கம் தொனிக்கக் கூறுகிறாள் இன்னொரு பள்ளி மாணவி.

பிரான்சின் மதச்சார்பின்மைக் கோட்பாட்டை பற்றி அந்தப் பள்ளி ஆசிரியர் விளக்கும் போது அது நியாயமாகத்தான் படுகிறது. ஆனால், ''அவர்களுக்குப் பிடிக்காவிட்டால் வெளியே போகட்டும்'' என்று கூறும் உளவுத்துறை அதிகாரியின் பேச்சில் தொனிக்கும் காலனி ஆதிக்க மனோபாவம் நம்மை ஆத்திரம் கொள்ள வைக்கிறது.

யாருடைய பக்கத்தில் நியாயம் இருக்கிறது? இசுலாமியத் தீவிரவாதம் தோன்றக் காரணம் என்ன, என்பதை விளங்கிக் கொள்ள பிரச்சினையின் பின்புலத்தைப் புரிந்து கொள்ள வேண்டும்.

பிரான்சில் உள்ள இசுலாமியர்கள் அந்நாட்டின் பாரம்பரியக் குடிமக்கள் அல்லர். அல்ஜீரியா, மொராக்கோ போன்ற பிரான்சின் முன்னாள் காலனி நாடுகளிலிருந்து பிரான்சில் குடியேறியவர்கள்; அல்லது பிரெஞ்சு ஏகாதிபத்தியத்தினால் குடியேற்றப் பட்டவர்கள்

பிரெஞ்சு ஏகாதிபத்தியத்திடமிருந்து விடுதலை பெற்ற அல்ஜீரியா - இந்தியாவைப் போன்றே - பல்வேறு ஏகாதிபத்தியங்களின் வேட்டைக்காடாக மாறியது. குறிப்பாக அல்ஜீரியாவின் எண்ணெய் வயல்களில் அமெரிக்காவும் பிற ஐரோப்பிய நாடுகளும் டாலரை அறுவடை செய்து வருகின்றன.

1992-இல் நடைபெற்ற தேர்தலில் இசுலாமியப் பழமைவாதிகள் வெற்றி பெற்று விடுவார்கள் என்ற சூழ்நிலையில் இராணுவம் ஆட்சியைக் கைப்பற்றிக் கொண்டது. இராணுவ ஆட்சிக்குப் பிரான்சும் பிற ஏகாதிபத்திய நாடுகளும் ஆதரவு அளித்தன; அளித்து வருகின்றன. பழமைவாதிகளில் ஒரு பிரிவினர் இராணுவத்துடன் சமரசம் செய்து கொண்டனர்.

ஆப்கனில் ஆயுதப் பயிற்சி பெற்ற 'இசுலாமிய ஆயுதப் படை' என்னும் இன்னொரு பிரிவு பழமைவாதிகளோ, அவ்வாறு சமரசம் செய்து கொண்டவர்களின் குடும்பங்களையும், அவர்களுக்குச் செல்வாக்கு உள்ள கிராமங்களையும் சூறையாடுகின்றனர். திடீரென்று கிராமங்களில் புகுந்து கண்ணில் பட்ட பெண்களைக் கற்பழிக்கின்றனர்; குழந்தைகளைக் கொலை செய்கின்றனர். ரம்ஜான் நோன்புக் காலத்தில் சென்ற ஆண்டு டிசம்பர் 30-ம் தேதியன்று ஒரே நாளில் 1000 கிராம மக்கள் படுகொலை செய்யப்பட்டனர்.

தீவிரவாதத்தை ஒழிப்பது என்ற பெயரில் இன்னொருபுறம் அல்ஜீரிய இராணுவம் மக்களை வேட்டையாடுகிறது. அரசுப் புறம்போக்கு நிலங்களைத் தனியாருக்கு விற்கலாம் என்று ஒரு புதிய சட்டம் இயற்றி அதன் அடிப்படையில் கிராமம் கிராமமாக விலைக்கு வாங்க இராணுவ உயரதிகாரிகள் முயல்கின்றனர். தீவிரவாத ஒழிப்பு என்ற பெயரில் மக்களை விரட்டியடிக்கின்றனர்.



**அல்ஜீரியா சிதிஹாமெத் கிராமத்தில் இஸ்லாமிய பழமைவாதிகளால் கொல்லப்பட்ட அப்பாவிகளின் உறவினர்கள்.**

கொல்பவர்கள் முஸ்லீம்கள்; கொல்லப்படுபவர்களும் முஸ்லீம்கள். கடந்த 6 ஆண்டுகளில் 80,000 மக்கள் கொல்லப்பட்டிருக்கின்றனர். மதவெறி சர்வாதிகாரம் வராமல் தடுப்பதாக இராணுவ சர்வாதிகாரிகள் கூறுகிறார்கள். இராணுவ சர்வாதிகாரத்தை எதிர்ப்பதாக மதவெறிச் சர்வாதிகாரிகள் முழங்குகிறார்கள்.

அல்ஜீரிய இராணுவத்தின் மனித உரிமை மீறலுக்கெதிராக வாயளவில் கண்டனம் தெரிவித்துக் கொண்டே பிரான்சும் அமெரிக்காவும் இராணுவ ஆட்சியை ஆதரிக்கின்றன.

இதற்குப் பதிலடியாக அல்ஜீரியாவின் இசுலாமிய ஆயுதப் படை பாரீஸ் ரயில் நிலையத்திலும், கடைவீதிகளிலும் குண்டு வைக்கிறது. பிரெஞ்சு குடிமக்களான அல்ஜீரிய இளைஞர்களை இதற்குப் பயன்படுத்துகிறது. அவ்விளைஞர்களிடமிருக்கும் பிரெஞ்சு காலனியாதிக்க எதிர்ப்புணர்வை இசுலாமிய மதஉணர்வாக மாற்றுகிறது. அல்ஜீரியாவில் நடக்கும் படுகொலையைப் பற்றிக் கவலைப்படாத பிரெஞ்சு அரசு பாரிசில் குண்டு வெடித்தால் உடனே துடித்தெழுகிறது. ''இசுலாமிய பயங்கரவாதம்'' என்று கூச்சல் போடுகிறது.

பாரிசின் புறநகர்ப் பகுதியில் ஒதுக்கி வைக்கப்பட்டுள்ள அல்ஜீரிய, மொராக்கோ மக்களின் குடியிருப்புகள் சென்னையின் குடிசை மாற்று வாரியக் கட்டிடங்களை நினைவு படுத்துகின்றன. அக்கட்டிடங்களின் வாயிலில் கும்பல் கும்பலாக நிற்கும் வேலையில்லாத இளைஞர்களிடம் நிலவக் கூடிய அரசாங்க எதிர்ப்பு உணர்வு, போலீசின் பயங்கரவாதத் தடுப்பு சோதனை, விசாரணை காரணமாக இசுலாமிய மதவெறியாக மாற்றமடைகிறது. பர்தாவை அடிமைத் தனமாகக் கருதாமல் உரிமையாகக் கருதும் மனோபாவம் தோன்றுகிறது.

உலக மயமாக்கலை தொடர்ந்து பிரான்சு சந்திக்கும் வேலையில்லாத் திண்டாட்டமும், ஆட்குறைப்பும் வெள்ளை - கிறித்தவ இளைஞர்களையும் கடுமையாகப் பாதித்திருக்கிறது. ''அந்நியர்களையும் அகதிகளையும் வரம்புமீறி நுழையவிட்டதால்தான் நமக்கு வேலை இல்லை'' என்ற வலது சாரிகள் மற்றும் நிறவெறி பாசிஸ்டுகளின் வாதம் இவர்களிடம் எடுபடுகிறது. குண்டு வெடிப்புகளும், பர்தாவுக்கான போராட்டமும் கிறித்தவ - வெள்ளை நிறவெறியை மேலும் தூண்டி விடுகின்றன.

பிரான்சு மதச்சார்பற்ற நாடுதான். மதச்சார்பற்ற உரிமையியல் சட்டத்தை முதன் முதலில் உலகுக்கு அறிமுகம் செய்த நாடுதான். மன்னராட்சிக்கு ஆதரவாக இருந்த பாதிரிகளின் தலைக

www.padippakam.com

ளைத் தயவு தாட்சண்யமின்றி கில்லட்டினில் வைத்துத் துண்டித்த நாடுதான். எனினும் அங்கே ஏனிந்தப் பிரச்சினை என்ற கேள்விக்கு நாம் விடை காண வேண்டும்.

பிரான்சில் கிறித்தவ மதம் மட்டுமே ஆகப் பெரும்பான்மையாக இருந்தது. கிறித்தவ மக்களுக்கெதிராக மன்னனுடன் சேர்ந்து கொண்டு கிறித்தவ மடாலயம் செய்த கொடுமையை முறியடிக்க அரசு, கல்வி மற்றும் வாழ்வியல் விசயங்களில் கிறித்தவ மதம் கொண்டிருந்த சட்டரீதியான அதிகாரத்தைப் பிடுங்கி இவை அனைத்திலிருந்தும் கிறித்தவ மதத்தை விரட்டியது பிரெஞ்சுப் புரட்சி.

எனினும் லட்சக்கணக்கான உழைக்கும் மக்கள் மத நிறுவனத்திற்கெதிராகக் கிளர்ந்தெழுந்த அந்தக் காட்சி பிரெஞ்சு, ஐரோப்பிய முதலாளிகளின் 'ஞானக் கண்ணை' மீண்டும் திறந்தது; ஆயர்களுக்குக் கீழ்ப்படியாதவர்கள் அரசுக்கும் கீழ்ப்படிய மறுப்பார்கள் என்பதால் மதத்தை மீண்டும் உயிர்த்தெழச் செய்தது.

பாரிஸ் கம்யூன் தொழிலாளர் எழுச்சியும், ரசியப் புரட்சியும் முதலாளி வர்க்கத்தின் அச்சத்தை உறுதி செய்தன. கம்யூனிசம் எனும் சாத்தானை ஒழிக்க தேவதூதன் உலகெங்கும் ஏவப்பட்டான்.

மக்கள் விரோதிகள் என்று பிரெஞ்சுப் புரட்சியால் தண்டனை விதிக்கப் பெற்ற பாதிரிகளைப் 'புனிதர்கள்' என்றும் 'தியாகிகள்' என்றும் சமீபத்தில் போற்றிக் கவுரவித்திருக்கிறது பிரெஞ்சு திருச்சபை. மதச்சார்பின்மையையும், 'அறிவியல் பூர்வமான பண்பாட்டையும் குழிதோண்டிப் புதைக்கும் இத்தகைய நடவடிக்கைகள் சமூகத்தில் கிறித்தவ உணர்வைக் கிளறி விட்டதில் வியப்பேதும் இல்லை.

மதச்சார்பின்மை என்பது சட்டத்தில் இருந்தாலும் இத்தகைய நடைமுறைகள் அதற்கு முரணாகவே இருக்கின்றன. மேலும், மதம் சார்ந்த பண்பாட்டைக் காட்டிலும் ஜனநாயக பூர்வமானதாகவும், முற்போக்கானதாகவும் மதச்சார்பற்ற பண்பாடு இருக்க வேண்டும்; அத்தகைய திசையில் அது வளர வேண்டும்.

பெண்ணை நுகர் பொருளாகவும், கவர்ச்சிப் பதுமையாகவும் சித்தரிக்கும் ஏகாதிபத்தியச் சீரழிவுக் கலாச்சாரம், பெண்ணடிமைத் தனத்தை எதிர்த்து பண்பாட்டு ரீதியாக எங்ஙனம் போராட இயலும்?

அல்ஜீரியா, மொராக்கோ போன்ற (இசுலாமியப் பெரும்பான்மை) நாடுகளின் மீது பிரான்சு செலுத்திய காலனி ஆதிக்கம், அந்நாடுகளில் இன்னும் தொடரும் பிரெஞ்சு ஏகாதிபத்தியத்தின் சுரண்டல், தற்போதைய அல்ஜீரிய இராணுவ சர்வாதிகாரத்திற்கு பிரெஞ்சு அரசு அளித்து வரும் மறைமுக ஆதரவு, பிரான்சின் பொருளாதார நெருக்கடி, வேலையில்லாத் திண்டாட்டத்தின் விளைவாகக் கூடுதலாகப் பாதிக்கப்பட்ட அல்ஜீரிய, மொராக்கோ இளைஞர்களின் வெறுப்புணர்வு, அகதிகளும், முஸ்லீம்களுமே நம் வேலையின்மைக்குக் காரணம் என்று வலது சாரி நிறவெறியர்கள் செய்யும் பிரச்சாரம் வெள்ளை - கிறித்தவ இளைஞர்களிடம் செலுத்தும் தாக்கம் - இவற்றின் பின்புலத்தில் வைத்துப் பரிசீலிக்கும் போதுதான் மதச்சார்பற்ற பிரச்சினைகள் மதப்பிரச்சினைகளாக மாறும் விந்தையைப் புரிந்து கொள்ள முடியும்.

பிரான்சில் மட்டுமல்ல, அமெரிக்காவில் கறுப்பின மக்களில் ஒரு பிரிவினர் கிறித்தவத்திலிருந்து இஸ்லாத்திற்கு மதம் மாறுகின்றனர். வெள்ளை நிறவெறி, ஒதுக்குதல், கறுப்பின மக்கள் மீதான அரசு ஒடுக்குமுறை, வர்க்க ஒடுக்குமுறை இவையனைத்தும் சேர்ந்து கிறித்தவ வெள்ளை நிறவெறிக்கெதிராக மதமாற்றம் எனும் வடிவத்தை எடுக்கின்றன.

**இசுலாமிய சர்வதேசியம் குறித்து அமெரிக்க ஐரோப்பிய வல்லரசுகள் தெரிவிக்கும் 'அச்சம்' நயவஞ்சகமானது. இசுலாமிய சர்வதேசியம் குறித்த மதப் பழமைவாதிகளின் கனவோ அபத்தமானது.**

மார்ட்டின் லூதர் கிங் துவங்கிய சிவில் உரிமை இயக்கம் கறுப்பின மக்களின் போராட்டத்தை 'காந்திய' வழியில் செலுத்த முயன்றது. அதன் காரணமாகவே அமெரிக்க ஆளும் வர்க்கத்தின் அங்கீகாரத்தையும் பெற்றது. எனினும் வெள்ளை நிற வெறியும் இதர ஒடுக்குமுறைகளும் ஒழியவில்லை.

அந்த இடத்தில் ஒரு மாற்றாக இஸ்லாம் வந்திருக்கிறது. தற்போது இஸ்லாத்திற்கு அணி திரட்டுபவர்கள் புதியதொரு கொள்கையை முன் வைக்கிறார்கள். ''கறுப்பின மக்கள் இனி எல்லாவற்றுக்கும் அரசைச் சார்ந்திருக்கக் கூடாது; நிறுவனத்தைச் சார்ந்திருக்கக் கூடாது; நாம் சுயமாக முன்னேறுவோம்'' என்று முழங்குகிறார்கள்.

கவர்ச்சிகரமானதாகவும், மிகவும் சுயமரியாதை கொண்டது போலவும் தோற்றமளிக்கும் இந்த முழக்கம் கறுப்பின மக்களின் வர்க்கப் போராட்டத்தை முதலில் காவு கொடுக்கிறது; கல்வி, சுகாதாரம், வேலைவாய்ப்பு, வேலையற்றோருக்கான நிவாரணம், வீடற்றோருக்கான நிவாரணம் ஆகிய அனைத்தையும் ஒழித்துக் கட்டுவதெப்படி என்று யோசித்துக் கொண்டிருக்கும் அமெரிக்க ஆளும் வர்க்கத்திற்கு இது அந்த வகையில் ஒரு வரப் பிரசாதம் தான். எனினும் அல்ஜீரியாவின் பரிமாணத்தை எடுக்கக் கூடும் என எதிர்பார்த்து அமெரிக்க உளவுத்துறை தனது வேலைகளைத் துவக்கியிருக்கும் என்பதிலும் ஐயமில்லை.

இந்த இசுலாமிய சர்வதேசியத்தின் 'அச்சுறுத்தலுக்கு' ரசியாவும் தப்பவில்லை என்கிறது **பிளானட் இஸ்லாம்** என்ற அந்த செய்திப்படம்.

போலி கம்யூனிசத்தின் வீழ்ச்சிக்குப் பின் கிறித்தவத்தின் எழுச்சியையும் தேவாலயங்கள் புதுப்பிக்கப்படுவதையும், கோலாகலமாக வர்ணித்து எழுதின மேற்கத்திய பத்திரிகைகள். யெல்த்சினின் சாம்ராச்சியத்தில் தொழிலாளிகளுக்கு சம்பளம் கொடுக்க வழியில்லையென்றாலும், பாவமன்னிப்பு தருவதற்குப் பாதிரியார்கள் ஏராளமாக உற்பத்தி செய்யப்படுகிறார்கள்.

மேற்கு ஐரோப்பா தேவாலயங்களுக்குப் பணம் கொடுத்தது. மேற்கு ஆசியாவோ மசூதி கட்டப் பணம் தருகிறது. மாஸ்கோவிற்கு அருகில் உள்ள கசான் மாநிலத்தில் கிறித்தவர்களும் முஸ்லீம்களும் மக்கள் தொகையில் சரி பாதி. வாரவிடுமுறையை வெள்ளிக்கிழமைக்கு மாற்று என்ற கோரிக்கையும் வந்துவிட்டது.

செசன்யாவில் யெல்த்சினின் இராணுவம் நடத்திய படுகொலைக்கு எதிராக கசான் மாநிலத்தில் கண்டன ஆர்ப்பாட்டங்கள் நடந்தன. அவை இனப் படுகொலைக்கெதிரான ஆர்ப்பாட்டம் என்பதிலிருந்து புதியதொரு பரிமாணத்தைப் பெற்றன. ''செசன்யாவின் முஸ்லீம் மக்கள் மீது யெல்த்சினின் கிறித்தவ இராணுவம் நடத்தும் படுகொலை'' என்பதுதான் அந்தப் புதிய பரிமாணம்.

மத்திய ஆசியாவில் உள்ள தஜிகிஸ்தான் தனிநாடாகி விட்டபோதும்


படிப்பகம்

www.padippakam.com

ருசிய காமன்வெல்த் கூட்டமைப்பில் உள்ளது. தஜிகிஸ்தான் - ஆப்கான் எல்லையில் ரசிய இராணுவம் நிற்கிறது.

தஜிகிஸ்தானின் அரசுக்கெதிரான இசுலாமியப் படைக்கு ஆப்கானை ஆளும் தாலிபான் ஆதரவும் ஆயுதமும் தருகிறது. (தலிபானுக்கு அமெரிக்கா ரகசிய நிதிஉதவி செய்வது சமீபத்தில் அம்பலமானது). இசுலாமியப் படை ரசிய இராணுவத்திற்கெதிரான போரில் ஈடுபட்டுள்ளது.

யெல்சினின் ஆட்சியில் கிறித்தவத்தின் வளர்ச்சி தூண்டிவிடப்படுவது முஸ்லீம்களுக்கு அச்சத்தை ஏற்படுத்துகிறது. 'கிறித்தவ சாம்ராச்சியத்தின்' ஐரோப்பியப் பிரதிநிதியாக இருந்து ஆசியாவின் முஸ்லீம் மக்களை ஒடுக்கிய ஜார் ஆட்சியின் கசப்பான நினைவுகள் முஸ்லீம் மக்களிடம் மீண்டும் புதுப்பிக்கப்படுகின்றன.

முஸ்லீம்கள் மீது கிறித்தவர்கள் கொண்ட வெற்றியின் நினைவாகக் கட்டப்பட்ட பிரம்மாண்டமானதொரு தேவாலய கோபுரத்தின் உச்சியில் பிறை மீது சிலுவை நிற்பதுபோல செதுக்கப்பட்டுள்ளது. கம்யூனிச ஆட்சிக்காலத்தில் மதக் காட்டுமிராண்டித்தனத்தின் வரலாற்றுச் சின்னமாகக் கருதப்பட்ட அந்தக் கோபுரத்தை இப்போது யெல்ச்சினின் ஆட்சியில் அவமானச் சின்னமாகப் பார்க்கிறார்கள் முஸ்லீம் மக்கள்.

சோசலிச ரசியாவிலும், அதன்பின் போலி கம்யூனிஸ்டுகளின் ஆட்சியிலும் கூடத் தலையெடுக்காத மதவெறி இப்போது மட்டும் இப்படித் தலைவிரித்தாடுவது ஏன் என்ற கேள்விக்கு ஒரே வரியில் பதில் சொல்லி முடித்துக் கொள்கிறது அந்தப் படம்: "கம்யூனிஸ்டுகள் மதத்தை ஒடுக்கி வைத்திருந்தார்கள்."

ஏமாளிகள் கூட ஏற்கவியலாத பதில் இது. மதத்தை தனிநபர் உரிமையாக்குவது, மத நிறுவனங்கள் சமூக, அரசியல் வாழ்வில் தலையிடுவதை தடை செய்வது - அதாவது உலகியல் வாழ்வில் மூக்கை நுழைக்காமல் ஆன்மீக உலகத்திற்குள் மதத்தை அடக்கி வைப்பது, பகுத்தறிவு - நாத்திகப் பிரச்சாரத்தை முடுக்கி விடுவது, மதசார்பற்ற சோசலிசப் பண்பாட்டை வளர்ப்பது இவைதான் ஒரு சோசலிச அரசு செய்யக் கூடியவை - செய்தவை.

ஆனால், மேலை ஏகாதிபத்தியங்கள் ரசியாவின் மீது யெல்ச்சினை ஏவுவதற்கு முன்னரே தேவதூதனை ஏவி விட்டன. மதமும் மதவெறியும் திட்டமிட்டே வளர்க்கப்பட்டன. அதன் எதிர்விளைவை ரசியா இப்போது சந்திக்கிறது.

சோசலிச அரசை மதவிரோதிகளின் அரசாகக் கூட இசுலாமியப் பழமைவாதிகள் அன்று கருதியிருக்கலாம். ஆனால் இன்று யெல்ச்சினின் அரசை அவர்கள் கிறித்தவ அரசாகக் கருதுகிறார்கள் என்பதுதான் பிரச்சினை. எனவேதான் இன ஒடுக்குமுறையும் வர்க்க ஒடுக்குமுறையும் மதக் கொடியின் கீழ் எதிர்கொள்ளப்படுகின்றன.

ஈரானில் நடந்ததும் இதுதான். ஷா ஆட்சியின் அமெரிக்க சார்பு பொருளாதாரக் கொள்கைகள் ஏழைகளை மேலும் போண்டியாக்கின; நிலச் சீர்திருத்தம் என்ற பெயரில் சிறு விவசாயிகளின் நிலங்களை நிலப்பிரபுக்கள் கைப்பற்றிக் கொண்டனர்; எண்ணெய் விலையேற்றம் தோற்றுவித்த பணவீக்கம் நகர வாழ்க்கையை ஏழைகளுக்கு நரகம் ஆக்கியது; இவற்றுடன் சேர்ந்து மேலை நாகரிகம் என்ற பெயரில் காபரே விடுதிகளும் பண்பாட்டுச் சீரழிவுகளும் டெகரானில் தலைவிரித்தாடின.



**மைக்கேல் ஜாக்சனுடன் காட்சி தருபவர் சவுதி இளவரசர் அல்வாலித். அமெரிக்க நிறுவனங்களில் இவரது முதலீடு ரூ. 50,000 கோடி. சர்வதேச இஸ்லாமிய பழமைவாதிகளுக்கும் புரவலர்.**

பணக்கார முஸ்லீம்கள் ஷாவை ஆதரித்தார்கள். மேற்கத்திய மயம் என்ற பெயரில் தமது வாழ்க்கையும், தமது பண்பாடும் சூறையாடப்படுவதைக் கண்டு மனம் கொதித்த மக்களிடம் "மார்க்கத்திற்குத் திரும்புவோம்! மதத்திற்கு திரும்புவோம்!" என்ற மவுல்விகளின் முழக்கம் எடுபட்டது.

"ஒடுக்குபவர்களுக்கும் (முஸ்தாக் பிரின்) ஒடுக்கப்படுபவர்களுக்கும் (முஸ்தாதிபின்) இடையே நடக்கக் கூடிய தவிர்க்கவியலாத போராட்டம்" என்று குர் ஆன் கூறும் வசனத்தை முன் வைத்துத்தான் ஷாவிற்கு எதிரான போராட்டத்தை நடத்தினார் ஆயத்துல்லா கொமெய்னி, என்கிறார் ஆய்வாளர் அஸ்கர் அலி எஞ்சினியர்.

இசுலாமிய சர்வதேசியத்தின் நம்பிக்கை நட்சத்திரமாக இரானை எண்ணிக் கொண்டிருக்கும் பழமைவாதிகள் இதை நம்ப மறுக்கலாம்; ஆனால் இன்று ஈரானை ஆளுகின்ற மதகுருமார்கள் கடைப்பிடிக்கும் கொள்கைக்கு அவர்கள் என்ன விளக்கம் கூறவியலும்?

புரட்சி கொஞ்சம் ஓய்வெடுத்துக் கொள்ளட்டும் என்கிறார் ஈரானின் சுற்றுச்சூழல் துறை பெண் அமைச்சர். சல்மான் ரஷ்டிக்கு மன்னிப்பு வழங்கத் தயாராக இல்லாத ஈரான், அன்று அமெரிக்கப் பிணைக் கைதிகளைப் பிடித்து வைத்ததற்காக இன்று அமெரிக்காவிடம் மன்னிப்பு கோருகிறது.

பிரான்சின் அல்ஜிரிய முஸ்லீம்களுக்கு மகுதி கட்டப் பணம் கொடுக்கும் வளைகுடா ஷேக்குகள் தான், பிரெஞ்சு அமெரிக்கப் பன்னாட்டு நிறுவனங்களின் பங்குகளை வாங்கிக் குவிக்கிறார்கள்.

ஈராக்கின் (இசுலாமியக்) குழந்தைகளைப் பட்டினி போட்டுக் கொல்லும் அமெரிக்காவை ரகசியமாக ஆதரித்துக் கொண்டே, இசுலாத்தின் வளர்ச்சிக்காக வாரி வழங்குகிறார்கள் வளைகுடா ஷேக்குகள்.

பிரான்சில் இசுலாமியப் பயங்கரவாதத்தைக் கண்டிக்கும் அமெரிக்கா, தலிபான் பயங்கரவாதிகளுக்கு நிதி உதவி செய்கிறது.

பிரான்சு, அல்ஜீரியா, அமெரிக்கா, ரசியா... இன்னும் இதையொத்த பல நாடுகள் சந்திக்கும் 'இசுலாமியப் பிரச்சினை' என்பது அடிப்படையில் அரசியல் பொருளாதார அதிகாரத்திற்கான பிரச்சினைதான். அரசியல், பொருளாதார, பண்பாட்டு ஒடுக்குமுறைகளுக்கெதிரான போராட்டம் மதப் போர்வை அணிந்து கொள்வதால் அது மதப்பிரச்சினை ஆகிவிடாது.

இசுலாமிய சர்வதேசியம் குறித்து அமெரிக்க ஐரோப்பிய வல்லரசுகள் தெரிவிக்கும் 'அச்சம்' நயவஞ்சகமானது. இசுலாமிய சர்வதேசியம் குறித்த மதப் பழமைவாதிகளின் கனவோ அபத்தமானது.

கண்டம் விட்டுக் கண்டம் பாயும் 'மூலதனத்தின் சர்வதேசியம்' மட்டுமே இன்றைய கண்கண்ட உண்மை. அதனை வீழ்த்துவதற்கு வரலாற்றால் நியமிக்கப்பட்டிருக்கும் தேவதூதன் - என்ன செய்வது - பாட்டாளி வர்க்க சர்வதேசியம் மட்டும்தான்.

• மருதையன்

www.padippakam.com

**மா**ர்க்சியத்தை ஏற்கிறேன்; ஆனால் கட்சியில் இருக்க மாட்டேன் என்று ஒருவர் கூறினால் அவர் வேறு எதுவாகவோ இருக்க முடியுமே தவிர கம்யூனிஸ்ட்டாக இருக்க முடியாது. தொழிலாளி வர்க்கத்தின் உயிரே கட்சி அமைப்புதான் என்றார் லெனின். பல்வேறு போக்குகள் கொண்ட குழுக்களாக இருந்த ரசிய சமூக ஜனநாயகக் கட்சியின் இரண்டாவது மாநாடு 1903-இல் நடந்தது. அதில் கட்சி கட்டுவது குறித்த பாட்டாளிகளின் கண்ணோட்டம், செயல்முறை, அமைப்பு முறை பற்றி உறுதியுடன் வழக்காடிய லெனின் அதையெல்லாம் தொகுத்தளித்த நூல்தான் 'ஓரடி முன்னால் ஈரடி பின்னால்'. கம்யூனிஸ்ட் கட்சிக்குள் அறிவாளிகள் வழியா? பாட்டாளிகள் வழியா? எது சரி என்பதை சுவைபட விவரிக்கிறது இந்நூல்.

மாநாட்டில் லெனினின் வழியை ஏற்ற பெரும்பான்மையினர் போல்ஷ்விக்குகள் என்று பிரிந்தது அப்போது தான். அன்று மட்டுமல்ல, இன்றும் உண்மையான கம்யூனிஸ்ட் கட்சிகளும், அறிவாளி வர்க்கமும் ஒன்றுக்கொன்று முரண்பட்டு நிற்கிறது. இனியும் அப்படித்தான். ஏன்? அறிவாளிகளின் சமூக, உளவியல் பின்னணியை 'காவுட்ஸ்கி'யின் கட்டுரையின் மூலம் விளக்கி பதில் தருகிறார் லெனின்.

அறிவாளிகளின் பண்புகள் 'மண்ணுக்கேற்றபடியெல்லாம் மாறுவதில்லை', உலகெங்கிலும் ஒரே மாதிரி தான். தமிழ்நாட்டில் ஏதாவது ஒரு சமூக நடவடிக்கையில் இருப்பதாகக் காட்டிக்கொள்ளும் பேராசிரியர்கள், எழுத்தாளர்கள், பத்திரிகையாளர்கள் ஏராளம் இருக்கிறார்கள். புரட்சிகரக் கம்யூனிஸ்டுக் கட்சிகளை எதிர்ப்பதில் மட்டும் இவர்கள் ஒன்றுபடவில்லை. தமது கத்துக்குட்டி அறிவின் மூலம் சமூகத்தை ஏளனமாகப் பார்க்கும் இவர்களது சிந்தனைமுறை, வாழ்க்கை பற்றிய பாதுகாப்பு உணர்வு, தன்னகங்கார தனித்துவம் இன்னும் ஏராளமானவற்றில் ஒன்றுபடுகிறார்கள்.

பெரும்பான்மை மக்களோ, கட்சியோ, சமூகமோ இவற்றுடன் முரண்பட்டு தன்னை உயர்வாய் நினைத்துக் கொள்ளும் அறிவாளிகளின் பாத்திரத்தை 'அதே அறிவைக்' கொண்டு ஆய்கிறார் லெனின்.

★☆★

# அறிவாளிகளின் அந்தரங்கம்

***இந்தச் சந்தர்ப்பத்தில், இங்குமில்லாமல் அங்குமில்லாமல் ஊசலாடும் அறிவாளியின் பண்பு பற்றி கார்ல் காவுட்ஸ்கி அண்மையில் கூறிய சிறப்புமிக்க சமூக, உளவியல் வரையறையை நினைவுக்குக் கொண்டுவராமல் இருக்க முடியாது. பல்வேறு நாடுகளின் சமூக ஜனநாயகக் கட்சிகள் அண்மைக் காலங்களில் இப்படிப்பட்ட குறைபாடுகளுக்கு அடிக்கடி ஆளாகின்றன.***

***எனவே இத்தகைய நோயின் குணம் பற்றியும், அதற்குரிய மருத்துவத்தைப் பற்றியும் அதிக அனுபவமிக்க தோழர்கள் வாயிலாகக் கற்றுக் கொள்வது நமக்கு மிக மிகப் பயனுள்ளதாக இருக்கும். எனவே குறிப்பிட்ட சில அறிவாளிகள் குறித்த காவுட்ஸ்கியின் வரையறை நாம் எடுத்துக் கொண்ட பொருளிலிருந்து விலகிச் செல்வது போன்று மேற்பார்வைக்குத் தோன்றலாம்.***

''இன்றைக்கு நமது கவனத்தை மிகுந்த அளவு ஈர்க்கிற பிரச்சனை அறிவாளிகளுக்கும் பாட்டாளி வர்க்கத்துக்கும் இடையே உள்ள பகை முரண்பாடாகும். (ஜெர்மன் சொற்களான விட்டராட் மற்றும் விட்டராடென்டம் ஆகிய சொற்களை மொழி பெயர்த்து அறிவாளி, அறிவுத்துறையினர் என்று நான் பயன்படுத்துகிறேன்). நான் இந்த முரண்பாட்டை ஏற்றுக் கொள்வதால் எனது நண்பர்கள் அநேகமாக என்மீது கோபமாக இருப்பார்கள். (காவுட்ஸ்கியே ஓர் அறிவாளி, ஓர் எழுத்தாளர், ஓர் பத்திரிகையாசிரியர் - லெனின்) ஆனால் உண்மையிலேயே அந்தப் பகை முரண்பாடு இருக்கிறது.



ஏனைய விஷயங்களைப் போலவே, இதனை மறுப்பதன்மூலம் வெல்ல நினைப்பது பேதமையான தந்திரமாகும். இம்முரண்பாடு சமூகப் பண்பாகும்; அது வர்க்கங்கள் சம்பந்தப்பட்டது; தனி நபர் சம்பந்தப்பட்டதல்ல. ஒரு தனிப்பட்ட அறிவாளி, ஒரு தனித்த முதலாளியைப் போல, பாட்டாளி வர்க்கப் போராட்டத்தில் பாட்டாளிகளோடு தன்னை இணைத்துக் கொள்ளலாம். அவ்வாறு செய்யும் போது, அவர் தனது குணாம்சத்தையும் மாற்றிக் கொள்கிறார். கீழே பிரதானமாக நான் பேசப்போவது இப்படிப்பட்ட வகைமாதிரியான அறிவாளிகளைப் பற்றி அல்ல. காரணம், அவர்கள் ஒரு சில விதி விலக்கானவர்கள்.

முதலாளித்துவச் சமுதாயத்தின் நிலைப்பாடுகளையே தனது நிலைப்பாடுகளாக ஏற்றுக் கொண்ட பரவலாகக் காண கிடைக்கிற அறிவாளிகளைக் குறிப்பிடவே நான் அறிவாளி என்ற சொல்லைப் பயன்படுத்துகிறேன். அறிவுத்துறையினர் என்ற வகையில் ஒரு தனிவர்க்கத்தின் குணாம்சத்தை அவர்கள் பிரதிபலிக்கிறார்கள். இந்த வர்க்கம் பாட்டாளி வர்க்கத்திற்கு ஒருவகையில் பகை முரண்பாடு கொண்டதாக இருக்கிறது.

''எனினும், இந்த முரண்பாடு முதலுக்கும் உழைப்புக்குமான முரண்பாட்டிலிருந்து வேறுபடுகிறது. அறிவாளி ஒரு முதலாளி அல்ல. அவரது வாழ்க்கைத்தரம் முதலாளித்துவத்தன்மை உடையது என்பது உண்மையே; தான் ஒரு ஓட்டாண்டியாகாமல் தடுக்க அத்தகைய வாழ்க்கையைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டியிருக்கிறது; ஆனால் அதே நேரத்தில் தன் உழைப்பின் விளைபொருளை அவர் விற்கும்படி கட்டாயப்படுத்தப்படுகிறார். பெரும்பாலும் உழைப்புச் சக்தியை விற்கும்படி ஆகிறது. அடிக்கடி அவர் முதலாளியால் சுரண்டப்படுகிறார்; அவமதிப்புக்குள்ளாகிறார்.

எனவே, அறிவாளிக்குப் பாட்டாளி வர்க்கத்தோடு பொருளாதாரப் பகை முரண் ஏதுமில்லை. ஆனால் அவரது வாழ்க்கை நிலையும், உழைப்புச் சூழலும் பாட்டாளி வர்க்க ரீதியாக இல்லை. இதுவே உணர்வுகளிலும் கருத்துக்களிலும் பகை முரண்பாட்டைத் தோற்றுவிக்கிறது.

''தனிப்படுத்தப்பட்ட ஒரு தனிநப

www.padippakam.com

ராக இருக்கும் பாட்டாளி ஒரு பொருட்டேயல்ல. அவரது சக்தி அனைத்தும், அவரது முன்னேற்றம் முழுவதும், அவரது நம்பிக்கைகள், எதிர்பார்ப்புகள் எல்லாமும் அமைப்பிலிருந்தும் அவர் தமது தோழர்களோடு சேர்ந்து எடுக்கும் திட்டமிட்ட நடவடிக்கையிலிருந்தும் பெறப்பட்டவை. பெரியதும் வலிமை மிக்கதுமான அமைப்பின் ஓர் அங்கமாக அவர் விளங்கும்போது அவர் பெரியவராக வலிமை மிக்கவராக விளங்குகிறார். இந்த அமைப்புதான் அவருக்குப் பிரதானமானது; இதனோடு ஒப்பிடும்போது தனிநபர் பொருட்டாக மாட்டார். முகம் தெரியாத மிகப் பெரும் மக்கள் திரளின் பகுதியாகப் பாட்டாளி மிகப் பெரும் ஆர்வத்தோடு போராடுகிறார். இதில் சுயநலனுக்கோ, தனிப்பட்டவர் புகழுக்கோ இடமில்லை. தாம் நியமிக்கப்படும் எந்த ஒரு நிலையிலும் சுயகட்டுப்பாட்டோடு அவர் கடமையாற்றுகிறார்; அது அவரது உணர்வுகள் எண்ணங்கள் முழுமையையும் தழுவிக் கொண்டுவிடுகிறது.

''அறிவாளிகளின் விஷயமோ முற்றிலும் வேறானது. தனது சக்தியை வைத்துப் போரிடாமல் வாதங்களை வைத்துப் போரிடுகிறார். அவரது ஆயுதங்களோ அவரது சொந்த அறிவு, சொந்தத்திறமை, சொந்த நம்பிக்கைகள் மட்டுமே; எந்த ஒரு பதவியையும் கூட அவர் தனது சொந்தப் பண்புகளால் மட்டுமே அடையமுடியும். எந்த ஒரு வெற்றிகரமான நடவடிக்கைக்கும் தனது தனித்துவத்தைக் கட்டவிழ்த்து விடுவதே அவருக்கு முக்கிய நிபந்தனையாகப்படுகிறது. முழுமைக்குத் தம்மைக் கீழ்ப்படுத்தி ஒரு பகுதியாக விளங்குவதற்கு அவர் மிகுந்த சிரமத்தின் பேரில்தான் ஒப்புக்கொள்கிறார். அதுவும் கூட ஒரு அவசியத்தினால் ஏற்றுக் கொள்கிறாரே தவிர, ஆர்வத்தினால் அல்ல. ஒழுங்கு கட்டுப்பாடு மக்கள் திரளுக்கு மட்டுமே அவசியம் என்று அவர் அங்கீகரிக்கிறார்; ஆனால் தேர்ந்த உள்ளங்களுக்கல்ல. தம்மை பின்னதாகச் சொல்லப்பட்டவர்களோடு சேர்த்துக் கொள்கிறார்.

''நீட்சேயின் தத்துவமே அறிவாளியின் உண்மைத் தத்துவமாகும். அதிமனிதன் கோட்பாட்டையும் சேர்த்து அத்தத்துவத்தில் தனிமனித ஆளுமையை நிறைவு செய்வதே எல்லாம்; இப்படிப்பட்ட தனித்துவத்தை பெரியதொரு சமூக நோக்கத்திற்குக் கீழ்ப்படுத்துவது இழிவானது, கேவலமானது. இத்தத்துவமே அறிவாளியை பாட்டாளிகளின் வர்க்கப் போராட்டத்தில் பங்கேற்க முடியாதபடி ஆக்கிவிடுகிறது.



ஜெர்மனி கம்யூனிஸ்ட்-லீப்க்னெட்

''நீட்சேவுக்கு அடுத்து, அறிவுத்துறையினரின் உணர்வுகளுக்கு விடையளிக்கத்தக்க ஓர் தத்துவத்தை எடுத்து விளக்கியவர் அநேகமாக இப்சனாகத்தான் இருக்க வேண்டும். அவரது 'மக்களின் எதிரி' என்ற நாடகத்தில் வரும் டாக்டர் ஸ்டாக்மான், பலர் சொல்வது போல, சோசலிஸ்டு அல்ல; பாட்டாளி வர்க்கத்தோடு நிச்சயம் மோதலுக்கு வரப்போகும் அறிவாளி வகையைச் சேர்ந்தவரே. பாட்டாளி வர்க்க இயக்கத்தோடு மட்டுமல்ல, பொதுவில் வேறு எந்த வகையான மக்கள் இயக்கமாக இருந்தாலும் அதற்குள் அவர் வேலை செய்ய ஆரம்பித்ததுமே அதற்கெதிராக மோதத் தொடங்கி விடுவார்.

பாட்டாளி வர்க்க இயக்கம், ஏன் ஒவ்வொரு ஜனநாயக இயக்கத்தின் அடித்தளமாக விளங்குவது, ஒருவர் தனது சகதோழர்களின் பெரும்பான்மைக்கு மதிப்புக் கொடுப்பதாகும். ஆனால் ஸ்டாக்மன் வகையைச் சேர்ந்த அறிவாளியோ 'திட்டவட்டமான பெரும்பான்மை'யை தூக்கி எறியப்பட வேண்டிய ஓர் அரக்கனாகவே கருதுகிறார்...

''பாட்டாளி வர்க்க உணர்வுகளோடு ஊறிப்போன ஓர் அறிவாளிக்குச் சிறந்த எடுத்துக்காட்டு ஜெர்மானிய லீப்னெக்ட் ஆவார். இவர் சிறந்த எழுத்தாளராக இருந்தும் அறிவாளியின் குறிப்பான தனிப்பட்ட குணாம்சத்தை இழந்துவிட்டார்; அவர் பாட்டாளிகளின் படை அணிகளோடு மகிழ்ச்சியோடு நடை போட்டவர்; தான் நியமிக்கப்பட்ட எந்த ஒரு பதவியிலும் அவர் பணிபுரிந்தார். நமது மாபெரும் லட்சியத்திற்கு முழுமனத்தோடு தன்னைக் கீழ்ப்படுத்தினார். இப்சனிலும் நீட்சேவிலும் பயிற்சி பெற்ற அறிவாளிகள் தமது தனித்தன்மை ஒடுக்கப்படுகிறது என்று தீனமான குரல் ஊளையிட்டதை அவர் வெறுத்து ஒதுக்கினார்.

சிறுபான்மையில் தங்களைக் காண நேர்ந்த அறிவாளிகள் இப்படிப்பட்ட பண்புகளை வெளியிடக்கூடும். லீப்னெக்ட், சோசலிச இயக்கத்திற்குத் தேவையான அறிவாளி வகையின் எடுத்துக்காட்டாக விளங்குகிறார். கார்ல் மார்க்சையும் கூட இங்கே நாம் குறிப்பிடலாம். அவர் தன்னை முன்னுக்குத் தள்ளிக் கொண்டதேயில்லை; சர்வதேச அகிலத்தில் பலமுறை சிறுபான்மையாக இருந்த போதும் அவர் கட்சிக் கட்டுப்பாட்டோடு நடந்து கொண்டது மிக மிக அசாதாரணமானது.'' ■

(மூலம்: ஆங்கிலம்: ஓரடி முன்னே ஈரடி பின்னே - லெனின்: லெனின் தொகுப்பு நூல்கள், தொகுதி 7, பக். 322-4)

## அறிவிப்பு

* சென்ற இதழ் - கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கை பற்றி கட்டுரையில், ...'அறிக்கை வெளியிடப்பட்டு சுமார் 40 ஆண்டுகளுக்குப் பின் 1887-இல் மார்க்ஸ் இவ்வாறு எழுதினார்...' என்று இருக்கிறது. அது தவறு. அந்த மேற்கோள் ஏங்கெல்சுக்கு உரியது. அக்காலத்தில் மார்க்ஸ் உயிருடன் இல்லை. தவறை சுட்டிக்காட்டிய வாசகர்களுக்கு நன்றி.
* அடுத்த இதழ் முதல் கேள்வி - பதில் பகுதி இடம் பெறுகிறது. பண்பாட்டு போக்குகள் குறித்த கேள்விகளை அனுப்புமாறு, வாசகர்களைக் கோருகிறோம்.
* இதழ் காலம் கடந்து வருவதினாலும், பக்கங்கள் பற்றாக்குறையினாலும் வாசகர் கடிதங்கள் பிரசுரிக்க இயலவில்லை. மேலும் வருகின்ற கடிதங்களும் 'நன்று, சிறப்பு' என்று வழமையான வார்த்தைகளுடன் மட்டும் வருகிறது. எனவே குறிப்பான விமர்சனம், கருத்துக்கள், ஆலோசனையுடன் கடிதங்கள் அனுப்புமாறு கோருகிறோம். அவை பத்திரிகையில் பிரசுரமாவதோடு, இதழ் செழுமையுற பயனுள்ளதாய் இருக்கும்.
* பணவிடை (மணி ஆர்டர்) மூலமாக சந்தா அனுப்பும் வாசகர்களும், நிலுவை அனுப்பும் முகவர்களும், பணவிடைத் தாளின் அனுப்புனருக்காக ஒதுக்கப்பட்டுள்ள கீழ்ப்பகுதியில் முகவரியையும், தொகையையும் மறவாமல் எழுதி அனுப்புமாறு கோருகிறோம்.



படிப்பகம்

www.padippakam.com

நூல் அறிமுகம்

# 'பண்ணை அடிமைத்தனத்திற்கு எதிரான போராட்டத்தில் பி.எஸ். தனுஷ்கோடி'

"நன்செயும் புன் செயும் கொழிக்கும் தஞ்சை என்று இலக் கிய வருணனையில் இறுமாந்து கிடக்கும் காவிரியின் கரைக ளுக்கு வெளியேதான் பஞ்சைப் பராரிகளாக வும் பண்ணை அடிமைகளாகவும் ஆக் கப்பட்ட உழைக்கும் மக்களின் அவல வாழ்க்கை கேட்பாரற்றுக் கிடந்தது. அதைக் கேள்வி கேட்கத் துணிந்தவர்க ளின் அனுபவக் குரலை நாம் அறியச் செய்யும் ஒரு நூல் "பண்ணை அடி மைத்தனத்திற்கு எதிரான போராட்டத் தில் பி.எஸ். தனுஷ்கோடி".

ஒரு பண்ணையடிமைக் குடும்பத் தில் பிறந்து அடிமை உழைப்பு, சாதிக் கொடுமை என்ற இரட்டை நுகத்த டியை வர்க்கப் போராட்டத்தினூடாக அறுத்தெறிந்த பி.எஸ். தனுஷ்கோடி யின் வாழ்க்கைப் போராட்டத்தை விவ ரிக்கும் இந்நூல், படிக்கும் எவருக்கும் ஒரு நூலைப் படித்த 'திருப்தியை' அளிக்காமல் 'மன அமைதியை'க் குலைத்துச் செயலுக்கிழுக்கும் ஒரு இயக்கமாகவே எதிர்ப்படும்.

'அய்ம்பது ஆண்டுகளுக்கும் மேலாக என்ன செய்தார்கள் இந்த கம் யூனிஸ்டுகள்?' என்பவர்களுக்கு முத லில் அய்ம்பது ஆண்டுகளுக்கு முன்பு எப்படி இருந்தது கீழத் தஞ்சை என் பதை அறிமுகப்படுத்துகிறது நூலின் முன் பகுதி.

அன்று கீழத்தஞ்சை ஒரு திறந்த வெளி சிறைச்சாலை. அங்கு நிலவிய கொடுமைகளிலிருந்து பண்ணை அடி மைகள் தன் விருப்பப்படி வெளியேற வும் முடியாது, "அயல் நாட்டுக்கு ஓடி விடும் பண்ணையடிமை 10 வருடம் கழித்தோ, 15 வருடம் கழித்தோ தன் வீட்டிற்கு ஊருக்குத் திரும்பி வரலா மா?" என்று கேட்டு தந்தைக்கோ, தமையனுக்கோ கடிதம் எழுதுவான். அந்த கடிதம் சம்பந்தப்பட்ட வீட்டிற் குப் போகாது. தபால்காரர் அதை நிலப் பிரபு வீட்டில் கொடுப்பார். அவர் உடனே சம்பந்தப்பட்ட நபரின் தந் தையை அழைத்து உடனே திரும்பி வரும்படி மகனுக்கு கடிதம் எழுதும்படி கூறுவார். அயல் நாட்டிலுள்ள மகன் கடிதம் கிடைத்ததும் மகிழ்ச்சியுடன் ஊருக்கு கப்பலில் வருவார். ஆனால் கிராமத்திற்குள் அவர் நுழைந்தவுடன் நிலப்பிரபுவின் ஆட்கள் அவரை இழுத்துக் கொண்டு போய் பண்ணை வீட்டில் கட்டுவார்கள். வட்டியும் முத லுமாகச் சவுக்கடி கொடுக்கப்படும். மீண்டும் அந்த ஆள் பயணம் செய்ய முடியாத அளவுக்கு குற்றுயிராக ஆக் கப்பட்டு விடுவான்." (நூல் பக்: 34)

இப்படி ஊருக்குத் திரும்பி நிலப் பிரபுவின் காலில் விழுந்து 'எசமான் சௌக்கியமா?' என்று கேட்ட சிலம் பன் போன்றவர்களை வைக்கோல் பிரி சுற்றி, தீ வைத்து எரிப்பதே நிலப்பிரபு வின் முதல் விசாரணையாகவும் இருந் தது. பெண்கள், குழந்தைகள், பெரிய வர்கள் என பண்ணையடிமைகள் பல வாறும் சிந்திய இரத்தத் துளிகளால் நிரம்பியதுதான் அன்றைய 'நெற்களஞ் சியம்'.

இத்தகைய கொடுமையான சூழ லில் தான் திருத்துறைப் பூண்டி வட்டத் திலுள்ள விளத்தூர் எனும் சிறிய கிரா மத்தில் ஒரு தாழ்த்தப்பட்ட குடும்பத் தில் பிறந்தார் தனிக்கொடி என்ற பி.எஸ். தனுஷ்கோடி.

உலகைப் புரிந்து கொள்ள அவ ரது அறிவுக் கண்ணைத் திறந்தது உமை யாளின் ஞானப்பால் அல்ல. ஆண்டை களின் சாணிப் பால். ஆம்! சாணிப்பா லும், சவுக்கடியுமாய் அவதிப்பட்டுக் கொண்டிருந்த கூலி விவசாயிகளின் குரலுக்கு எந்தச் சாமியும் இறங்கி வரா தது கண்டு 'கடவுளர்களை' விடுத்து கட்சியைத் தேட ஆரம்பித்தார் தனுஷ் கோடி. அவருக்கு முதல் அனுபவமே மோசமாக முடிந்தது. கைங்கர்யம் காங்கிரசு கட்சி.




"மகாத்மா காந் திக்கு ஜே" என்று தனுஷ்கோடியும் உற்சா கம் பெருக ஊர்வலத் தில் சேர்ந்து, விளத்தூ ருக்குப் போய் அங்கிருந்த அக்கிரகா ரத்துக்குள் நுழைந்தது ஊர்வலம். இதைக் கண்ட பிராமணர்கள் "தீண் டாப் பறையனுக வந்துட்டானுக" என்று அலறியபடியே ஓடி ஒளிந்தனர். தனுஷ்கோடியும் இதர சிறுவர்களும், பிராமணர்கள் வீட்டுத் திண்ணையில் உட்காருவது, கதவைத் தொட்டுப் பார்ப்பது, வீட்டிற்குள் நுழைந்து வெளியே ஓடி வருவது போன்ற செயல்களில் ஈடுபட்டனர். விளைவு அய்யர் நிலப்பிரபுக்கள் கையில் புளிய விளாருடன் மாறி மாறி அடித்தனர். தனுஷ்கோடி கதறினார். இரத்தம் ஓட பொறுக்க முடியாத வேதனையுடன் தனுஷ்கோடி காங்கிரசு தலைவர் ராமு படையாச்சிடம் ஓடி வந்தார். தனது ரத் தக் காயங்களைக் காட்டினார். அந்த காங்கிரசு தலைவர் அளித்த பதில் தனுஷ்கோடியை இன்னும் அதிர்ச்சிக் குள்ளாக்கியது. "நேத்து நீ செஞ்ச காரி யத்துக்கு உன்னை நேத்தே குழி தோண்டி புதைச்சிருக்கணும் நீ செஞ் சது அக்ரமம் என்றார்." (நூல் பக்: 50).

மூவர்ணக் கொடியின் நால் வர்ண வெறியை அனுபவமாகப் புரிந்து கொண்ட தனுஷ்கோடியின் என் ணத்தை ஈர்த்தது சுயமரியாதை இயக் கம். ஆர்வத்தோடு பெரியார் பேச்சைக் கேட்க திருத்துறைப் பூண்டி போன அனுபவத்தை அவரே பின் வருமாறு விவரிக்கிறார், "அந்த ஊரில் சன்னா ஊர் பக்கிரிசாமி பிள்ளை என்பவர் டீக் கடை வைத்திருந்தார். அவர் பெரியா ரின் இயக்கத்தைச் சேர்ந்தவர். அவரது மனைவி, குழந்தைகள் அனைவருமே கறுப்பு உடைதான் அணிவார்கள். நான் பெரியார், அம்பேத்கார் பேட்ஜை அணிந்து கொண்டு அவரது கடைக் குள் சென்று டீ குடிக்க அமர்ந்தேன். தோற்றத்தில் இருந்தே நான் ஒரு அரி ஜன் என்பது அவருக்குத் தெரிந்து விட் டது அவ்வளவுதான். அங்கேயே என்னை புரட்டி எடுத்து விட்டார். "நான் பெரியார் கட்சிக்காரன்" என்று கத்தினேன். என்னடா பெரியார் கட்சி என்று கேட்டு அடித்தார்." (நூல் பக்: 51)

இப்படி 'அடிமேல் அடிவைத்த இயக்கங்களால் அடிமைத்தனத்தில் இருப்புக் கொள்ள முடியாமல் தவித்த



படிப்பகம்

www.padippakam.com

தனுஷ்கோடியின் வாழ்வில் ஒரு புதிய அத்தியாயத்தை எழுதியது கம்யூனிஸ்டு கட்சி இயக்கம். அதன் ஊழியர் தோழர் சீனிவாசராவ் சந்திப்பும் தனுஷ்கோடியை செங்கொடி இயக்கத்தின் செயல்வீரராக மாற்றியதை நிரல்படத் தொகுத்துரைக்கிறது நூலின் பகுதி.

''சவுக்கடியை நிறுத்து; சாணிப் பாலை நிறுத்து, மொட்டை மரக்காலில் கூலியை அளக்காதே'' என்ற கம்யூனிஸ்டு கட்சியின் முழக்கங்களைத் தன தாக்கிக் கொண்ட தனுஷ்கோடி மெல்ல, மெல்ல மக்கள் போராட்டங்களைக் கட்டி எழுப்பும் தலைவராகப் பரிணமிப்பதை விளக்குவதோடு, இதே காலகட்டத்தில் தீண்டாமையை ஒழிப்பதில் விவசாய சங்கத்தினர் முன்னின்று நடத்திய போராட்ட களங்களோடு, பின்னிப் பிணைந்து செல்கிறது தனுஷ்கோடியின் வாழ்க்கை. ஒரு கம்யூனிஸ்டு தன்னளவிலும் சமரசமற்ற போராளி என்பதை தனது சொந்த வாழ்விலும் அமுல்படுத்திய தனுஷ்கோடியின் திருமணம், மற்றும் தொடர் இயக்கங்களை வர்க்கம், சாதி பற்றிய உள் உறவுகளை, சொல்லிச் செல்கிறது நூலின் பிற பகுதிகள். எப்போதும் மக்கள் போராட்டங்களுக்குத் துரோகமிழைக்கும் போலி கம்யூனிஸ்டுகள் 'நூல் இழையில்' மறைக்கும் பகுதிகளை நாம் சொல்லியாக வேண்டும்.

வீரஞ்செறிந்த கீழத்தஞ்சை விவசாயிகள் இயக்கப் போராட்டத்தை, தலைமறைவு இயக்கத்தில் கம்யூனிச போராளிகள் செய்த தியாகம், அர்ப்பணிப்பை வர்க்க உணர்வு கொப்பளிக்க செறிவாக அளித்திருக்கலாம். விவசாயிகள் இயக்கத்தின் வரலாறை, அதன் வர்க்கப் போராட்ட வீச்சை இடது, வலது போலிகள் இன்னும் முழுமையாக, ஆழமாக மக்களிடம் துலக்கமாக எடுத்துக்காட்டாததன் மர்மம்தான் என்ன?

அப்படிப்பட்ட சமரசமற்ற களப் போராட்டத்தைக் காட்ட ஆரம்பத்தில் சீனிவாசராவ், களப்பால் குப்பு, கரம்பயம் சுப்பையா வரிசையில் நம்மால் சுர்ஜித்தையும், ஜோதிபாசுவையும், இந்திரஜித் குப்தாவையும் காணச் சகிக்க முடியாது. அசலை வெளிக் கொணர்ந்தால் நகல் நகைப்பிடமாகும்.

கீழத்தஞ்சையின் வர்க்கப் போராட்டத்தின் முழுப் பரிமாணத்தையும், வரலாற்றையும் மக்களிடம் கொண்டு சென்றால், பாராளுமன்றத்துக்கு உள்ளே பதவி நாற்காலியிலும், வெளியே கட்சி ஆபீசிலும் ரொக்கப் போராட்டம் நடத்திக் கொண்டிருக்கும்

**பண்ணையடிமைத்தனத்திற்கெதிரான போராட்டத்தில், அதாவது வர்க்க - சாதி ஒடுக்குமுறைக்கெதிரான போராட்டத்தில் சீனிவாசராவையும், இரணியனையும் தனுஷ்கோடியையும் இன்னும் ஆயிரக்கணக்கானோரையும் செங்கொடி தந்தது. நீலக்கொடி தராதது ஏன்?**

போலிக் கம்யூனிஸ்டுகளின் குட்டு உடைந்து விடும். 48,50 களில் போராடியவர்கள் கம்யூனிஸ்டுகள் என்றால்; தொழிலாளி வர்க்கத்தின் மீதான அடக்கு முறைக்கு எதிராக ஐம்புலன்களையும் அடக்கிக் கொண்டிருக்கும் நீங்கள் யார் என்ற கேள்வி எழுந்து விடும்.

ஆதிக்கச் சாதியினரின் அடக்கு முறைக்கு சாதி வெறிக்கு எதிராக அன்றைய கம்யூனிஸ்டு கட்சி டீக்கடையில் அமர்வோம் கோயிலில் நுழைவோம் என்று நுழைந்து காட்டியது. இன்றோ மேல் சாதியின் மனம் மாறாமல் மேற்கொண்டு எதுவும் செய்ய இயலாது என்கின்றனர் போலிக் கம்யூனிஸ்டுகள்.

டீக்கடை பெஞ்சில் உட்கார உரிமை கோரிப் போராடிய சீனிவாசராவ், தனுஷ்கோடி எங்கே? பிரதமர் நாற்காலியில் குந்த கட்சியிடம் உரிமை கோரி 'போர்க் கொடி' தூக்கும் ஜோதிபாசு எங்கே?



பி.எஸ். தனுஷ்கோடி

போலிக் கம்யூனிஸ்டுகள் மட்டுமல்ல திராவிட இயக்கங்கள், தாழ்த்தப்பட்டோர் இயக்கங்களும் கீழத்தஞ்சை விவசாயிகள் இயக்க வரலாற்றை இருட்டடிப்பு செய்வதில் ஒத்திசைந்து நிற்கிறார்கள். காலத்தின் போக்கை மாற்றிய அந்த வரலாற்றை ஓங்கி ஒலித்தால், காலந்தோறும் அதிலிருந்து ஒதுங்கி நின்ற அவர்களது வரலாறு அம்பலப்பட்டுப் போகும் என்பது தானே இவர்களின் இருட்டடிப்புக்குக் காரணம்!

''சாதி ஒடுக்குமுறைக்கெதிராக என்ன செய்தார்கள் கம்யூனிஸ்டுகள்?'' என்ற அவதூறுக்குத் தன் ரத்தத்தால் பதில் சொல்லியிருக்கிறது கீழத்தஞ்சை விவசாயிகள் இயக்கம். பண்ணையடிமைத்தனத்திற்கெதிரான போராட்டத்தில், அதாவது வர்க்க - சாதி ஒடுக்குமுறைக்கெதிரான போராட்டத்தில் சீனிவாசராவையும், இரணியனையும் தனுஷ்கோடியையும் இன்னும் ஆயிரக்கணக்கானோரையும் செங்கொடி தந்தது. நீலக்கொடி தராதது ஏன்?

கண்ணெதிரே நடந்த பண்ணையடிமைத்தனத்திற்கெதிரான போராட்டத்தில் களத்திலிறங்காமல், அரசு சன்மானங்களைப் பெறவும், அதிகாரத்தைப் பங்கு போடவும் பக்கவாட்டில் ஒதுங்கிக் கொண்டவர்களின் அரசியல் பிழைப்புவாதத்தை அறிந்து கொள்ள அன்றைய சமகால வரலாற்றைப் புரட்டிப் பார்க்கக் கோருகிறது கீழத்தஞ்சை விவசாயிகள் இயக்கம்.

இதை வலது இடது கம்யூனிஸ்டுகள் இன்று கோர மாட்டார்கள்; கிளற மாட்டார்கள். அன்றைய விவசாயிகள் இயக்கம் அவர்களது தொண்டையில் முள்ளாய் சிக்கியிருக்கிறது. அந்த இறந்தகாலத்தைத் தட்டியெழுப்பினால் அது இவர்களது நிகழ்காலத்தைக் கொன்று விடக்கூடிய ஆபத்து இருக்கிறது.

எனினும் வரலாற்றை மாற்றிய மைத்ததற்காக, வரலாற்றைத் தெரிந்து கொள்ள விரும்பும் வாசகர்கள் இந்த 'ஆபத்தை' விலை கொடுத்து வாங்கலாம்.

• சுடர்விழி

| | |
|---|---|
| நூல் வெளியீடு | : சவுத் விஷன் |
| நூல் ஆசிரியர் | : என். இராமகிருஷ்ணன் |
| விலை | : ரூ. 30.00 |
| கிடைக்குமிடம் | : கீழைக்காற்று வெளியீட்டகம் 10, அவுலியா சாகிபு தெரு, எல்லீசு சாலை, சென்னை - 2. |

ஆசிரியரும் வெளியிடுபவரும்: வி. வல்லபேசன், 3 செகந்நாதபுரம், நான்காவது தெரு, சேத்துப்பட்டு, சென்னை - 600 031.
அச்சிடுபவர்: எழில் பிரிண்ட்ஸ், 110, இரண்டாவது மாடி, 63, ஆற்காடு சாலை, சென்னை - 600 024.

www.padippakam.com



REGISTERTED WITH THE REGISTAAR OF NEWS PAPER
FOR INDIA UNDER NO. 42648/87

# என்னுடைய நிலம்

**ஆந்திரா, கர்நாடகம், மராட்டியம் – மாநிலங்களில் கடந்த சில மாதங்களாக, நூற்றுக் கணக்கான பருத்தி விவசாயிகள் தற்கொலை செய்து வருகின்றனர். பூச்சியைக் கொல்லத் தவறிய மருந்துகள் விவசாயிகளைக் கொல்வதில் தவறவில்லை. விளையாத பருத்திக்காக வாங்கிய கடனுக்கு விவசாயிகள் உயிர் விலை போனது. நாட்டையே விற்று வரும் தரகர்களுக்காக விவசாயிகள் ஏன் சாகவேண்டும்?**

**• கீழே மராட்டிய மாநிலம், மராத்வாடா பகுதியில் தற்கொலை செய்து கொண்ட ஒரு விவசாயியின் குடும்பத்தினர்.**



அய்ம்பது ஆண்டுகளுக்கு முன்பு
ஓ வாரங்கலே,
நீ வீரஞ்செறிந்திருந்தாய்.
தெலிங்கானாப் பீடபூமியில்
உன் கரிசல் மேடுகள்
காவியம் படைத்தன.

அன்று நீ
சாதனைகளால் தலைநிமிர்ந்தபோது
நாங்கள் குதூகலித்தோம்.
அன்று நீ
முழக்கிய முழக்கங்கள்
எல்லைக் கோடுகளை
எரியூட்டிப் பரவியது.

பந்தாகியின் பிணம்
'மாபூமி' என்று
கர்ஜித்தபோது
ஜாகீர்தார்களும்
தேஷ்முக்குகளும்
உடைமைகளை விட்டே
ஓடி ஒளிந்து கொண்டார்கள்.
அய்லம்மாவும் -
தொட்டி குமரய்யாவும்
உன் தொட்டிலில் வளர்ந்தவர்கள்.

'வெட்டி'முறை விதித்தவனை
நீ வெட்டி வீழ்த்தியபோது
பத்துலட்சம் ஏக்கர் நிலத்தை
திரும்பவும் உனதாக்கிக் கொண்டாய்.
தன்னேரில்லாத
உன் நெஞ்சுரத்தைச்
சொல்லிச் சொல்லி
இன்றும்கூட
நாங்கள் கர்வப்படுவதுண்டு.

நிஜாமின்
ரஜாக்கர் குண்டர்களையும்
ராணுவப் படையையும்
உன் கவண்கற்கள்
விரட்டியடித்த போது
எங்கள் விழிகள்
பெருமிதத்தில் நனைந்தன.

தெருவில் -
தடியோடும்
மிளகாய்ப் பொடியோடும்
போலீசுக்காரன்களுக்காகக்
காத்துக் கிடந்தனர்
கிழவிகள்.

அய்ம்பத்தாயிரம் பேர் கொண்ட
எதிரிப் படைகள்
உன்னை முற்றுகையிட்டபோது
ஏளனச் சிரிப்புடன் நீ
வேட்டைத் துப்பாக்கியைக் காட்டியது
இன்றும் சிலிர்க்கிறது.

ஏ போர்ப் பூமியே,
கையகப்படுத்தப்பட்ட
உன் நிலங்களை
மீண்டும் நீ
கைப்பற்றிக் கொண்டபோது
அசப்ஜாஹி பரம்பரை
அஸ்தமித்தது.

எங்களைத் தாலாட்டிய
உன் ஒவ்வொரு
கம்பீர அடியின் திசைகளிலும்
புது உலகம் விரிந்தது...
சமஸ்தானம் சரிந்தது.
பண்ணையின் சவுக்குகளை
கொத்தடிமைகள்
பிடுங்கிக் கொண்டபோது
புதிய இலக்கியங்கள் புலர்ந்தன.

அய்ந்தாண்டுகளாய்
விழித்திருந்தது போர்க்களம்...
ஆம்.
விடியல் வெளிச்சத்தால் நீயும்
அஸ்தமன அச்சத்தால் 'அவர்களும்'
அய்ந்தாண்டுகள் உறங்கவில்லை.

ஓ வாரங்கலே,
அய்ம்பது ஆண்டுகளுக்கு முன்பு
நீ வீரஞ்செறிந்திருந்தாய்.

இப்போதோ
அறுவடைக் காலத்தில்
அய்ம்பத்தாறு விவசாயிகளைக்
காவு கொடுத்து விட்டாய்.

உன் பிள்ளைகளுக்குப்
போராட்டப் பால் புகட்டிய நீ,
இன்று வறுமை தாங்காது
பூச்சி மருந்து
புகட்டிக் கொண்டிருக்கிறாய்.

ஆம்...

நீ -
மீட்டெடுத்த
உன் கரிசல் மேடுகளில்
மீண்டும் தேஷ்முக்குகள்
மாற்றுப் பெயர்களில்...
பொறுக்க மாட்டோம்...
பொறுக்கவே மாட்டோம்.

ஏ தெலிங்கானாத் தாயே,
கண்ணீரைத் துடைத்துக் கொள்...
உன் எஞ்சிய புதல்வர்கள்
மீண்டும் எழுகிறோம்.
புதிய ஆயுதங்களுடன்
புறப்படுகிறோம் -
மீண்டும் உன்னை
பிரசித்திபெறச் செய்வதற்காக.

• மதிவாணன்

படிப்பகம்